# பரலோக வாழ்வு



சொ.நீதி மாணிக்கம்

# பரலோக வாழ்வு



இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான புனித தோமையார்
கி.பி. 51 முதல் 71 வரை சென்னையில் வாழ்ந்தார்.
நமது தமிழகத்தில் பரலோகத்திற்கு போவதற்கான வழிவகைகளை
தோமையார் போதித்தார். பரலோகம் அடைவதற்கு
நாம் கடவுள் நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும். உலகிலே பாவமற்ற
புனித வாழ்வு வாழ வேண்டும். ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.
புனித அன்னை தெரசா அவர்கள் வாழ்ந்து காட்டினார்கள்.

இந்நூல் பரலோகத்திற்கு போவதற்கான வழிமுறைகளை நமக்கு வழிகாட்டுகிறது

**பரலோகத்தில் நாம் கடவுளை முகமுகமாக தரிசிக்கப் போகிறோம்.
தேவ மாதாவை தரிசிக்கப் போகிறோம்.
சகல புனிதர்கள் திருக் கூட்டத்தில் தோழமை கொண்டு வாழப் போகிறோம்.
புனித தோமையார், புனித சவேரியார், புனித அந்தோணியாரை நாம்
பார்க்கப் போகிறோம். பேசப் போகிறோம். விவரிக்க முடியாத மகிழ்ச்சி**




கத்தோலிக்கத் திருச்சபையை

கடவுளை நோக்கி வழி நடத்துபவர்

**Jude Paulraj, A.**
**Bishop of Palayamkottai**

## Catholic Bishop's House

1331-W, John Paul Nagar
K.T.C. Nagar,
Maharaja Nagar (Post)
Tirunelveli - 627 011
Tamil Nadu
INDIA
(Courier Address)

Post Box No. 108
Palayamkottai - 627 002
Tamil Nadu
INDIA
(Postal Address)

தேதி : *1.1.2018*



அன்புடையீர்,

ஆண்டவரின் அமைதி உங்களோடு இருப்பதாக!

இவ்வுலகில் பல மனிதர்கள் வெறும் வழிகாட்டிகளாக வாழ விரும்புகிறார்கள். ஒரு சிலரே அதை வாழ்ந்து காட்டுபவர்களாகவும் இருக்கின்றார்கள். மதிப்பிற்குரிய ஓய்வு பெற்ற ஆசிரியர் நீதிமாணிக்கம் அவர்கள் கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்கு வெறும் வழிகாட்டியாக மட்டுமல்ல; அதை வாழ்ந்து காட்ட இந்தப் புத்தகத்தைப் படைத்துள்ளார்கள்.

**தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.** (யோவான் 3:16). அழியா வாழ்வு அல்லது நிலை வாழ்வு என்பதுதான் கிறிஸ்தவ வாழ்வின் இலக்கும் இலட்சியமும் ஆகும். நாம் மண்ணக மாந்தர்களாக வாழ்ந்தாலும் **விண்ணகமே நமது தாய்வீடு** என்பதை இந்நூல் திறம்பட எடுத்தியம்புகிறது. இப்புத்தகம் முற்றிலும் விவிலிய கருத்துக்களை உள்வாங்கி அதை ஒவ்வொருவரும் தனிப்பட்ட வாழ்வில் செயல்படுத்த ஊக்குவிக்கின்றது.

இந்தப் புத்தகத்தின் வழியாக தன்னுடைய ஆழமான இறை நம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ள ஆசிரியர் நீதிமாணிக்கம் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். நமது விண்ணக வாழ்க்கைப் பயணத்தில் உள்ளத்தில் தூய்மையையும் செயலில் உண்மையையும் கொண்ட மனிதர்களாக வாழ்ந்து, விண்ணகத்தில் இறைவனோடும் புனிதர்கள் திருக்கூட்டத்தோடும் சங்கமமாக ஆசிக்கிறேன். செபிக்கிறேன்.

A. JUDE PAULRAJ BISHOP OF PALAYAMKOTTAI

கிறிஸ்துவின் தோழமையில்,

**✝ மேதகு ஆ. ஜூடு பால்ராஜ்**
**பாளையங்கோட்டை மறைமாவட்ட ஆயர்**

Tel. : 0091 462 2522114; Fax: 0091 462 2522042; E-mail : bishop@palayamkottaidiocese.org
Website : www.palayamkottaidiocese.org



அருள்திரு. **P. அமல்ராஜ்** அடிகளார்
பாளையங்கோட்டை மறைமாவட்டம்

## வாழ்த்துரை

இறைமக்களுக்கு இறைவார்த்தையின் மீது ஆர்வத்தை ஊட்டியது இரண்டாம் வத்திக்கான் சங்கம். இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப் பிறகு தான் இறைமக்கள் திருநூலை அதிக ஆர்வத்துடன் படிக்க ஆரம்பித்தனர். கழுகுமலையில் தலைமை ஆசிரியராக இருந்த திரு.நீதிமாணிக்கமும், ஐம்பது வருடங்களுக்கு முன் திருநூலைப் படிக்கத் தொடங்கினார். திருநூல், நிலை வாழ்வை அடைய வழித்துணையாக இருக்கிறது என்பதை உணர்ந்தார். அன்று முதல் நிலை வாழ்வை அடைய ஆவலாய்ப் பற்றி எரிந்தார். தான் மாத்திரம் நிலை வாழ்வை அடைந்தால் போதாது; எல்லா மனிதரும் அதை அடைய வேண்டும் என்ற தணியாத தாகம் கொண்டார். வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அதைப் பற்றிப் பேசினார்.

நிலை வாழ்வைப் பற்றிய திருநூல் வசனங்களை சேகரிக்கத் தொடங்கினார். அவற்றை அச்சிட்டு வழங்கினால், பயனுள்ளதாயிருக்குமே என்ற எண்ணத்தில் இப்புத்தகத்தை எழுதி வெளியிடுகிறார்.

எல்லாம் வல்ல இறைவன் நம் பாவங்களை மன்னித்து நம்மை நித்திய (நிலை) வாழ்வுக்கு நடத்திச் செல்வாராக!

எல்லோரும் இந்நூலை வாசித்துத் தியானித்து
நிலை வாழ்வுப் பாதையில் முன்னேறிச் செல்ல முயல்வோமாக!

ஆசீர்

அருள்திரு. **P. அமல்ராஜ்** அடிகளார்
பாளையங்கோட்டை மறைமாவட்டம்



CHANCELLOR
DIOCESE OF PALAYAMKOTTAI

**CATHOLIC BISHOP'S HOUSE**
**Post Box No.108,**
**Palayamkottai - 627 002.**
**Tamil Nadu**
**India.**



14.02.2018

## அருட்பணி. அந்தோனி குரூஸ்

**பரலோக வாழ்வு** என்ற புத்தகத்தை ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர் திரு.நீதிமாணிக்கம் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். கடவுள் நம்பிக்கை கொண்டு தூய வாழ்வு வாழ்பவர்களை, கடவுள் நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்கிறார் என்ற தனது ஆழமான விசுவாசத்தை புத்தகமாக வடித்திருக்கிறார்கள்.

நான் கழுகுமலை பங்குத்தந்தையாக 2003-2007 ஆண்டுகளில் பணியாற்றியபோது, இவர் புனித சவேரியார் அன்பியப் பொறுப்பாளராகப் பணியாற்றினார். ஆண்டவரின் வாழ்வு தரும் இறைவார்த்தையை பயன்படுத்தி செபிக்கவும், மன்றாடவும் மக்களுக்குப் பயிற்சியளித்தார். அர்த்தமுள்ள முறையில் பல்வேறு அருட்சாதனக் கொண்டாட்டங்களில் பங்கேற்று உயிரளிக்கும் இறைவார்த்தையை வாழ்வாக்க விழைந்தார்.

இப்புத்தகம் இவரது ஆழமான விசுவாச வாழ்விற்குச் சான்றாகத் திகழ்கின்றது. இப்புத்தகத்தை நீங்களும் வாங்கி வாசியுங்கள். விண்ணக வாழ்வை சுவாசியுங்கள். ஆசிரியர் நீதி மாணிக்கம் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களும், செபங்களும்.

இறைப்பணியில்
**அருட்பணி. அந்தோனி குரூஸ்**
செயலக முதல்வர்,
பாளையங்கோட்டை மறைமாவட்டம்

Tel: Office 0462 - 2576677, Fax: 91-462-2580067

அருட்திரு. **அலோசியஸ் துரைராஜ்**
பங்குத் தந்தை & வட்டார அதிபர்,
கோவில்பட்டி.



**கி**றிஸ்து இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே,

நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மை முழுமையாய் அன்பு செய்கிறார். நாம் அனைவருமே முடிவில்லா பேரின்ப வாழ்வு பெற இறைவன் விரும்புகிறார்.

கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நம்பிக்கையும் அதன் ஒட்டு மொத்த இலக்கும் விண்ணக வாழ்வாகவே இருக்கிறது.

**இக்கூடாரத்தில் குடியிருக்கும் நாம் விண்ணுலகு சார்ந்த நம் வீட்டைப் பெற்றுக் கொள்ள ஏங்கிப் பெருமூச்சு விடுகின்றோம் ( 2 கொரி 5:2)**

இயேசு கூறிய உவமைகளில் பல விண்ணக வாழ்வு பற்றியதாகவே இருந்தன. லூக்கா நற்செய்தியின் செல்வரும் இலாசரும் உவமையில் இயேசு பரலோகத்தை ஆபிரகாமின் மடி எனக் குறிப்பிடுகிறார். அந்த ஏழை இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய்ச் சேர்த்தார்கள். (லூக்கா 16:22)

மண்ணுலகில் வாழும் நாம், மண்ணகத்திலும் விண்ணக மக்களாய் வாழும் வழியை இயேசு நமக்குக் கற்பிக்கிறார். **நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள்...... அவர்களுக்கு நன்மை செய்யுங்கள் ......... நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள் (லூக் 6:35)**

நாம் அனைவருமே விண்ணகம் செல்ல விரும்புகிறோம். ஆனால் நாம் எவருமே இறப்பதை விரும்பவதில்லை. நாம் பரலோக வாழ்வை விரும்புகிறோம். ஆனால் நாம் அதற்கான செயல்பாடுகளைச் செய்வதில்லை. துன்பங்கள் நம்மை நெருங்கும் போது சோர்ந்து போகிறோம். இறப்பைக் கண்டு பயப்படுகிறோம்.

நாம் அனைவருமே விண்ணகம் செல்ல விரும்புகிறோம். ஆனால் நாம் எவருமே இறப்பதை விரும்பவதில்லை. நாம் பரலோக வாழ்வை விரும்புகிறோம். ஆனால் நாம் அதற்கான செயல்பாடுகளைச் செய்வதில்லை. துன்பங்கள் நம்மை நெருங்கும் போது சோர்ந்து போகிறோம். இறப்பைக் கண்டு பயப்படுகிறோம்.

இவ்வுலகத் துன்பங்களை இறைநம்பிக்கையோடு அனுபவித்து அழியா வாழ்வு பெற இறை இயேசுவின் வாழ்வும், புனிதர்களின் வாழ்வும் நமக்குப் பாடமாக அமைகின்றன.

இறை நம்பிக்கையும், விண்ணக வாழ்வும் பெற நாம் செய்ய வேண்டிய செயல்களைப் பற்றி நம்மோடு பேசவும் நம் வாழ்வை மாற்றவும் திருவிவிலியம் நமக்கு அழைப்பு விடுக்கிறது.

இறைவன் நம்மீது கொண்டுள்ள அளவற்ற அன்பையும் நற்கருணையால் அவர் நமக்குத் தரும் அழியா வாழ்வையும் அறிந்து புனிதர்களின் வழி நடந்து நிலை வாழ்வு பெற **பரலோக வாழ்வு** எனும் இந்நூல் வழிகாட்டியாக அமைகிறது. இந்நூலினை வாசிக்கும் அனைவரும் தம் வாழ்வை பரலோக வாழ்விற்கு அழைத்துச் செல்லும் கருவியாக இதனைப் பயன்படுத்தி இந்நூலில் சொல்லப்பட்ட இறைவழியில் பயணம் செய்து முடிவில்லா விண்ணக வாழ்வு பெற செபிக்கிறேன்.

நம் ஆண்டவர் இயேசு கற்றுக் கொடுத்த செபத்தில் **விண்ணகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே** என்றுதான் தந்தையை, தந்தை வீற்றிருக்கும் விண்ணகத்தை முதன்மையாகக் கொண்டு செபிக்க அழைக்கிறார். எனவே இந்தப் புத்தகத்தை வாசிப்போம். செபிப்போம். விண்ணக வாழ்வைப் பெற்றுக் கொள்வோம்.

இந்நூலை செபித்தலிலும், இறைவல்லமையிலும் எழுதிய திருமிகு. சொ.நீதிமாணிக்கம், நூல் ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஓய்வு. கழுகுமலை அவர்களை அன்புடனும், மகிழ்ச்சியுடனும் பாராட்டுகின்றேன்.

நன்றி !

*அன்பும் ஆசீரும்*

அருட்திரு. **அலோசியஸ் துரைராஜ்**
பங்குத் தந்தை & வட்டார அதிபர்,
கோவில்பட்டி.



## அருட்திரு ஜோசப் கென்னடி

**பங்குத்தந்தை**
தூய லூர்து அன்னை ஆலயம்
கழுகுமலை - 628 552
தூத்துக்குடி மாவட்டம்.

“மனந்திரும்புங்கள்; பரலோகம் நெருங்கி வருகிறது” என்கிற கூக்குரல் பெந்தே கோஸ்தே போதகர்களுக்கும், கத்தோலிக்க நற்செய்திப் பணியாளர்களுக்கும் சொந்தமானது என்று ஒதுக்கி விட்டோம்.

’இறந்தோரின் உயிர்ப்பையும் வரவிருக்கும் மறு உலக வாழ்வையும் எதிர்பார்க்கின்றேன்‘ என்று நம்பிக்கை அறிக்கையில் சொல்கின்றோம். ஆனால், மனந்திரும்புதலும், பரலோக வாழ்வும் தவக்காலத்தில் மட்டும், அதுவும் ஒரு சில இடங்களில் மட்டுமே பேசப்படுகிற செய்தியாக மாறிப் போனது மிகவும் கவலைக்குரிய ஒன்று.

மண்ணக, விண்ணக வாழ்வு பற்றிய போதனைகளில், சமநிலை வேண்டும். சம நிலை தவறும் போது மக்களின் வாழ்வும், வளர்ச்சியும் சமநிலை அற்றுப் போகும். கடவுளின் அடியவராய், திருச்சபையின் குரலாய், காலத்தின் அறிகுறியாய் திரு.நீதிமாணிக்கம் அவர்கள் பரலோகம் பற்றி ஓங்கி உரைத்திருக்கிறார்.

முதுமைக்குரிய ஞானத்தோடும், 50 ஆண்டுகள் வாழ்வின் அனுபவத்தோடும் உண்மை என்று தான் கண்டுணர்ந்ததை அறிவிக்காவிடில் ஐயோகேடு என்ற தாகத்தோடு இந்த நூலை எழுதியிருக்கிறார். ஓய்வு எடுக்க வேண்டிய வயதில் ஓயாமல் உழைத்து கடும் சிரமத்துக்கிடையே இந்நூலை நமக்குத் தந்திருக்கிறார்.

கழுகுமலை பங்கு இவரால் பெருமையும், பேருவகையும் அடைகிறது. கரம் கூப்பி வாழ்த்துகின்றோம்.

ஒவ்வொரு கிறிஸ்தவரும் கட்டாயம் வைதிருக்க வேண்டிய நூல் இது.

**அருட்திரு ஜோசப் கென்னடி**
**பங்குத்தந்தை**
**கழுகுமலை.**

அருள் சகோதரி **அருள்மேரி விமலா**

**இந்நூலை வாசிக்கும் அனைவருக்கும்**
**அன்பான வணக்கத்தையும், வாழ்த்துக்களையும்**
**தெரிவித்துக் கொள்கிறேன்.**



" தந்தையரை மதிப்போர், பாவங்களுக்கு கழுவாய் தேடிக் கொள்கின்றனர்; அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போருக்கு ஒப்பாவார்; "
சீராக் 3 : 3,4

இறைவன் நமக்குக் கொடையாகத் தருகின்ற நிலைவாழ்வைப் பற்றி, எளிமையான நடையில் அழகாக எழுதியுள்ள, என் அப்பாவை மூவொரு கடவுளாகிய இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டுகிறேன்.

எங்கள் பெற்றோர்களின் இறைபக்தி விசுவாசம், இறைவார்த்தையின் மீதுள்ள ஆர்வம், இறைவனின் விருப்பத்தைத் தங்களது அன்றாட வாழ்வில் நிறைவேற்றி வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களது உயர்ந்த வாழ்வை நினைத்து இறைவன் இயேசு அவர்கள் மீது பொழிந்துள்ள அருட் கொடைகளுக்காக நன்றி செலுத்துகிறேன். **உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே முடிவில்லா வாழ்வு - (யோவான் 17:3)** என்ற நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தையை வாழ்வில் நாம் கடைபிடித்து வாழ்வோம்.

**நீங்கள் மிகுந்த கனி தந்து என் சீடராக விளங்குவதே என் தந்தைக்கு மகிமை - யோவான் 15:8** என்ற இறைமகன் இயேசுவின் வார்த்தையை தங்கள் வாழ்வில் வாழ்ந்து இறைவனை மகிமைப்படுத்தி வரும் என் பெற்றோர்கள் இயேசுகிறிஸ்துவில் என்றென்றும் வாழ வாழ்த்துகிறேன்.

இயேசுவின் பணியில்
அருள் சகோதரி **அருள்மேரி விமலா**
**M.E. Sisters**
**Mission Catholique**
**P.B. 58, 317, Mananjary, Madagascar**



திருமதி. **மை.அமலி அமலதாஸ்**
பாளையங்கோட்டை மறைமாவட்ட
பெண்கள் பணிக்குழுச் செயலர்
கோவில்பட்டி

இறைமகன் இயேசுகிறிஸ்துவில் அன்பானவர்களே,
**அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலைவாழ்வு பெறுவர்.**
**– லூக்கா 18:15**

எங்களின் அன்பு அப்பா உயர்திரு. சொ.நீதிமாணிக்கம் அவர்கள் கழுகுமலை பள்ளியில் தலைமை ஆசிரியராகவும், மேலும் பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டபோதும், அவர்கள் பேச்சிலும், மூச்சிலும் நிலை வாழ்வு பற்றிய கருத்துக்களே நிறைந்திருந்தன. பணிநிறைவு பெற்றபின், கழுகுமலைப் பங்கின் சவேரியார் அன்பியப் பொறுப்பாளராக சிறப்பாகப் பல வருடங்கள் அன்பியத்தை வழிநடத்தினார்கள். அவர்கள் ஜெபிக்கும் போதும், பல நிலைகளில் எங்களிடம் பேசிக் கொண்டிருக்கும் போதும் சொல்லும் இறைவார்த்தைகள் –

**பரலோகமே நமது தாய் நாடு (தாய் வீடு)**
**பரலோகமே நமது நிரந்தரக் குடியிருப்பு**
**We are the Citizens of Heaven** – பிலிப்பியர் 3:20

இந்த வார்த்தைகள் என் மனதில் ஆழமாய்ப் பதிந்த வார்த்தைகள். நான் தவறுகள் இழைக்க எண்ணுகையிலே, அதைப் பலமுறை தடுத்து நிறுத்தி என்னை நல்வழிப்படுத்திய வார்த்தைகள். எனது தந்தை இந்த வார்த்தைகளை அடிக்கடி சொல்லி பிள்ளைகளாகிய எங்களை, நல்வழியில் நடத்தி வந்ததை நான் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்.

நாங்கள் எழுவராகப் பிறந்தோம். ஏழு பிள்ளைகளிலும், எந்தப் பிள்ளை கஷ்டப்படுகிறதோ அந்தப் பிள்ளைக்கு உதவி செய்யும் குணம் கொண்டவர் என் தந்தை.

எங்கள் தாத்தா பெருமைக்குரிய பெரு வணிகர் தெய்வத்திரு. சொர்ணமாணிக்கம் – அய்யம்மை லூர்தம்மாள் (பாடகர்குழு & தற்போதுள்ள கழுகுமலை ஆலயம் கட்டுவதற்காக மண் சுமந்தவர்) அருள்மேரி ஸ்டோர்ஸ் என்ற பிரபல கடையின் உரிமையாளர். எங்கள்

தாத்தா - அய்யம்மை ஏழை எளியவர் மேல் இரக்கம் கொண்டு, வாரிக் கொடுக்கும் குணம் கொண்டவர்கள். அவர்களிடம் பிறர்க்குக் கொடுக்கும் குணம் பெற்றேன்.

நாங்கள் ஏழுபேர் சகோதர சகோதரிகள். 5 பெண் மக்கள், 2 ஆண் மக்கள். அதில் நான் ஆறாவது. எனது மூத்த அக்கா அருட்சகோதரி அருள்மேரி விமலா அவர்களும், பொதுநிலை-யினராகிய நானும் ''நற்செய்திப் பணிதான் சிறந்த பணி'' என்று கண்டுணர்ந்து, “ஆன்மாக்களை இறைவனிடம் கொண்டு செல்லும் மேலான பணியை” ஆற்றுவதற்கு, இன்று வரை எங்களை அர்ப்பணித்துச் செயல்படுகிறோம் என்றால், அது எங்கள் அப்பா அடிக்கடி கூறும் பரலோகமே நமது தாய்நாடு (தாய்வீடு) என்ற வரிகள் காட்டிய வழியின் அடிப்படையில் தான்.

என் அம்மா திருமதி மரியலீலாவதி கமலம், பெயருக்கேற்ப அன்னை மரியாவைப் போல வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். இப்போது அவர்களுக்கு வயது எண்பத்து மூன்று. ஒருநாள் கூட ஜெபமாலை சொல்லவும், மாதா பாடல்களைப் பாடுவதையும் மறக்காத என் அருமை அம்மாவைப் பற்றி நினைக்கையிலே, எனது மனம் மிகவும் மகிழ்ச்சியடைகிறது. அப்பாவுக்காகவும், தான் பெற்ற பிள்ளைகளுக்காகவும் தன்னையே அர்ப்பணித்த தியாகச் செம்மல் எங்கள் அம்மா. அவர்களின் பொறுமையும், அன்பும், தியாகமும் தான் எங்களை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளது.

இந்த 2018 ஆம் ஆண்டில் (மணிவிழா) அவர்கள் திருமணம் முடிந்து அறுபது வருடங்கள் நிறைவாகிறது. எங்களுக்கு 25 ஆண்டு வெள்ளிவிழா. இந்த இனிய மகிழ்ச்சியான ஆண்டிலே **“பரலோக வாழ்வு”** என்ற என் அப்பா எழுதிய இப்புத்தகம் வெளியாவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நம் ஆண்டவர் நமக்கு அருளும் நிலைவாழ்வை இவ்வுலகிலே எங்களுக்கு வழங்கிய, வாழ்ந்து காட்டிய, எங்களையும் வாழ வைத்த, என் அம்மாவையும், அப்பாவையும் நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

இந்த அருமையான **“பரலோக வாழ்வு”** புத்தகத்தை எழுதத் தூண்டிய எல்லாம் வல்ல இறைவனை நன்றியுடன் போற்றுகிறேன்.

என் அருமைச் சகோதர சகோதரிகள், மருமக்கள், பேரக் குழந்தைகள், கொள்ளுப் பேரக் குழந்தைகள் அனைவரும் வாழ்த்துகிறார்கள்.


**“நாம் உண்மையான இறைவனோடும் அவர் மகன் இயேசு கிறிஸ்துவோடும் இணைந்து வாழ்கிறோம். இவரே உண்மைக் கடவுள். இவரே நிலைவாழ்வு.”** - 1 யோவான் 5:20

இயேசு கிறிஸ்துவில் அன்புடன்,

**மை. அமலி அமலதாஸ்**

HP, ஞானமலர் பல்க்,

926-E, மெயின் ரோடு, கோவில்பட்டி.



திருமணப் பொன்விழா கண்ட
S. நீதிமாணிக்கம் - மரியலீலாவதி கமலம் தம்பதியருக்கு
மேதகு ஆயர் எட்வர்டு பிரான்சிஸ் அவர்கள் பாப்பரசர் அவர்களின்
பொன்விழா வாழ்த்துச் சான்றிதழ் வழங்கிய போது



ஐம்பது ஆண்டுத் திருமண நிறைவு விழா கண்ட
S. நீதிமாணிக்கம் - மரியலீலாவதி கமலம்
மற்றும் கழுகுமலை விசுவாசிகளுடன்
அருட் தந்தை அந்தோணி குரூஸ் அடிகளார்

# என்னுரை

**உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலை வாழ்வு**

–யோவான் 17:3

உலக வாழ்வில் பலவித துன்பங்கள், துயரங்கள், வியாதிகள், கவலைகள் நம்மை ஆட்டிப்படைக்கின்றன. இவற்றையெல்லாம் இயேசு ஆண்டவருடன் நாம் இணைந்து வாழ்ந்து, ஆண்டவரிடம் ஒப்புக்கொடுக்கும் போது ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, சகல தீவினைகளிலிருந்தும் நம்மைக் காப்பாற்றுகிறார். ஏனென்றால் சகல துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணம் நமது பாவங்களே. துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று பாவம் செய்யாமல் பரிசுத்தமாக வாழ்வோமாக!

பாளையங்கோட்டை மறை மாவட்டம் கழுகுமலையில் பங்குத் தந்தையாக அருள் தந்தை. P.அமல்ராஜ் அடிகளார் அவர்கள் பணியாற்றினார்கள். கழுகுமலையிலுள்ள அருட்சகோதரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை பைபிள் வகுப்பு, ஞானத்தந்தை அவர்கள் நடத்தினார்கள். ஆசிரியர்களும் அருள்தந்தை அவர்களும் கடவுள் வார்த்தையை கலந்து ஆய்வு செய்தோம்.

ஒரு நாள் இரவு 9.30 மணி வரை பைபிள் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. மின்சாரம் இல்லாதிருந்தாலும், வகுப்பை நிறைவு செய்ய யாருக்கும் மனம் இல்லாத காரணத்தால் பெட்ரோமாக்ஸ் விளக்கு வரவழைக்கப்பட்டு தொடர்ந்து நீண்ட நேரம் வகுப்பு நடந்தது. அந்த அளவுக்கு அனைவரும் மிகுந்த ஆர்வத்துடன் விவிலிய வகுப்பில் கலந்து கொண்டோம். இந்த பைபிள் வகுப்பு 1969 முதல் நடந்தது.

நான் தொடர்ந்து 50 ஆண்டுகள் பைபிள் படித்து வருகிறேன். நற்செய்தி நூல் எதற்காக எழுதப்பட்டது என்ற கேள்விக்கு விடைகாண ஆண்டவரிடம் செபித்தேன் பைபிளில் பதில் கிடைத்தது.



**இயேசுவே, இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் (பரலோக) வாழ்வு பெறுவதற்காகவுமே, இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன** என்று யோவான் கூறுகிறார். (யோவான் 20:31)

நாம் மோட்ச வாழ்வைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே நற்செய்திநூல் எழுதப்பட்டுள்ளது. நற்செய்திநூல் நமக்கு பரலோகத்திற்கு வழிகாட்டும் புத்தகமாகும். இயேசு ஆண்டவர் தம் போதனைகளையும், செயல்பாடுகளையும், அற்புதங்களையும், தம் சீடர்கள் முன்னிலையில் செய்தார். நமது மோட்ச வாழ்வுக்கு ஆண்டவர் வழிகாட்டுகிறார். இயேசு ஆண்டவர் செய்தவை வேறு பலவும் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும் புத்தகங்களை உலகமே கொள்ளாது எனக் கருதுகிறேன் என்று யோவான் கூறுகிறார். ஆகவே, நாம் பரலோக வாழ்வுக்குச்செல்ல பைபிள் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. இயேசு ஆண்டவர் நம்மை மோட்ச வாழ்வுக்கு அழைத்துச் செல்லவே உலகிற்கு வந்தார். -யோவான் 20:30 ; 21:24-25

எல்லாம் வல்ல இறைவன் நாம் மோட்ச வாழ்வை அடைவதற்காகவே, மனிதர்களாக நம்மைப் படைத்தார். பரலோக வாழ்வை அடைவதற்காகவே, உலகில் நாம் மனிதர்களாகப் பிறந்துள்ளோம்; நாம் உலகில் புனிதர்களாக வாழ வேண்டும்.

**“பரலோக வாழ்வு”** புத்தகத்திற்கு ஆசியுரை வழங்கிய மேதகு ஆயர் அவர்களுக்கும் அருள் தந்தையர்களுக்கும் வாழ்த்துரை வழங்கிய எனது மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை சமர்ப்பிக்கிறேன்.

**இயேசு வாழ்க** **மரியே வாழ்க**

**சொ.நீதிமாணிக்கம்**
தலைமை ஆசிரியர் ஓய்வு, கழுகுமலை
கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
அலைபேசி : 94887 36010



## இரண்டு குற்றவாளிகளின் மத்தியில் சிலுவையில் இயேசு ஆண்டவர்



சிலுவையில் கொல்லப்பட்ட இயேசு, “ தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை.” என்றார்.

லூக்கா 23:34

மனம் மாறிய நல்ல குற்றவாளியிடம் இயேசு, “ நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில்(மோட்ச வீட்டில்) இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்” என்றார்.

லூக்கா 23:43

இயேசு ஆண்டவருடைய சிலுவைப் பாடுகளில் பெண்களும் பங்கு கொண்டனர். சிலுவையின் அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும் நின்று கொண்டிருந்தனர்.

யோவான் 19:25

# பரலோக வாழ்வு

ஆசிரியர் : **சொ.நீதிமாணிக்கம்**
தலைமை ஆசிரியர் ஓய்வு

**நீ.மரிய லீலாவதி கமலம்**
ஆசிரியை ஓய்வு

அலைபேசி : 9488736010

18, திருமாளிகைத் தெரு
கழுகுமலை - 628 552
தூத்துக்குடி மாவட்டம்.

உரிமை வெளியீட்டாளர் : **எம்.மைக்கேல் அமலதாஸ்**
எம்.ஏ., எம்.பில்.
**என். அமலி அமலதாஸ்**
எம்.எஸ்.சி., எம்.பில்.

புத்தகம் கிடைக்குமிடம் : **ஞானமலர் பெட்ரோல் பல்க்**
R.C சர்ச் அருகில், கோவில்பட்டி - 628 501
தூத்துக்குடி மாவட்டம்,
தமிழ்நாடு, இந்தியா.
தொலைபேசி : 04632 224917
அலைபேசி : 98421 421 41
98423 42343
96982 421 41

விலை ரூ. **30/-**

# பொருளடக்கம்


| வ. எண். | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1. | பரலோக வாழ்வாகிய நிலை வாழ்வும் இயேசுவின் மீது நம்பிக்கையும் | 5 |
| 2. | இயேசுவும் கத்தோலிக்கத் திருச்சபையும் | 11 |
| 3. | நாம் பரலோக வாழ்வு பெற்று மகிழ நற்செய்திநூல் சிறந்த வழிகாட்டி | 16 |
| 4. | நாம் பரலோக வாழ்வு பெற வழி ஏழைகளுக்கு உதவி செய்வதே | 17 |
| 5. | உலக மக்கள் அனைவருக்கும் இறுதித் தீர்ப்பு | 20 |
| 6. | நாம் பரலோக வாழ்வில் வானதூதர்களைப் போல் காட்சியளிப்போம் | 22 |
| 7. | நமது மோட்ச வாழ்வில் நாம் சூரியனைப்போல் ஒளிவீசிப் பிரகாசிப்போம் | 23 |
| 8. | திருப்பலி பூசை | 33 |
| 9. | கடவுள் தமது ஒரே மகன் இயேசுவை உலகிற்கு அனுப்புகிறார் | 41 |
| 10. | இயேசுவை அறிவது தந்தையை அறிவதாகும் | 47 |
| 11. | உலகத் துன்பங்கள், வியாதிகள், கவலைகளுக்கு அடிப்படைக் காரணம் நமது பாவங்களாகும் | 52 |
| 12. | தீமைக்குத் தீமை செய்யாதீர்கள்; பழிவாங்காதீர்கள் | 56 |
| 13. | உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை தேர்வு செய்தார் | 60 |
| 14. | எரிப்பதற்கான நெருப்பை மனித நாவு நரக நெருப்பிலிருந்து பெறுகிறது | 64 |
| 15. | பரிசுத்த ஆவியானவர் அருட்கொடைகள் | 69 |
| 16. | கடவுளின் தாய் கன்னி மரியாள் நமக்கும் தாய் | 73 |
| 17. | ஆண்டவருடைய பன்னிரு சீடர்களில் ஒருவரான புனித தோமையார் தமிழகம் வருகை | 79 |
| 18. | இயற்கையும் மனித மரணமும் கடவுள் கையில் உள்ளன | 83 |
| 19. | இயேசு ஆண்டவர் தரும் இளைப்பாறுதல் | 85 |

## கடவுளிடம் செபிப்போம்

**பரம தந்தையே எங்களை ஆசீர்வதியும்! இயேசு ஆண்டவரே எங்களை ஆசீர்வதியும்! பரிசுத்த ஆவியானவரே எங்களை ஆசீர்வதித்துப் பரலோகம் நோக்கி வழிநடத்தியருளும்!**

**எங்கள் ஆண்டவராகிய இயேசுவே, உம்மை நாங்கள் காண அருள் பொழியும். உமது வார்த்தையை நாங்கள் வாழ்ந்து காட்டும் வரத்தைத் தந்தருளும். தேவ நற்கருணையில் எங்களுடன் தங்கியிருப்பவரே, எங்கள் வாழ்வில் ஒளி வீசியருளும். எங்கள் சோதனை, துன்ப வேளையில் உம்மிடம் தஞ்சமடைகிறோம். எங்கள் ஆன்மாவின் அன்பரே! உமது தெய்வீக ஒளியில் வாழச் செய்தருளும். எம்மைப் பரலோக மக்களாக ஏற்றுக்கொள்ளும். உமது தெய்வீக ஒளியால் எங்கள் பாவங்களைச் சுட்டெரித்து விண்ணகத்தில் நித்தியமாய் எம்மை அமரச்செய்ய வேண்டுகிறோம் - ஆமென்.**

நமது பரிசுத்த தேவ அன்னையும், புனித சூசையப்பர், இராயப்பர், சின்னப்பர், அருளப்பர், தோமையார், பிரான்ஸிஸ் அசிசியார், ஜார்ஜியார், அந்தோணியார், சவேரியார் போன்ற சகல புனிதர்களும் மோட்சத்திலிருந்து நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்மை மோட்சத்திற்கு அழைக்கிறார்கள். பரலோகத்தில் நம்மை வரவேற்பதற்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடவுளாகிய இயேசு ஆண்டவர் நமக்கு வழங்கும் வாழ்வு, நித்திய வாழ்வாகிய பரலோக வாழ்வு.

நமது உலக வாழ்வு முடிந்த பிறகு மோட்சத்தில், சகல மகிழ்ச்சி நிறைந்த முடிவில்லா வாழ்வு வாழப் போகிறோம்.

**தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர்; ஏனெனில், அவர்கள் கடவுளைக் காண்பார்கள்** -மத்தேயு 5:8

மோட்சத்தில் நாம் கடவுளை முகமுகமாய்த் தரிசித்து, நித்திய காலம் கடவுளோடு பேரின்ப பாக்கியத்தை அனுபவிக்கப் போகிறோம்.

கடவுளின் அன்னையாகிய தேவதாயை நாம் மோட்சத்தில் தரிசிக்கப் போகிறோம்.

எல்லாம் வல்ல இறைவன், நம் பாவங்களை மன்னித்து, நம்மை மோட்ச வாழ்வுக்கு அழைத்துச் செல்ல இடைவிடாமல் மன்றாடுவோமாக!

நமது மோட்ச வாழ்வில், சகல புனிதர்கள் திருக்கூட்டத்தில் தோழமை கொண்டு பரலோகத்தில் வாழ குருவானவர் திருப்பலி பூசையில் மன்றாடுகிறார். புனித அந்தோணியார், புனித சவேரியார் போன்ற புனிதர்களை மோட்சத்தில் நாம் பார்க்கப் போகிறோம்; பேசப் போகிறோம் நமக்கு ஒப்பற்ற மகிழ்ச்சியை புனிதர்கள் வழங்குகிறார்கள்.

புனித அந்தோணியார் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக இந்த உலகில் வாழ்ந்தார். இயேசு ஆண்டவர், குழந்தை இயேசுவாக அந்தோணியாரிடம் வந்தார்; பேசினார். புனித அந்தோணியார், புனித சவேரியார் போன்றவர்கள் இந்த உலகில் வெகு காலம் வாழ ஆசைப்படவில்லை. புனித அந்தோணியார் 36 வயது வரைதான் வாழ்ந்தார். புனித சவேரியர் 46 வயது வரை வாழ்ந்தார். இவ்வுலகில் வாழ்ந்த போது இறைவனுக்கு உகந்த பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து காட்டினார்கள். அதன் பரிசாக நித்தியமாய் இவர்கள் மோட்சத்தில் சகல புனிதர்கள் திருக்கூட்டத்தில் தோழமை கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நாமும் இந்த உலகில் பரிசுத்தமாய் இறைவனுக்கு உகந்த வாழ்க்கை வாழ்ந்து பரலோக வாழ்வைப் பரிசாய் பெற்றுக் கொள்வோமாக ! நமது மோட்ச வாழ்வில், பசி இல்லை; தாகம் இல்லை; துன்ப துயரம், அழுகை, துக்கம், வெயில் தாக்கம் இல்லை. மாறாக, முடிவில்லாப் பேரின்பம் உண்டு.

மகிழ்ச்சியுடன் பரலோகத்தில் முடிவில்லா காலம் வாழ்வோம்.

**பரலோகமே நமது தாய்நாடு!**

**பரலோகமே நமது நிரந்தரக் குடியிருப்பு!**

**We are the Citizens of Heaven!**

–பிலிப்பியர் 3:20

# பரலோக வாழ்வாகிய நிலை வாழ்வும் இயேசுவின் மீது நம்பிக்கையும்

இயேசு ஆண்டவர் மோட்ச வாழ்வுக்கு நம்மை அழைக்கிறார். நமது ஆண்டவராகிய இயேசு நம்மை முடிவில்லா நிலை வாழ்வாகிய பரலோக வாழ்வுக்கு அழைத்துச் செல்லவே உலகிற்கு வந்தார்.

இயேசு ஆண்டவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு பெறுவர். "தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலை வாழ்வு பெறும் பொருட்டு, அந்த மகனையே அளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார். உலகிற்கு தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல; தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார். அவர் மீது நம்பிக்கை கொள்வோர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவதில்லை. ஆனால் நம்பிக்கை கொள்ளாதோர் ஏற்கெனவே தீர்ப்புப் பெற்றுவிட்டனர். ஏனெனில் அவர்கள் கடவுளின் ஒரே மகனிடம் நம்பிக்கை கொள்ளவில்லை" -யோவான் 3:15-18.

நமது பரம தந்தையாகிய கடவுள் தமது ஒரே மகனாகிய இயேசுவை நம்மீது கொண்ட அளவற்ற அன்பினால் உலக மக்களாகிய நம்மை மோட்சத்தில் சேர்க்கவே பரலோகத்திலிருந்து உலகிற்கு அனுப்பினார்.

மீண்டும் கூறுகிறேன் - இயேசு நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லவே உலகிற்கு வருகை தந்தார். இயேசுவின் மேல் நம்பிக்கை கொள்பவர்கள் முடிவில்லா வாழ்வாகிய பரலோக வாழ்வை உரிமையாக்கிக் கொள்வார்கள். இயேசுவின் மேல் நாம் நம்பிக்கை கொண்டு வாழும்போது அவர் நம் பாவங்களை மன்னிக்கிறார்; நம்மை மோட்சம் நோக்கி வழிநடத்துகிறார். அக்கினிக் கடலாகிய எரி நரகத்தில் நாம் விழுந்து விடாதபடி நம்மைக் காப்பாற்றுகிறார். எல்லோரும் பாவம் செய்து அதற்குத் தண்டனையாக எரிநரகில் தள்ளப்பட வேண்டியவர்களாக இருக்கிறோம். இதிலிருந்து தப்பித்துக் கொள்ள இயேசு ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

இயேசு ஆண்டவர் மேல் நம்பிக்கை கொள்பவர்கள், கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் பாவம் செய்ய மாட்டார்கள். அவர்கள் கடவுள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமது மரண நாளில் மோட்சத்தில் வானதூதரைப்போல ஒளிமிக்கவர்களாக பிறப்பார்கள். அவர்களது பாவங்களுக்குக் கழுவாயாக, இயேசு ஆண்டவர் கல்வாரி திருப்பாடுகளையும், சிலுவைச் சாவையும் ஏற்றுக்கொண்டார்.

நம் வானகத் தந்தையும் இறைமகன் இயேசுவும் நம்மை மோட்சத்திற்கு அழைக்கிறார்கள்.

"பரம தந்தை என்னிடம் ஒப்படைக்கும் அனைவரும் என்னிடம் வந்து சேருவர். என்னிடம் வருபவரை நான் புறம்பே தள்ளிவிடமாட்டேன். ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல; என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன். அவர் என்னிடம் ஒப்படைக்கும் எவரையும் நான் அழிய விடாமல் இறுதி நாளில் அனைவரையும் உயிர்த்தெழச்செய்ய வேண்டும். இதுவே என்னை அனுப்பியவரின் திருவுளம். மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச்செய்வேன்" என்று இயேசு கூறுகிறார். யோவான் 6:37-40

பரம தந்தையாகிய கடவுள் நம்மை இயேசு ஆண்டவரிடம் ஒப்படைக்கிறார். நாம் இயேசு கிறிஸ்து மேல் நம்பிக்கை கொண்டு வாழ்கிறோம். இயேசு ஆண்டவர் நம்மை மோட்ச வாழ்வுக்கு வழிநடத்துகிறார். நமது துணையாளர் பரிசுத்த ஆவியானவர் வழியாக நாம் மோட்சம் செல்கிறோம். தந்தையாகிய கடவுளின் விருப்பமும் இயேசு ஆண்டவருடைய விருப்பமும் நாம் பரலோகத்தில் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்பதாகும். நாம் அக்கினிக் கடலாகிய எரி நரகில் புதைந்து விடாமல் ஆண்டவர் நம்மை பாதுகாக்கிறார். ஆண்டவர் நம்மை உயிர்த்தெழச்செய்கிறார். நாம் கடவுளோடு இணைந்த, பாவமற்ற, புனித பரலோக வாழ்வு வாழ்வோமாக! அப்போது தான் நமது மரண நாளில் நமது ஆன்மா மோட்சம் செல்லும். நாம் மோட்சத்தில் சகல புனிதர்கள் திருக்கூட்டத்தில் தோழமை கொண்டு வாழப் போகிறோம். புனித அந்தோனியார் புனித சவேரியரைப் பார்க்கப் போகிறோம்; பேசப் போகிறோம். இது விவரிக்க முடியாத மகிழ்ச்சியாகும்.

## கடவுள் நம்மீது கொண்ட அன்பு

**நாம் (பரலோக) வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் கடவுள் மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல; மாறாக அவர் நம்மீது அன்பு கொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில் தான் அன்பின் தன்மை விளங்குகிறது.**

-1.யோவான் 4:9-10

நமது தந்தையாகிய கடவுள் நம்மீது கொண்ட அளவற்ற அன்பினால் தம் ஒரே மகன் இயேசு ஆண்டவரை உலகிற்கு அனுப்பினார். இயேசு ஆண்டவர் நம்மை மோட்ச வாழ்வுக்கு அழைத்துச் செல்லவே உலகிற்கு வந்தார். கடவுளாகிய இயேசு ஆண்டவர், நமது பாவங்களை திருப்பாடுகள் வழியாகச் சிலுவையில் சுமந்து உயிர்விட்டார். நமது பாவங்களுக்குரிய தண்டனையை இயேசு ஆண்டவர் ஏற்றுக்கொண்டு அன்பின் தன்மையை, உலகிற்கு எடுத்துக்காட்டினார். நம்மை எரிநரகிலிருந்து காப்பாற்றுகிறார்; மோட்ச வழியில் நடத்துகிறார்.

## நிலை வாழ்வு இயேசுவிடம் உள்ளது

தந்தையாகிய கடவுள் நமக்கு நிலை வாழ்வை (மோட்ச வாழ்வை) அளிக்கக் காத்திருக்கிறார். இந்த வாழ்வு அவர் மகன் இயேசு கிறிஸ்துவிடம் இருக்கிறது.

“இறை மகனைக் கொண்டிருப்போர் (பரலோக) வாழ்வைக் கொண்டுள்ளனர். அவரைக் கொண்டிராதோர் (பரலோக) வாழ்வைக் கொண்டிரார். இறைமகனிடம் நம்பிக்கை கொண்டுள்ளோருக்கு நிலை வாழ்வு உண்டு என நீங்கள் அறிந்து கொள்ளுமாறு உங்களுக்கு இவற்றை எழுதுகிறேன்”.

-1.யோவான் 5:11-13

நமது தந்தையாகிய கடவுள், பரலோக வாழ்வாகிய நிலை வாழ்வை உலக மக்களுக்கு, தம் ஒரே மகன் இயேசு ஆண்டவர் வழியாக வழங்குகிறார். இயேசு ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டு, பரிசுத்தமாக உலகில் வாழ்பவர்களை இயேசு ஆண்டவர் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார்.

இயேசு நம்முள்ளும் நாம் அவருள்ளும் இணைந்திருந்தால் பரலோக வாழ்வை நாம் இந்த உலகிலேயே வாழலாம். தேவ நற்கருணை உட்கொள்ளும் நாம் ஆண்டவருடன் இணைந்து வாழ்கிறோம். உலகிலேயே மேலான இன்பம் நாம் தேவ நற்கருணை உட்கொள்வதாகும்.





இயேசு ஆண்டவர் பரலோகத்தின் சாவிகளை தலைமைச் சீடர் – முதல் பாப்பரசர் பேதுருவிடம் கொடுக்கிறார்.
நாம் கத்தோலிக்கத் திருச்சபை வழியாகத்தான் மோட்சம் செல்ல வேண்டும். ஏனெனில் மோட்சத்தின் சாவி திருச்சபையில் உள்ளது.

## இயேசுவும் கத்தோலிக்கத் திருச்சபையும்

இயேசு பிலிப்பு செசரியா பகுதிக்குச் சென்றார். அவர் தம் சீடரை நோக்கி, ' மானிட மகன் யாரென்று மக்கள் சொல்கிறார்கள்?' என்று கேட்டார். அதற்கு அவர்கள், 'சிலர் திருமுழுக்கு யோவான் எனவும், வேறு சிலர் எலியா எனவும், மற்றும் சிலர் எரேமியா அல்லது பிற இறைவாக்கினருள் ஒருவர் என்றும் சொல்கின்றனர்' என்றார்கள். 'ஆனால் நீங்கள் நான் யார் எனச் சொல்கிறீர்கள்?' என்று இயேசு கேட்டார்.

சீமோன் பேதுரு மறுமொழியாக, **"நீர் மெசியா! வாழும் கடவுளின் மகன்"** என்று உரைத்தார்.

அதற்கு இயேசு,

**"யோனாவின் மகனான சீமோனே! நீ பேறு பெற்றவன். ஏனெனில் எந்த மனிதரும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை. மாறாக, விண்ணகத்திலுள்ள என் தந்தையே வெளிப்படுத்தியுள்ளார். எனவே நான் உனக்குக் கூறுகிறேன்; உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணரசின் திறவு கோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ தடைசெய்வது, விண்ணுலகிலும் தடைசெய்யப்படும்; மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும்"** என்றார். -மத்தேயு : 16:13-19

## இயேசு ஆண்டவர் கத்தோலிக்கத் திருச்சபையை உண்டாக்குகிறார்

இயேசு ஆண்டவர் பேதுருவை, கத்தோலிக்கத் திருச்சபையின் முதல் பாப்பரசராக, திருச்சபையின் முதல் தலைவராக நியமிக்கிறார். பேதுரு என்றால் **பாறை** எனப் பொருள்படும். தலைமைச் சீடராகிய பேதுரு என்ற பாறையின் மேல், இயேசு ஆண்டவர் கத்தோலிக்கத் திருச்சபையை கட்டுகிறார். எரிநரகின் தீய சக்திகள், கத்தோலிக்கத் திருச்சபையின் முன்பு படுதோல்வியைச் சந்திக்கும். கத்தோலிக்கத் தெய்வீக திருச்சபை, இயேசு ஆண்டவரால் ஆசீர்வதிக்கப்பட்டு பேதுருவின் வழித்தோன்றல்களாகிய புனித பாப்பரசர்களால் வழிநடத்தப்படுகிறது.

## இறை வார்த்தையும் அருட்சாதனங்களும் மோட்சத்தின் சாவிகள்

உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் தலைவர்களுக்கும் ஒவ்வொரு கொடி உண்டு. அதே போல உரோமை அரசின் தலைவரும், உலக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவருமாகிய பாப்பரசருக்கும் ஒரு கொடி உண்டு. அந்தக் கொடியில், பரலோகத்தின் இரண்டு சாவிகள் பொறிக்கப்பட்டுள்ளன. முதல் சாவி ஆண்டவருடைய தெய்வீகத் திருவார்த்தைகளைக் குறிக்கின்றது. இரண்டாவது சாவி அருட்சாதனங்களைக் குறிக்கின்றது. இந்தச் சாவிகளே பரலோகத்தை நமக்குத் திறந்து விடும் புனிதச் சாவிகளாகும். இயேசு ஆண்டவர் பரலோகத்தின் சாவிகளை முதல் பாப்பரசராகிய பேதுருவிடம் ஒப்படைக்கிறார்.

புனித பாப்பரசரின் திருக்கொடி வெள்ளை, மஞ்சளால் ஆன, வெண் பொன் நிறத்தில் அமைந்துள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையின் தற்போதைய திருத்தந்தையாகிய பிரான்சிஸ் அவர்கள், 270-வது திருத்தந்தையாவார். இவரிடம் மோட்சத்தின் சாவிகள் உள்ளன. நாம் பரலோக வாழ்வாகிய மோட்சம் செல்ல கத்தோலிக்கத் திருச்சபையின் வழியாகத்தான் செல்ல வேண்டும். ஏனெனில் பரலோகத்தின் சாவிகள், நமது திருத்தந்தையாகிய பாப்பரசரிடம் உள்ளன.

## திருத்தந்தை சுரூபங்களை அனுமதிக்கிறார்

**க**த்தோலிக்கத் திருச்சபையின் திருத்தந்தையாகிய பாப்பரசர் உலகில் அனுமதிப்பதை, இயேசு ஆண்டவர் பரலோகத்தில் அனுமதிக்கிறார்.

இயேசுவின் சுரூபங்களும், தேவமாதா, புனித சூசையப்பர், புனித பேதுரு, புனித அந்தோணியார், புனித சவேரியார் ஆகிய புனிதர்களின் சுரூபங்களும் உலகெங்கும், கத்தோலிக்கத் தேவாலயங்களிலும், கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களின் வீடுகளிலும் வைக்கப்பட்டுள்ளன. சுரூபங்கள் வைப்பதை பாப்பரசர் அனுமதித்துள்ளார். எனவே இயேசு ஆண்டவரும் சுரூபங்கள் வைப்பதை அனுமதிக்கிறார் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். எனவே நாம் சுரூபங்களுக்கு முன்பு நின்று ஜெபிப்பது, சிலை வழிபாடு ஆகாது, சுரூபங்கள் நமது வணக்கத்திற்குரிய நினைவுச் சின்னங்களாகும். உலகில் நாம் சுரூபங்களில் காணும் புனிதர்களை, நாம் பரலோகத்தில் முகமுகமாய் தரிசிக்கப் போகிறோம். சகல புனிதர்களுடன் நாம் பேசப் போகிறோம்; புனிதர்களை நாம் மோட்சத்தில் சந்திப்பதும், பேசுவதும், விவரிக்க முடியாத மகிழ்ச்சியாகும்.

பாப்பரசர் உலகில் தடை செய்வதை, ஆண்டவர் பரலோகத்திலும் தடை செய்கிறார்; திருத்தந்தையவர்களுக்கு பரலோகத்திலும் உலகிலும் சகல நலன்களும் மக்கள் மேல் பொழிய, இயேசு ஆண்டவர் வரம் கொடுத்து, தமது தெய்வீகத் திருக்கரங்களால் ஆசீர்வதிக்கிறார். இயேசு ஆண்டவர் திருத்தந்தையவர்களையும், ஆயர்களையும், குருக்களையும், துறவறத்தார், இல்லறத்தார் அனைவரையும் தமது தெய்வீகத் திருக்கரங்களால், பரலோக நலன்களாலும், உலக நலன்களாலும், சகல நலன்களாலும் ஆசீர்வதிக்கிறார்; நம்மை பரலோகம் நோக்கி வழிநடத்துகிறார்.

## இயேசு ஆண்டவர் பேதுரு முன் தோன்றுதல்

முதல் நூற்றாண்டில் உரோமாபுரியில் நீரோ மன்னனின் கொலை வெறியாட்ட ஆட்சி நடைபெற்றது. கிறிஸ்தவர்களை அவன் கொன்று குவித்தான். கிறிஸ்தவர்களின் முதல் தலைவரான பேதுருவாகிய இராயப்பரையும் கொலை செய்யத் தேடினான்.

முதல் திருத்தந்தையை மன்னனிடமிருந்து காக்க எண்ணிய கிறிஸ்தவர்கள், இராயப்பரை அந்நகரை விட்டு வெளியேறி உயிர்பிழைக்க வேண்டினர். மக்களின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து, உரோமையை விட்டு வெளியேறி அவர் ஆப்பியன் சாலை வழியே நடந்தார்.

அப்பொழுது ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்தது. இராயப்பர் முன் இயேசு கிறிஸ்து தோன்றி அவருக்கு எதிரே வந்து கொண்டிருந்தார். இயேசுவைக் கண்ட இராயப்பரோ, "ஆண்டவரே எங்கே போகிறீர்?" என்று கேட்டார். ஆண்டவரோ இராயப்பரைப் பார்த்து, "நான் மீண்டும் சிலுவையில் அறையப்பட உரோமைக்குச் செல்கிறேன்" என்றார். இயேசுவின் வார்த்தையைக் கேட்ட இராயப்பர், உடல் நடுநடுங்க ஆண்டவரை நோக்கினார். ஆண்டவரோ மறைந்தார். இராயப்பர் தனது தவறை உணர்ந்து வருந்தினார். மீண்டும் வந்த வழியே உரோமைக்குத் திரும்பினார்.

இயேசு ஆண்டவர் கத்தோலிக்கத் திருச்சபையை வழிநடத்துவதை, நம்மால் உணரமுடிகிறது. இராயப்பர் முப்பத்து மூன்று ஆண்டுகள், பாப்பிறையாக உரோமில் பணியாற்றினார். இறுதியில் நீரோ மன்னன் காலத்தில் சாட்டைகளால் அடிக்கப்பட்டு, ஜானிக்குலம் என்ற மலையில் தலைகீழாகச் சிலுவையில் அறையப்பட்டு, திருமறைக்காய் தன்னுயிரை ஈந்தார். இயேசு ஆண்டவரை நேராகச் சிலுவையில் அடித்தது போன்று தன்னைச் சிலுவையில் அடிக்காமல், தலைகீழாகச் சிலுவையில் அடிக்கும்படி இராயப்பர் கேட்டுக்கொண்டார். அவர் விருப்பப்படி தலைகீழாகச் சிலுவையில் அடித்துக்கொன்றார்கள். அதே இடத்தில் இன்று இராயப்பரது பெரிய ஆலயம் விண்ணோக்கி நிற்கிறது.

### கடவுளின் திருச்சபை - கத்தோலிக்கத் திருச்சபை

புனித இராயப்பரைப் போன்றே பிற்காலத்தில் கத்தோலிக்கத் திருச்சபையை வழிநடத்திய பல போப்புகளும் கொல்லப்பட்டனர். உரோமையில் அமைந்திருக்கும் மண்டபத்தில், புனித பேதுரு தொடங்கி 23 ஆம் அருளப்பர் வரை உள்ள அனைத்து போப்புகளின் சலவைச்சிலைகள் உள்ளன. இவர்கள் பரலோகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

கத்தோலிக்கத் திருச்சபையை அழிக்கும் நோக்கத்துடன் கிறிஸ்தவர்கள் பலர் கொல்லப்பட்டனர். ஆனால் திருச்சபையை எந்த மனிதனாலும் அழிக்க முடியவில்லை. ஏனெனில் இயேசு ஆண்டவரால் உண்டாக்கப்பட்டதே தெய்வீக கத்தோலிக்கத் திருச்சபையாகும். பரிசுத்த ஆவியானவர் தெய்வீக அருளை திருச்சபை மக்கள் மீது பொழிந்து பரலோக வாழ்வு நோக்கி நம்மை வழிநடத்துகிறார். பரிசுத்த ஆவியானவர் கத்தோலிக்கத் திருச்சபையை பரிசுத்தமாகப் பாதுகாக்கிறார்.

கத்தோலிக்கத் திருச்சபை என்னும் கடவுள் குடும்பத்தில் இயேசுவின் மறை உடலின் பணிகள் பலவாயினும், அதை வளர்ச்சியுறச்செய்வதில் அனைவரும் சமபங்கு வகிக்கிறார்கள். பொதுநிலையினராகிய நாம் இறையரசைக் கட்டி எழுப்புவதில் பரிசுத்த ஆவியாருடன் இணைந்து செயல்படுவோம்.

## திருச்சபையின் இரத்த சாட்சிகள்

இயேசுவின் சீடர்களில் அருளப்பரைத் தவிர மற்ற அனைவரும் கொலை செய்யப்பட்டு இறந்தனர். அவர்களுடைய இறப்பை சித்தரிக்கும் படங்கள் சென்னையில் தோமையார் குத்திக் கொலை செய்யப்பட்ட, தோமையார் மலைமீதுள்ள கோவிலில் வைக்கப்பட்டுள்ளது.

பிலிப்பு என்னும் சீடரை, ஒரு வண்டியில் கட்டி வைத்து, மரம் அறுப்பது போன்று ரம்பம் வைத்து அறுத்துக் கொலை செய்தார்கள்.

புனித யோவானை கொதிக்கும் எண்ணெயில் போட்டுக் காய்ச்சினார்கள். அப்பொழுது யோவான் தனது உடலில் சில உறுப்புகள் வேகவில்லை எனக்கூறினார். இதைக்கண்டு பயந்து அவரை வெளியே தூக்கிப் போட்டுவிட்டு ஓடி விட்டனர்.



# நாம் பரலோக வாழ்வு பெற்று மகிழ நற்செய்தி நூல் சிறந்த வழிகாட்டி

கடவுளாகிய இயேசு ஆண்டவர் நமக்கு பரலோகத்தில் இருந்து கொண்டு வந்த ஒப்பற்ற பரிசு, முடிவில்லா பரலோக வாழ்வாகும். அதை அடைவதற்கான வழி முறைகள் நற்செய்தி நூலில் விளக்கப்பட்டுள்ளன.

**யோவானாகிய அருளப்பரே இவற்றிற்கு சாட்சி; இவரே இவற்றை எழுதி வைத்தவர். இவரது சான்று உண்மையானது என நமக்குத் தெரியும்.** யோவான் 21:24-25

நாம் மோட்ச வாழ்வைப் பெறுவதற்காக சுருக்கமாக நற்செய்திநூலை யோவான் எழுதுகிறார். இயேசு ஆண்டவர் நற்செய்திநூல் வழியாக நமது பரலோக வாழ்வுக்கு வழிகாட்டுகிறார்.

இறைமகனிடம் நம்பிக்கை கொண்டுள்ளோருக்கு, நிலை வாழ்வு (பரலோக வாழ்வு) உண்டு என நீங்கள் அறிந்து கொள்ளுமாறு உங்களுக்கு இவற்றை எழுதுகிறேன் என்கிறார். (1யோவான்5:13)

இயேசுவே இறைமகனாகிய மெஸியா என நீங்கள் நம்புவதற்காகவும் நம்பி அவர் பெயரால் (பரலோக) வாழ்வு பெறுவதற்காகவும் இந்நூலில் எழுதப்பட்டுள்ளன.

வேறு பல அருள் அடையாளங்களையும் அற்புதங்களையும் இயேசு தம் சீடர்களின் முன்னிலையில் செய்தார். அவையெல்லாம் இந்நூலில் எழுதப்படவில்லை. - யோவான் 20:30-31

**நற்செய்திநூல் நாம் பரலோக வாழ்வு பெறுவதற்காக எழுதினார்கள்**

இயேசு ஆண்டவர் தம் சீடர்கள் முன்னிலையில் அரியபெரிய அடையாளங்களைச் செய்தார். இயேசு ஆண்டவருடைய கணக்கற்ற அற்புத அடையாளங்கள் அனைத்தும் நற்செய்திநூலில் எழுதப்படவில்லை. நற்செய்திப் புத்தகம் எழுதப்பட்டதன் நோக்கம், நாம் பரலோகத்தில் முடிவில்லா காலம் வாழ வேண்டும் என்பதாகும். நமது மோட்ச வாழ்வுக்கு நற்செய்திநூல் வழிகாட்டுகிறது. இயேசு ஆண்டவர் பரம தந்தையாகிய கடவுளின் ஒரே மகன் என்ற நம்பிக்கை கொண்டு நாம் வாழ வேண்டும். இந்த நம்பிக்கையின் பயனாக, கடவுள் நமக்கு மோட்ச வாழ்வைக் கொடுக்கிறார். நமக்கு மோட்ச வாழ்வை கொடுப்பதற்காகவே, நற்செய்திப் புத்தகத்திலுள்ளவை எழுதப்பட்டுள்ளன. நற்செய்திப் புத்தகம் நமக்கு மோட்சத்திற்கு வழிகாட்டுகிறது.

# நாம் பரலோக வாழ்வு பெற வழி ஏழைகளுக்கு உதவி செய்வதே

ஒருவர் இயேசுவிடம் வந்து,

**போதகரே! நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு, நான் என்ன நன்மை செய்ய வேண்டும்?**

என்று கேட்டார். இயேசு அவரிடம் "நன்மையைப்பற்றி என்னை ஏன் கேட்கிறீர்? நல்லவர் ஒருவரே! நீர் பரலோக வாழ்வடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடியும்" என்றார். அவர் "எவற்றை?" என்று கேட்டார்.

இயேசு,

"**கொலை செய்யாதே; விபசாரம் செய்யாதே; களவு செய்யாதே; பொய்ச்சான்று சொல்லாதே; தாய் தந்தையை மதித்து நட; மேலும் உன்மீது நீ அன்பு கூர்வதுபோல், உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக!**" என்று கூறினார்.

அந்த இளைஞர் அவரிடம், "இவை அனைத்தையும் கடைபிடித்து வந்துள்ளேன். இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?" என்று கேட்டார்.

அதற்கு இயேசு,"**நிறைவுள்ளவராக விரும்பினால், நீர் போய் உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்கு கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்**" என்றார். அவர் சொன்னதைக் கேட்ட அந்த இளைஞர் வருத்தத்தோடு சென்று விட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது. இயேசு தம் சீடரிடம், "**செல்வர் விண்ணரசில் புகுவது கடினம்** என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன். மீண்டும் உங்களுக்குக் கூறுகிறேன், செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதை விட, ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது" என்றார்.

சீடர்கள் இதைக்கேட்டு "அப்படியானால் யார்தாம் மீட்புப் பெற முடியும்" என்று கூறி மிகவும் வியப்படைந்தார்கள். இயேசு அவர்களைக் கூர்ந்து நோக்கி, "மனிதரால் இது இயலாது ! ஆனால் கடவுளால் எல்லாம் இயலும்" என்றார்.

அதன் பின்பு பேதுரு இயேசுவைப் பார்த்து, “நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே, எங்களுக்கு என்ன கிடைக்கும்?” என்று கேட்டார். அதற்கு இயேசு, ‘‘புதுப்படைப்பின் நாளில் மானிட மகன் தமது மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். அப்போது என்னைப் பின்பற்றிய நீங்களும், இஸ்ரயேல் மக்களின் பன்னிரு குலத்தவர்க்கும் நடுவர்களாய்ப் பன்னிரு அரியணைகளில் வீற்றிருப்பீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். மேலும் **என் பெயரின் பொருட்டு, வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தந்தையையோ, தாயையோ, பிள்ளைகளையோ நில புலன்களையோ விட்டுவிட்ட எவரும் நூறுமடங்காகப் பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப்பேறாக அடைவர்.** ஆனால் முதன்மையானோர், பலர் கடைசியாவர்; கடைசியானோர் பலர், முதன்மையாவார்” என்று அவர்களிடம் கூறினார்.

- மத்தேயு 19:16-30 மாற்கு10:17-31 லூக்கா 18-30, 10:25-37

இயேசுவின் மேல் நாம் முழுமையாக நம்பிக்கை கொண்டு, அவருடன் இணைந்து வாழ்வதுதான், நமது நிலை வாழ்வாகிய பரலோக வாழ்வாகும். மோட்ச வாழ்வை, நாம் பரிசுத்தமாக, உலகிலேயே தொடங்கி வாழ வேண்டும்.

இயேசு ஆண்டவரிடம் நான் பரலோக வாழ்வைப் பெறுவதற்கு என்ன நன்மை செய்ய வேண்டும் என்ற முக்கியமான கேள்வியை இன்னொருவர் கேட்டார். “உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” என்று கூறினார். நமது வாழ்வில் அன்பே தலை சிறந்து விளங்க வேண்டும். எல்லோருக்கும் நாம் நன்மையே செய்ய வேண்டும். எவருக்கும் தீமை செய்யக்கூடாது. நமக்குத் தீமை செய்பவருக்கும் நன்மை செய்வோம். நம்மீது வசைமொழி கூறுபவர்களுக்கும் ஆசிமொழி வாழ்த்துமொழி கூறுவோம். இயேசு ஆண்டவர் இவற்றை நமக்கு வாழ்ந்து காட்டினார். நாமும் ஆண்டவருடைய செயல்பாடுகளையும் போதனைகளையும் வாழ்வாக்குவோம். இயேசு ஆண்டவர் நம்மை பரலோகத்தில் வாழவைப்பார். நம்மீது பரிசுத்த ஆவியையும் அருட்கொடைகளையும் பொழிந்தருள்வார்.

நாம் உலகில் பொருளாசை கொண்டு வாழக்கூடாது. நாம் ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும். தன்னலத்துடன் மிகுந்த செல்வத்தைக் குவித்து வைத்திருப்பவர்கள் பரலோகம் செல்ல இயலாது என ஆண்டவர் கூறுகிறார். மற்றவர்களுக்கு நாம் உதவி செய்வதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். உலகச் செல்வத்தால் நாம் நிறைவு பெற முடியாது. ஏழைகளுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். மனித சக்தியால் நாம் பரலோக வாழ்வு பெற முடியாது. ஆனால் கடவுளால் எல்லாம் செயல்படுத்த முடியும். ஆகவே நாம் கடவுள் மேல் நம்பிக்கை கொண்டு வாழ்வோமாக! ஆண்டவர் நம்மை உலக நலன்களாலும், பரலோக நலன்களாலும், சகல நலன்களாலும் நிரப்ப மன்றாடுவோம். ஆண்டவராகிய கடவுள், தமது பரிசுத்த ஆவியாலும், அருட்கொடைகளாலும் நம்மை அபிசேகம் செய்து விண்ணகம் நோக்கி வழிநடத்த மன்றாடுவோமாக! நாம் கடவுள் மேல் கொண்டுள்ள நம்பிக்கையால் கடவுள் நம் பாவங்களை மன்னிக்கிறார். நம்மை மோட்ச வாழ்வுக்கு வழிநடத்துகிறார். நாம் ஆண்டவருடைய சீடர்களாக மாறுகிறோம். கடவுளிடமிருந்து பிறந்த மக்களாக பரிசுத்த மக்களாக மாறுகிறோம்.

## ஏழைகளுக்கு உதவுபவர்களே நிலை வாழ்வு பெறுவர்

கடவுளாகிய இயேசு ஆண்டவர் நமது வாழ்க்கையில் பரலோக வாழ்வைப் பெறுவதற்கான வழிமுறைகளை நமக்கு போதிக்கிறார். உலகில் உணவின்றியும், ஆடையின்றியும் இன்னும் பல தேவைகளில் இருப்பவர்களுக்கு உதவி செய்வது, நன்மை செய்வது, அன்பு செய்வது தான் நமது மோட்ச வாழ்வுக்கு வழியாகும். மனித நேயம், நம் வாழ்வின் மையமாகும்.

புனித அன்னை தெரசா அவர்கள், அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் உதவி செய்து, உலகில் பரலோக வாழ்வை வாழ்ந்து காட்டினார்கள். நமது வாழ்வில் நற்செயல்கள் ஏழை மக்களுக்குச் செய்யாவிடில், அக்கினிக் கடலாகிய எரிநரகில் புதையும் தண்டனை கிடைக்கும். ஆண்டவர் நமக்கு எச்சரிக்கையாக, இறுதித் தீர்ப்பைப் பற்றி அறிவிக்கிறார். நாம் எரிநரகிலிருந்து தப்பித்துக்கொள்ள நமது பாவ வாழ்விலிருந்து மாறி பரிசுத்த வாழ்வு வாழ வேண்டும். இயேசு ஆண்டவர் மேல், நாம் மிகுந்த நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும். ஆண்டவர் மீதுள்ள நமது நம்பிக்கையினால் நாம் மோட்ச வாழ்வில் முடிவில்லா காலம் வாழ்வோம். ஆண்டவர் நம்மை பாவத்திலிருந்தும், சாத்தானிடமிருந்தும், எரிநரகத்திலிருந்தும் காப்பாற்றுகிறார்.

## உலக மக்கள் அனைவருக்கும் இறுதித் தீர்ப்பு

வானதூதர் அனைவரும் புடைசூழ, மானிட மகன் மாட்சியுடன் வரும்போது, தம் மாட்சிமிகு அரியணையில் வீற்றிருப்பார். எல்லா மக்களினத்தாரும் அவர் முன்னிலையில் ஒன்று கூட்டப்படுவர். பின்பு அரியணையில் வீற்றிருக்கும் அரசர் (இயேசு), தம் வலப்பக்கத்தில் உள்ளோரைப் பார்த்து, "என் தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்களே வாருங்கள். உலகம் தோன்றியது முதல் உங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப் பேறாகப் பெற்றுக் கொள்ளுங்கள். ஏனெனில் **நான் பசியாய் இருந்தேன்; நீங்கள் உணவு கொடுத்தீர்கள். தாகமாாய் இருந்தேன்; என் தாகத்தை தணித்தீர்கள். அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள். நான் ஆடையின்றி இருந்தேன்; நீங்கள் எனக்கு ஆடை அணிவித்தீர்கள். நோயுற்றிருந்தேன்; என்னைக் கவனித்துக் கொண்டீர்கள். சிறையில் இருந்தேன்; என்னைத் தேடி வந்தீர்கள்** என்பார். அதற்கு நேர்மையாளர்கள், ஆண்டவரே! எப்பொழுது உம்மை பசியுள்ளவராகக் கண்டு உணவளித்தோம் அல்லது தாகமுள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தணித்தோம்? எப்பொழுது உம்மை அன்னியராகக் கண்டு ஏற்றுக் கொண்டோம் அல்லது ஆடை இல்லாதவராகக் கண்டு ஆடை அணிவித்தோம்? எப்பொழுது நோயுற்றவராக அல்லது சிறையில் இருக்கக் கண்டு உம்மைத் தேடி வந்தோம்? என்று கேட்பார்கள். அதற்கு அரசர் ( இயேசு), **மிகச் சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்** எனப் பதிலளிப்பார்.


### எரி நரகிற்குச் செல்லும் சபிக்கப்பட்டவர்கள்

பின்பு இடப்பக்கத்தில் உள்ளோரைப்பார்த்து, சபிக்கப்பட்டவர்களே! என்னிடமிருந்து அகன்று போங்கள். அலகைக்கும் அதன் தூதருக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற என்றும் அணையாத, நரக நெருப்புக்குள் செல்லுங்கள். ஏனெனில் நான் பசியாய் இருந்தேன்; நீங்கள் எனக்கு உணவு கொடுக்கவில்லை. தாகமாயிருந்தேன்; என் தாகத்தைத் தணிக்கவில்லை. நான் அன்னியனாய் இருந்தேன், நீங்கள் என்னை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆடையின்றி இருந்தேன்; நீங்கள் எனக்கு ஆடை அளிக்கவில்லை. நோயுற்றிருந்தேன், சிறையிலிருந்தேன்,

என்னைக் கவனித்துக்கொள்ளவில்லை என்பார். அதற்கு அவர்கள், ஆண்டவரே! எப்பொழுது நீர் பசியாகவோ, தாகமாகவோ, அன்னியராகவோ, ஆடையின்றியோ, நோயுற்றோ, சிறையிலோ இருக்கக் கண்டு உமக்குத் தொண்டு செய்யாதிருந்தோம்! எனக் கேட்பார்கள். அப்பொழுது அவர், **மிகச் சிறியோராகிய இவர்களுள் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ, அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்** எனப் பதிலளிப்பார்.

இவர்கள் முடிவில்லாத் தண்டனையை அடையவும், நேர்மையாளர்கள் நிலை வாழ்வு (மோட்ச வாழ்வு) பெறவும் செல்வார்கள்.

- மத்தேயு 25:31-46



# நாம் பரலோக வாழ்வில் வானதூதர்களைப் போல் காட்சியளிப்போம்.

உயிர்த்தெழுதலை மறுக்கும் சில சதுசேயர், இயேசுவை அணுகி, போதகரே! மணமான ஒருவர் மகப்பேறின்றி இறந்து போனால், அவர் மனைவியைக் கொழுந்தனே மனைவியாக ஏற்றுக்கொண்டு தம் சகோதரருக்கு மரபுவழி வாரிசு உருவாக்க வேண்டும் என்று மோசே எழுதி வைத்துள்ளார் எனக் கூறினர். அதற்கு இயேசு அவர்களிடம், "இக்கால உலக வாழ்வில் மக்கள் திருமணம் செய்துகொள்கின்றனர். ஆனால் வருங்கால மோட்ச வாழ்வைப் பெறத் தகுதி பெற்ற யாரும் இறந்து உயிர்த்தெழும்போது திருமணம் செய்து கொள்வதில்லை. இனி அவர்கள் சாக முடியாது. அவர்கள் வானதூதரைப்போல் இருப்பார்கள். உயிர்த்தெழுந்த மக்களாய் இருப்பதால், அவர்கள் கடவுளின் மக்களே. இறந்தோர் உயிருடன் எழுப்பப்படுவதைப் பற்றி, மோசே முட்புதர் பற்றிய பகுதியில் எடுத்துக் கூறியிருக்கிறாரே! அங்கு அவர் ஆண்டவரை ஆபிரகாமின் கடவுள், ஈசாக்கின் கடவுள், யாக்கோபின் கடவுள் என்று கூறியிருக்கிறார். **அவர் இறந்தோரின் கடவுள் அல்ல; மாறாக வாழ்வோரின் கடவுள்.** ஏனெனில், அவரைப் பொறுத்தமட்டில் அனைவரும் உயிருள்ளவர்களே என்றார். மறைநூல் அறிஞருள் சிலர் அவரைப்பார்த்து, போதகரே நன்றாகச் சொன்னீர் என்றார்கள். அதன் பின் அவர்கள் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை".

- லூக்கா 20:27-40 மத்தேயு 22:23-33 மாற்கு 12:18-27

இயேசு ஆண்டவர் நமக்கு பரலோக வாழ்வு உண்டு என்பதைப் போதிக்கிறார். ஆனால் சதுசேயர்கள் உயிர்த்தெழுதல் மனிதர்களுக்கு இல்லையென்ற கொள்கை உள்ளவர்கள். நாம் பரலோகத்தில் வாழும் போது உலகில் உள்ள கணவன் மனைவி மற்றும் உறவுகள் கிடையாது என்று ஆண்டவர் கூறுகிறார். நமது சொந்த பந்தங்கள் உலகத்தோடு முடிந்து விடுகின்றன. நாம் இறந்து உயிர்த்த பிறகு மீண்டும் நமக்குச் சாவு கிடையாது. மோட்சத்தில் முடிவில்லா வாழ்வு வாழ்வோம். நாம் மோட்சத்தில் வானதூதரைப் போலிருப்போம் என இயேசு ஆண்டவர் கூறுகிறார். நாம் கடவுளிடமிருந்து பிறந்த மக்கள்; பரலோகத்தில் வாழும் மக்கள்; கடவுள் இறந்தோரின் கடவுள் அல்ல; மாறாக மோட்சத்தில் வாழ்வோரின் கடவுள்; கடவுளைப் பொறுத்தமட்டில் அனைவரும் உயிர் உள்ளவர்களே. புனித அந்தோனியார், புனித சவேரியார் சகல புனிதர்களும் பரலோகத்தில் வானதூதர்களைப் போன்று காட்சியளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## நமது மோட்ச வாழ்வில் நாம் சூரியனைப்போல் ஒளிவீசிப் பிரகாசிப்போம்

மானிட மகன் தம் வானதூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ஆட்சிக்குத் தடையாக உள்ள அனைவரையும் நெறிகெட்டோரையும் ஒன்று சேர்ப்பார்கள். பின் அவர்களைத் தீச்சூளையில், (நரகில்) தள்ளுவார்கள். அங்கே அழுகையும் அங்கலாய்ப்பும் இருக்கும். அப்போது நேர்மையாளர் தம் தந்தையின் ஆட்சியில், கதிரவனைப் போல் ஒளி வீசுவர். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்.

- மத்தேயு 13: 41-43

உலக முடிவில் வானதூதர்கள், கடவுளுக்கு ஏற்புடைய மக்களை பரலோக வாழ்வில் சேர்ப்பார்கள். அன்னை தெரசா போன்ற பிறர் சிநேகத்தில் வாழ்ந்த மக்கள் மோட்ச வாழ்வை அடைவார்கள். நாம் பரலோகத்தில் வாழும் காலத்தில் சூரியனைப்போல் ஒளிவீசி பிரகாசிப்போம் என்று இயேசு ஆண்டவர் கூறுகிறார். உலகில் பாவ வாழ்க்கை வாழும் சாத்தானின் மக்கள், எரிநரகில் புதைவார்கள், நரகதீச்சூளையில் அழுகையும் வேதனையும் இருக்கும்.

### நமது ஆன்மா மோட்சம் செல்ல வேண்டும்

"மனிதர் உலகம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தம் (பரலோக) வாழ்வையே இழப்பாரெனில் அவருக்கு கிடைக்கும் பயன் என்ன?"

- மத்தேயு 16:26; லூக்கா 9:25

நாம் பரலோக வாழ்வை சிந்தித்து, தியானித்து உலகில் வாழ வேண்டும். நாம் இவ்வுலகில் நிரந்தரமாக வாழப் போகிறோம் என்று எண்ணுகிறோம். ஆனால் பொன்னும், வெள்ளியும் மற்றும் உலகப்பொருட்களும் உலகமும் அழியப்போகின்றன. உலகப் பொருட்கள் குப்பைகள்; ஆனால் நமது ஆன்மா எரிநரகில் புதைந்தால் நாம் சம்பாதித்தது பயனற்றுப் போகும் என ஆண்டவர் நமக்குக் கூறுகிறார். ஆகவே நாம் பரலோக வாழ்வுப் பாதையில் வழிநடப்போம்.

புனித சவேரியார் உலகப்பெருமைகள், உலகப்பொருட்கள் முழுவதையும் சம்பாதிக்க திட்டம் தீட்டி வாழ்ந்தார். ஆனால் இயேசு

ஆண்டவருடைய மேற்கண்ட திருவார்த்தைகளை புனித இஞ்ஞாசியார் சவேரியாருக்கு எடுத்துக்கூறினார். கடவுள் வார்த்தையைக் கேட்ட சவேரியார் மனம் மாறினார். கடவுளை நோக்கி மனம் திரும்பினார்; உலகச் செல்வத்தை வெறுத்தார். இந்தியாவிலுள்ள தமிழ்நாட்டிற்கு குருவானவராக வருகை தந்தார். ஏராளமான மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். தெருத் தெருவாக கைமணி அடித்தார். மக்களுக்கு ஞான உபதேசம் கற்பித்தார். அவர் பெரிய அரச குலம் குடும்பத்தைச் சேர்ந்தவர். 500 ஆண்டுகளுக்கு முன் தமிழகத்திற்கு வருகை தந்தார். புனித சவேரியார் இறந்த பிறகும் 500 ஆண்டுகளுக்குமேல் அவரது உடல் அழியாமல் கோவாவில் இருக்கிறார். கோவாவில் உள்ள பசிலிக்கா தேவாலயத்தில் அழியாத உடலுடன் இன்றும் இருக்கும் புனித சவேரியாரை 1964 முதல் நான் பல முறை சந்தித்து ஆசி பெற்று வாழ்ந்து வருகிறேன். குடும்பத்துடனும் புனித சவேரியாரைச் சந்தித்து ஆசிபெற்றோம். புனித சவேரியார் மோட்சத்தில் சூரியனைப்போல், ஒளி வீசி பிரகாசித்து கொண்டிருக்கிறார். நாமும் அவரைப் பார்க்கப் போகிறோம்;. பேசப் போகிறோம்; வானதூதரைப் போல் புனித சவேரியார் மோட்சத்தில் காட்சியளிக்கிறார்;

### நமது வாழ்வில் பரலோக வாழ்வைத் தேடுவோம்

எதை உண்போம், எதை குடிப்போம், எதை அணிவோம் எனக் கவலை கொள்ளாதீர்கள். ஏனெனில் பிற இனத்தவரே இவற்றையெல்லாம் நாடுவர்; உங்களுக்கு இவையாவும் தேவை என உங்கள் விண்ணகத் தந்தைக்குத் தெரியும். ஆகவே அனைத்திற்கும் மேலாக, அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்; அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்.

- மத்தேயு 6: 31-33 லூக்கா 12:22-31

நமது பரலோக முடிவில்லா வாழ்வையும், இதற்கான பரிசுத்த வாழ்வையும், முதன்முதலில் நாம் உலகில் வாழ்ந்து காட்டுவோம். நமது உலகத் தேவைகளான உணவு, உடை மற்ற தேவைகளையும் கடவுள் தெரிந்து வைத்திருக்கிறார். ஆண்டவர் நமது தேவைகளை நிச்சயம் நிறைவு செய்வார். நமது கடவுள் நம்பிக்கையால், நமக்கு வரக்கூடிய துன்ப துயரங்கள், கவலைகளை எல்லாம் ஆண்டவரிடம் ஒப்படைப்போம், ஆண்டவர் நமக்கு பரிசுத்த ஆவியையும், அன்பையும், அருட்கொடைகளையும், சமாதானத்தையும் நம்மீது பொழிந்து நம்மை மோட்ச வாழ்வுக்கு அழைத்துச் செல்வார்.

## இலாசரும் பணக்காரரும்
## மோட்சம் எரிநரகம் உரையாடல்

ஒரு ஊரில் பண வசதி படைத்த செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். விலையுயர்ந்த ஆடை அணிந்து நாள்தோறும் பல்சுவை விருந்துண்டு இன்புற்றிருந்தார். இலாசார் என்னும் பெயர் கொண்ட ஏழையும் இருந்தார். அவர் உடல் முழுவதும் புண்ணாய் இருந்தது. செல்வருடைய வீட்டு வாயில் அருகே கிடந்தார். செல்வருடைய மேசையிலிருந்து விழும் ரொட்டித் துண்டுகளால் தம் பசியாற்ற விரும்பினார். நாய்கள் வந்து புண்களை நக்கும். ஒரு நாள் ஏழை இலாசார் இறந்தார். வானதூதர்கள் அவரை ஆபிரகாமின் மடியில் கொண்டு போய் சேர்த்தார்கள். செல்வரும் இறந்தார் அவர் அடக்கம் செய்யப்பட்டார். அவர் பாதாளத்தில் வதைக்கப்பட்ட போது அண்ணாந்து பார்த்து, தொலையில் ஆபிரகாமையும் அவரது மடியில் இலாசாரையும் கண்டார். அவர், “தந்தை ஆபிரகாமே எனக்கு இரங்கும், இலாசர் தமது விரல் நுனியை தண்ணீரில் நனைத்து எனது நாவைக் குளிரச் செய்ய அவரை அனுப்பும். ஏனெனில் இந்தத் தீப்பிழம்பில் நான் மிகுந்த வேதனைப்படுகிறேன்,“ என்று உரக்கக் கூறினார். அதற்கு ஆபிரகாம், “மகனே, நீ உன் வாழ் நாளில் நலன்களையே பெற்றாய்! அதே வேளையில் இலாசர் இன்னல்களையே அடைந்தார். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவர் இங்கே ஆறுதல் பெறுகிறார்.

நீயோ மிகுந்த வேதனைப்படுகிறாய். அன்றியும் எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது. ஆகையால் இங்கிருந்து ஒருவர் உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது. அங்கிருந்து நீங்கள் எங்களிடம் கடந்து வரவும் இயலாது," என்றார். அவர் "அப்படியல்ல, தந்தை ஆபிரகாமே! எனக்கு ஐந்து சகோதரர்கள் உண்டு. அவர்களும் வேதனை மிகுந்த இந்த இடத்திற்கு வராதவாறு அவர் அவர்களை எச்சரிக்கலாமே என்றார். அதற்கு ஆபிரகாம், மோசேயும் இறைவாக்கினர்களும் அவர்களுக்கு உண்டு. அவர்களுக்குச் செவி சாய்க்கட்டும் என்றார் அவர், அப்படியல்ல தந்தை ஆபிரகாமே! இறந்த ஒருவர் அவர்களிடம் போனால் அவர்கள் மனம் மாறுவார்கள் என்றார். ஆபிரகாம் அவர்கள், மோசேக்கும் இறைவாக்கினருக்கும் செவி சாய்க்காவிட்டால் இறந்த ஒருவர் உயிர்த்தெழுந்து அவர்களிடம் போனாலும் நம்ப மாட்டார்கள் என்றார் .

- லூக்கா 16:19-31

பரலோகத்திற்கும் பாதாளத்திற்கும் இடையே இந்த உரையாடல் நடைபெறுகிறது. இயேசு ஆண்டவர் உலகில் நடைபெற்ற உண்மை நிகழ்வை போதித்துள்ளார். ஏனெனில் இலாசர் என்ற பெயரையும் ஆபிரகாம் என்ற பெயரையும் ஆண்டவர் குறிப்பிடுவதால், உண்மை நிகழ்வு என்பதை நாம் அறியமுடிகிறது. உலகில் ஆபிரகாம் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். மோட்சத்தில் உள்ளவர்களும், எரிநரகிலுள்ளவர்களும் கலந்து பேசுகிறார்கள். நாம் பரலோக வாழ்வில் உள்ள மகிழ்ச்சியையும், எரிநரகிலுள்ள வேதனையையும் அறிய முடிகிறது. நாம் பரலோக வாழ்வை பெற்று மகிழ, ஆண்டவருடைய திருவார்த்தைகளை நம் தலை மேல் கொண்டு வாழ்வோமாக! பரிசுத்த ஆவியானவர் நம்மை ஆட்கொண்டு விண்ணகம் நோக்கி வழிநடத்துவார்.




அக்கினிக் கடலாகிய எரிநரகில் நெருப்பும் அணையாது,
நரகத்தில் அவர்களைத் தின்னும் புழுவும் சாகாது.

**கடவுளாகிய இயேசு ஆண்டவர் உலக மக்களின் பரலோக வாழ்வையும் எரிநரகைப் பற்றியும் போதிக்கிறார்**

உங்கள் கை, உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இருகையுடையவராய், அணையாத நெருப்புள்ள நரகத்துக்குள் தள்ளப்படுவதை விட, கை ஊனமுற்றவராய் நிலை வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது.

உங்கள் கால் உங்களைப் பாவத்தில் விழச் செய்தால் அதை வெட்டி விடுங்கள். நீங்கள் இரு காலுடையவராய் நரகத்தில் தள்ளப்படுவதை விட கால் ஊனமுற்றவராய் வாழ்வில் புகுவது உங்களுக்கு நல்லது.

உங்கள் கண் உங்களை பாவத்தில் விழச் செய்தால் அதைப் பிடுங்கி எறிந்து விடுங்கள். நீங்கள் இரு கண் உள்ளவராய் நரகத்தில் தள்ளப்படுவதை விட ஒற்றைக்கண்ணராய் இறையாட்சிக்குட்படுவது உங்களுக்கு நல்லது.

நரகத்திலோ அவர்களைத் தின்னும் புழு சாகாது; நெருப்பும் அவியாது.

- மாற்கு 9:43-48 மத்தேயு 18:8-9

## இயேசு ஆண்டவர் நமக்குக் கூறும் அறிவுரைகள்

அக்கினிக் கடலாகிய எரி நரகின் பயங்கரத்தைக் காண முடிகிறது. எரிநரகிற்குச் செல்வதை விட பாவத்துக்குக் காரணமாக இருக்கும் கை தறிக்கப்படுவதும் கால் தறிக்கப்படுவதும் கண் பிடுங்கப்படுவதும் நல்லது என ஆண்டவர் கூறுகிறார். ஏனெனில் நாம் பரலோக வாழ்வாகிய முடிவில்லா வாழ்வைப்பெற்று மகிழ்வோம்.

எரிநரகின் வேதனை நிரந்தரமாக இருக்கும். எரிநரகில் அவர்களைத் தின்னும் புழுவும் சாகாது. நெருப்பும் அணையாது; அவர்களை வேதனையில் எந்நாளும் மூழ்கடிக்கும். எரி நரகில் நித்தியமும் இருக்க வேண்டும்; மனிதர், எரிநரகில் விழுவதற்குக் காரணம், அன்பில்லாத சுயநலமான வாழ்க்கை, அது கீழ்க்கண்ட தலையான பாவங்களில் வெளிப்படுகிறது.

1.அகங்காரம் 2.கோபம் 3.மோகம் ( விபசாரம்) 4. உலோபித்தனம் (ஈயாமை) 5.போசனப்பிரியம் 6.காய்மகாரம் (பொறாமை) 7.சோம்பல்





பூசைப்பலி போல் பாக்கிய செல்வம் புவியில் இல்லையே!
பரலோகத்தை உலகில் நாம் காண்கிறோம்.

# திருப்பலி பூசை

திருப்பலி பூசை என்பது இயேசு ஆண்டவருடைய சிலுவைப்பலியை புதுப்பித்து குருவானவர் நமக்கு வழங்குகிறார். தமது பரம தந்தையாகிய பிதாவிடம் ஒப்புக்கொடுக்கிறார். இயேசு ஆண்டவர் தமது இரத்தம் சிந்திய பலியை ஒப்புக்கொடுத்தார். இயேசு நாதர் சுவாமி திவ்விய பலி பூசையை ஏற்படுத்தினார். அப்பரசக் குணங்களுக்குள்ளே தமது சரீரத்தையும் இரத்தத்தையும் குருவானவர் வழியாக நமக்கு வழங்குகிறார்.

திருப்பலி பூசையின் ஆரம்பத்தில் குருவானவர் ஆண்டவரை நோக்கி மன்றாடுகிறார். எல்லாம் வல்ல இறைவன் நம் பாவங்களை மன்னித்து நம்மை முடிவில்லா (பரலோக) வாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக! என்று ஆண்டவர் நம்மை மோட்சத்திற்கு அழைத்துச் செல்ல குருவானவர் மன்றாடுகிறார். முடிவில்லா வாழ்வு என்பது நாம் பரலோகத்தில் வாழும் வாழ்வை, நிலை வாழ்வை, மோட்ச வாழ்வை குறிக்கிறது. அழியாத நித்திய வாழ்வாகும். நடுப்பூசைக்குப் பிறகு, மாதா சூசையப்பர் சகல புனிதர்கள் திருக்கூட்டத்தில் நாம் பரலோகத்தில் நிலையான வாழ்வில் தோழமை கொண்டு வாழ கடவுளை நோக்கி குருவானவர் மன்றாடுகிறார். பரலோகத்தில் சகல புனிதர்கள் திருக்கூட்டத்தில் நாம் தோழமை கொண்டு வாழப் போகிறோம் என்பது ஆபிரகாம், மோயீசன், புனித அந்தோணியார், புனித சவேரியா மற்றும் சகல புனிதர்களையும் நாம் மோட்சத்தில் பார்க்கப் போகிறோம்; பேசப் போகிறோம், இராயப்பர், அருளப்பர், தோமையார், மாதாவை காணப் போகிறோம் என்றாகிறது.

பரலோக வாழ்வு நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தரும். நாங்கள் நம்பியிருக்கும் பேரின்ப பரலோக வாழ்வை எங்களுக்குத் தந்தருளும் என்றும் குருவானவர் திருப்பலி பூசையில் மன்றாடுகிறார். மேலும் திருப்பலி பூசையில் பல இடங்களில் முடிவில்லா வாழ்வை வேண்டி ஆண்டவரை நோக்கி குருவானவர் மன்றாடுகிறார். நாம் பரலோகத்தில் கடவுளை முகமுகமாய் தரிசிக்கப் போகிறோம். மோட்சத்தில் துன்பம் இல்லை; பசியில்லை; தாகமில்லை; அழுகை, வெயில் இல்லை; மோட்ச வாசிகள் சகல வித பாக்கியங்களுடன் மிக்க மகிழ்ச்சியுடன் முடிவில்லா காலம் பரலோகத்தில் வாழ்வார்கள்.

இயேசு ஆண்டவர் மீதுள்ள நமது நம்பிக்கை பரலோக வாழ்வை உரிமைப் பேறாக அடைவோம் என்பதாகும்.

இயேசு ஆண்டவர் பெயரின் பொருட்டு வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தந்தையையோ, தாயையோ, பிள்ளைகளையோ, நில புலன்களையோ, விட்டுவிட்ட எவரும் நூறு மடங்காகப் பெறுவர். நிலை வாழ்வையும் உரிமைப்பேறாக அடைவர்.

## தெய்வீக உணவு - பரலோகத் திருவிருந்து

அழிந்து போகும் உணவுக்காக உழைக்க வேண்டாம். நிலை வாழ்வு மோட்ச வாழ்வு தரும் அழியாத உணவுக்காகவே உழையுங்கள். அவ்வுணவை மானிட மகன் உங்களுக்குக் கொடுப்பார். ஏனெனில் தந்தையாகிய கடவுள் அவருக்கே தம் அதிகாரத்தை அளித்துள்ளார் என்றார். வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே. கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு (பரலோக) வாழ்வு அளிக்கிறது என்றார். இயேசு அவர்களிடம் மோட்ச வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது. என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது. விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே என்று இயேசு கூறுகிறார். உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு, விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த இந்த உணவே. (மோட்ச) வாழ்வு தரும் உணவு நானே, இந்த உணவை எவராது உண்டால் அவர் என்றுமே வாழ்வார்; எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு பரலோகத்தில் வாழ்வதற்காகவே கொடுக்கிறேன் என்றார் இயேசு. எனது சதையை உண்டு என் இரத்தத்தைக் குடிப்பவர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளார். நானும் அவரை இறுதி நாளில் உயிர்த்தெழச் செய்வேன். எனது சதை உண்மையான உணவு; எனது இரத்தம் உண்மையான பானம். எனது சதையை உண்டு எனது இரத்தத்தை குடிப்போர் என்னோடு இணைந்திருப்பர்; நானும் அவர்களோடு இணைந்திருப்பேன். வாழும் தந்தை என்னை அனுப்பினார்; நானும் அவரால் வாழ்கிறேன். அது போல் என்னை உண்போரும் என்னால் (பரலோகத்தில்) வாழ்வர். விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு இதுவே. இது நம் முன்னோர் உண்ட உணவு போன்றது அல்ல. அதை உண்டவர்கள் இறந்து போனார்கள். இவ்வுணவை உண்போர் என்றும் (பரலோகத்தில்) வாழ்வர்.

- யோவான் 6:27 32-33, 35, 41, 50-51, 54-58

## ஆண்டவரின் திருவிருந்து - அப்பம் இயேசுவின் உடல்

இயேசு சீடர்களோடு உணவருந்திக் கொண்டிருந்த பொழுது, அப்பத்தை எடுத்து கடவுளைப் போற்றி அதை பிட்டுச் சீடருக்குக் கொடுத்து, இதைப் பெற்று உண்ணுங்கள்; இது எனது உடல் என்றார். பின்பு கிண்ணத்தை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அவர்களுக்குக் கொடுத்து இதில் உள்ளதை அனைவரும் பருகுங்கள். ஏனெனில் இது எனது உடன்படிக்கையின் இரத்தம். பலருடைய பாவ மன்னிப்புக்காகச் சிந்தப்படும் இரத்தம் என்கிறார்.

- மத்தேயு 26:26-28 மாற்கு 14:22-26 லூக்கா 22:15-20 1 கொரி 11:23-25

## கடவுளை நமது வீட்டிற்கு சுமந்து செல்கிறோம்

கடவுளாகிய இயேசு ஆண்டவர் தேவநற்கருணையில் வீற்றிருக்கிறார், நமது ஆன்மாவுக்கு தெய்வீக உணவாக இருக்கிறார். இயேசு ஆண்டவர் நம்முள்ளும் நாம் அவருள்ளும் தேவ நற்கருணையில் இணைகிறோம். நமக்கு பரலோக வாழ்வு தரக்கூடிய தெய்வீக உணவு தேவநற்கருணையாகும். இயேசு ஆண்டவருடைய சதையையும் இரத்தத்தையும் தேவ நற்கருணையில் அப்ப வடிவில் உண்டு மகிழ்கிறோம். தேவ நற்கருணை உட்கொள்பவர்களுக்கு ஆன்ம பசி இருக்காது. ஆண்டவர் சாகாத மருந்தாக நம்மிடம் வருகிறார். தேவ நற்கருணையில் அழியாத உணவாக ஆண்டவர் நம்மிடம் வருகிறார். நாம் பரிசுத்தமாக வாழ வேண்டும். நமது ஆன்மாவில் சாவான பாவம் இருக்கக் கூடாது. நமது ஆன்மாவில் ஆண்டவர் வீற்றிருக்கிறார். நமது கடவுளின் தாயாகிய தேவ அன்னை மரியாள் அவர்கள் உலகின் முதல் தேவநற்கருணைப்பேழையாக இருக்கிறார்கள்; முதல் ஆலயமாக இருக்கிறார்கள்; முதல் மோட்சமாகிய பரலோகமாகக் காட்சியளிக்கிறார்கள். தமது திருமகனிடம் சகல நலன்களும் பெற்று நமக்கு அளிக்கிறார்கள். கடவுளாகிய இயேசு ஆண்டவரை தேவநற்கருணையில் உட்கொள்ளும் நாம் கடவுளை சுமக்கும் பாக்கியம் பெறுகிறோம். நம் ஆன்மாவாகிய உள்ளத்தில் ஆண்டவர் குடியிருக்கிறார். நமது வீட்டிற்கு கடவுளை சுமந்து செல்கிறோம். கடவுள் நம்மை ஆசீர்வதிக்கிறார்; நம் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார். நமது பேரன் பேத்திகளை ஆசீர்வதிக்கிறார்.. நமது பேரன் பேத்திகளின் வருங்கால வாரிசுகளையும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆசீர்வதிக்கிறார். நாம் செல்லுமிடமெல்லாம் நம்மோடு ஆண்டவர் வருகிறார். ஒரே

நிபந்தனை நாம் சாவான பாவமற்ற பரிசுத்த வாழ்வு வாழ்ந்து ஆண்டவருடன் இணைந்து வாழ வேண்டும்.

### நாம் சாக மாட்டோம்
### பரலோகத்தில் வாழ்வோம்

தேவ நற்கருணை உட்கொள்ளும் நாம், தேவநற்கருணை பேழையாக மாறுகிறோம்; கடவுளின் ஆலயமாக மாறுகிறோம்; பரலோகமாக காட்சியளிக்கிறோம்; இயேசு ஆண்டவரின் கண்களைக் கொண்டு உலகை நாம் பார்க்கிறோம்; ஆண்டவர் நாம் பரலோகத்தில் வாழ வழிநடத்துகிறார். உலகிலேயே மேலான இன்பம் நாம் தேவநற்கருணையை பரிசுத்த நிலையில் உட்கொள்வதாகும். நாம் ஆண்டவரோடு இணைகிறோம். ஆண்டவர் பரலோகத்திலிருந்து இறங்கி வந்த (பரலோக) வாழ்வு தரும் உயிருள்ள உணவு. தெய்வீக உணவை உட்கொள்பவர்கள் என்றுமே சாகமாட்டார்கள், பரலோகத்தில் வாழ்வார்கள். முடிவில்லா காலம் புனிதர்கள் திருக்கூட்டத்தில் தோழமை கொண்டு, மகிழ்வுடன் பரலோகத்தில் வாழ்வோமாக!

### தேவநற்கருணை பரலோக விருந்து
### பாவ விமோசனம் அளிக்கும் அருமருந்து

நாம் தேவநற்கருணை உட்கொள்ளும் போது கடவுளாகிய இயேசு ஆண்டவர் நம்மோடு இணைகிறார், நாம் இயேசு ஆண்டவருடன் இணைகிறோம். பரலோக வாழ்வளிக்கும் தெய்வீக உணவு நானே என்று இயேசு ஆண்டவர் கூறுகிறார். தேவநற்கருணை என்னும் தெய்வீக உணவை இயேசு ஆண்டவர் நமக்கு குருக்கள் வழியாக வழங்குகிறார். பரலோகத்திலிருந்து இறங்கி வந்த விண்ணக வாழ்வு தரும் உணவு நானே என்று இயேசு ஆண்டவர் கூறுகிறார். தேவநற்கருணை உண்பவர்கள் என்றுமே சாகமாட்டார்கள். பரலோகத்தில் முடிவில்லா காலம் வாழ்வார்கள் தேவநற்கருணை நமக்கு ஆன்ம உயிர் தரும் உணவு. இயேசு ஆண்டவர் தனது தெய்வீக திருக்கரங்களால் பரலோக நலன்களாலும் உலக நலன்களாலும் சகல நலன்களாலும் நம்மை ஆசீர்வதிப்பாராக! இயேசு ஆண்டவர் கூறுகிறார். நானே வானின்று இறங்கிய உயிருள்ள உணவு உலகம் முடியும் வரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்




உலகிலேயே மேலான இன்பம் நாம் தேவ நற்கருணை
உட்கொள்வதாகும். கடவுளை சுமக்கும் பாக்கியம் பெறுகிறோம்.
நமது வீட்டிற்கு கடவுளை சுமந்து
செல்கிறோம், இயேசு ஆண்டவர் அனைவரையும் ஆசீர்வதிக்கிறார்.

ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டவர்களுக்கு தன் உடலையே உயிரளிக்கும் உணவாகக் கொடுக்கிறார், இயேசு ஆண்டவர் தந்தையின் அளவற்ற அன்பைக்காட்ட வந்த கிறிஸ்து; நம்மீது அன்பு நிறைந்த கருணையைப் பொழிகிறார். அவரது இரக்கத்தால் அவரையே மென்று சாப்பிடும் பாக்கியம் பெற்றுள்ளோம். கிறிஸ்துவைக் காணும் நமது கண்கள் பேறு பெற்றவை. அவருடைய உயிருள்ள வார்த்தையைக் கேட்கும் நம் காதுகள் பேறு பெற்றவை.

## இயேசுவே பரலோக தெய்வீக திருவிருந்து

விண்ணிலிருந்து வந்த இயேசு அவராகவே வாழ நம்மை அழைக்கிறார். விண்ணிலிருந்து வந்து நம்மிடையே குடிகொள்ளும் தெய்வம். தன்னையே உணவாகத் தந்த தெய்வம் தியாகத்தின் திருவுருவம் அன்பின் பிறப்பிடம் இயேசு.

ஆண்டவர் உயிரில் பங்குபெறும் நாம் அவரது தெய்வீக உறவிலும் பங்கு பெறுகிறோம். தேவநற்கருணையில் நாம் உண்டு மகிழ்ந்து, அவராக நாம் மாற நம்மிடையே குடிகொள்ளும் தெய்வம், இயேசு. நாம் பரலோக வாழ்வைப் பெற்று மகிழ, நமது பாவங்களுக்காக சிலுவைப்பாடுகளை ஏற்றுக்கொண்டார். தன்னையே நமக்கு உணவாகக் கொடுத்த தெய்வம்.

## தேவநற்கருணை கத்தோலிக்கக் கிறிஸ்தவ வாழ்வின் மையம்! ஊற்று!

தேவநற்கருணை கத்தோலிக்கத் திருச்சபையின் மையம் – கிறிஸ்தவ வாழ்வின் ஊற்று. உலகில் பரலோக வாழ்வின் முன் சுவையாக தேவநற்கருணையை ஆண்டவர் நமக்கு வழங்குகிறார்; உலகிலுள்ள நமது நோய், துன்பம், கவலைகள், சகல தீவினைகளையும் ஆண்டவர் போக்குகிறார். சாத்தானிடமிருந்து நம்மைப் பாதுகாக்கிறார். தீய ஆவியிடமிருந்தும் நம்மை காப்பாற்றி வழிநடத்துகிறார். இயேசு தனது பரிசுத்த ஆவியை நம்மீது பொழிகிறார். உலகம், பசாசு, சரீரம் ஆகியவை மனிதர்களை பாவத்தில் விழச்செய்து எரிநரகிற்குப் போக வேண்டிய நிலை ஏற்படுகிறது. நாம் பரலோகம் செல்ல, நாம் உலகில் பரிசுத்தமாக வாழ வேண்டும். தேவநற்கருணை உட்கொள்ள வேண்டும். ஆண்டவர் மேல் நமது நம்பிக்கையை வைக்க வேண்டும். அப்பொழுது இயேசு ஆண்டவர் நம்மை பரலோக வாழ்வுக்கு அழைத்துச்செல்வார்.

தேவநற்கருணைதான் கத்தோலிக்கக் கிறிஸ்தவ வாழ்வின் மையம்! இதற்கு இணையானதும் நிகரானதும் எந்தக் கொண்டாட்டமும் இல்லை. தேவநற்கருணை திருச்சபையின் வாழ்வு. ஆண்டவரின் தெய்வீக உணவை உட்கொள்ளும் நாம் அவருடைய சாயலைத் தாங்கி, **வாழ்வது நானல்ல என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்** என்ற மனநிலையுடன், இயேசுவாக வாழ அழைக்கிறார். நமது வாழ்வு கிறிஸ்துவின் சிந்தனைக்கொப்ப வாழ சமுதாயத்தில் மற்றவர்களுக்குப் பயன்படும் வண்ணமாக அமைய வேண்டும் இதுவே நமது பரலோக வாழ்வுக்கு அடித்தளமாக அமைய வேண்டும்.

தேவநற்கருணை உட்கொள்ளும் நாம் இயேசு ஆண்டவருடன் இணைந்து இந்த உலகிலேயே பரலோக வாழ்வு வாழ்வோமாக! புனிதர்கள் திருக்கூட்டத்தில் இணைந்து புனிதர்களாக மாறுவோமாக! புனிதர்களோடு தோழமை கொண்டு வாழ்வோமாக! இயேசு ஆண்டவர் குருக்களுக்கு கற்பிக்கிறார் – **நீங்களும் அப்பத்தை எடுத்து, நேரே நமது சரீரமாக்கி, மக்கள் வாங்கி புசிக்கக் கொடுங்கள்** என்று இயேசு கூறுகிறார்.

அப்பம் போல் வெளியே தோன்றிட, அது ஆண்டவர் உடலாயிருக்கிறது, எப்படி இது நடக்குமோ, எனது புத்திக்குள் அடங்காது. தேவநற்கருணை அரிய ஒப்பற்ற பாவமன்னிப்பு மருந்து. நமது பாவங்களைப் போக்கும் தெய்வீக பரலோகத் திருவிருந்து. பரலோக உணவைக் கண்டு அருந்துவோருக்கு மிகவும் நன்று. அவர்கள் பரலோக வாழ்வை அடைவார்கள்.

# கடவுள் தமது ஒரே மகன் இயேசுவை உலகிற்கு அனுப்பினார்

பரம தந்தையாகிய கடவுள், தமது ஒரே மகன் இயேசு ஆண்டவரை, நம்மை பரலோக வாழ்வுக்கு அழைத்துச் செல்ல உலகிற்கு அனுப்பினார்; நமது நம்பிக்கையால் நாம் மோட்ச வாழ்வை உரிமையாக்கிக் கொள்ளுகிறோம்; தொடக்கத்தில் வாக்கு இருந்தது. அவ்வாக்கு கடவுளோடு இருந்தது. அவரிடம் வாழ்வு (பரலோக வாழ்வு) இருந்தது. அவ்வாழ்வு மனிதருக்கு ஒளியாய் இருந்தது. அவரிடம் நம்பிக்கை கொண்டு அவரை ஏற்றுக்கொண்ட ஒவ்வொருவருக்கும் அவர் கடவுளின் பிள்ளைகள் ஆகும் உரிமையை அளித்தார். உடல் இச்சையால் அவர்கள் பிறக்கவில்லை; மாறாகக் கடவுளால் பிறந்தவர்கள். வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார் .

- யோவான் 1:1,4 12, 13, 14

### நமது தந்தையும் கடவுளும் என்று இயேசு அழைக்கிறார்

என் தந்தையும், உங்கள் தந்தையும், என் கடவுளும், உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன் எ ன்றார் இயேசு

யோவான் 20:17

கடவுள் நமது தந்தையாக உள்ளத்தில் வீற்றிருக்கிறார்; நாம் கடவுளிடமிருந்து பிறந்த புனித மக்கள்; கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் பாவம் செய்ய மாட்டார்கள்; புனிதர்களாக வாழ்வார்கள்.

### நிலை வாழ்வாகிய பரலோக வாழ்வு

கடவுளாகிய இயேசு ஆண்டவர் கூறுகிறார் - உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்.

- லூக்கா 10:20

மேலும் உயிர்த்தெழுதலும், மோட்ச வாழ்வும் நானே; என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார். என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார்.

யோவான் 11:25-26

உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். என்னை நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். (பரலோக) வாழ்வு தரும் உணவு (தேவ நற்கருணை) நானே

யோவான் 6:47-48

பரம தந்தையாகிய கடவுளிடம் இயேசு ஆண்டவர் இவ்வாறு வேண்டுகிறார்

நீர் அவரிடம் (இயேசுவிடம்) ஒப்படைத்தவர்கள் அனைவருக்கும் அவர் நிலை வாழ்வை (பரலோக வாழ்வை) அருளுமாறு மனிதர் அனைவர் மீதும் அவருக்கு அதிகாரம் அளித்துள்ளீர். உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும், நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலை வாழ்வு.

- யோவான் 17:2-3

### கடவுளுக்கேற்ற செயல்

இயேசுவை நோக்கி யூதர்கள் எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். இயேசு அவர்களைப் பார்த்து கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கேற்ற செயல் என்றார்.

- யோவான் 6:28-29

### நம்பிக்கையினால் நிலை வாழ்வு

மகனைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் நிலை வாழ்வு (பரலோக வாழ்வு) பெற வேண்டும் என்பதே என் தந்தையின் திருவுளம். நானும் இறுதி நாளில் அவர்களை உயிர்த்தெழச் செய்வேன்.

- யோவான் 6:40

### ஆபிரகாம் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்

முதுபெரும் தந்தை ஆபிரகாம் இவ்வுலகில் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர். இவருக்கு முன்பே கடவுளாகிய இயேசு ஆண்டவர் இருக்கிறார். யூதர்கள் அவரை நோக்கி; நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயா என்று கேட்டார்கள்; இயேசு அவர்களிடம், ஆபிரகாம் பிறப்பதற்கு முன்பே நான் இருக்கிறேன், என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்றார்.

- யோவான் 8:57 58

## வாழ்வு தரும் வார்த்தை

என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பிய வரை நம்புவோர், நிலை வாழ்வை கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு (எரிநரகிற்கு) உள்ளாக மாட்டார்கள்; ஏற்கெனவே சாவையும் எரிநரகையும் கடந்து, வாழ்வுக்கு (மோட்ச வாழ்வுக்கு) வந்து விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்.

யோவான் 5:24

முதல் பாப்பரசராகிய சீமோன் பேதுரு, ஆண்டவரே! நாங்கள் யாரிடம் போவோம். **நிலை வாழ்வு** அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன என்றார்

யோவான் 6:68

## விண்ணுலகில் செல்வம்

மண்ணுலகில் உங்களுக்கெனச் செல்வத்தை சேமித்து வைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அழித்துவிடும்; திருடரும் அதைக் கன்னமிட்டுத் திருடுவர் . ஆனால் விண்ணுலகில் உங்கள் செல்வத்தை சேமித்து வையுங்கள். அங்கே பூச்சியோ துருவோ அழிப்பதில்லை. திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.

- மத்தேயு 6:19 -21 24

## இயேசுவின் மக்கள் நிலை வாழ்வைப் பெறுவர்

என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன; எனக்கு அவற்றை தெரியும்; அவையும் என்னைப்பின் தொடர்கின்றன. நான் அவற்றிற்கு நிலை வாழ்வை (மோட்ச வாழ்வை) அளிக்கிறேன். அவை என்றுமே அழியா, அவற்றை எனது கையிலிருந்து யாரும் பறித்துக் கொள்ள மாட்டார்; அவற்றை எனக்கு அளித்த என் தந்தை அனைவரையும் விடப்பெரியவர். அவற்றை என் தந்தையின் கையிருந்து யாரும் பறித்துக் கொள்ள இயலாது. நாம் கடவுளின் கையிலிருக்கிறோம்; நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம் என்றார்

- யோவான் 10:27-30

மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலை வாழ்வைப் பெறுவர். நம்பிக்கை கொள்ளாதோர் பரலோக வாழ்வை காணமாட்டார். மாறாக கடவுளின் சினம் அவர்கள் மேல் வந்து சேரும், எரிநரகில் புதைக்கப்படுவார்கள்.

யோவான் 3:36

இயேசு ஆண்டவர் குற்றவாளியான நல்ல கள்வரிடம் கூறியது; நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் (மோட்ச வீட்டில்) என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்

- லூக்கா 23:43

**அன்பு செய்வதே வாழ்வடைய வழி**

திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து, அவரைச் சோதிக்கும் நோக்குடன், போதகரே! நிலை வாழ்வை (பரலோக வாழ்வை) உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டார். அதற்கு இயேசு, திருச்சட்டநூலில் என்ன எழுதியிருக்கிறது; அதில் நீர் என்ன வாசிக்கிறீர், என்று கேட்டார். அவர் மறுமொழியாக, உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனத்தோடும், உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக! உன் மீது அன்பு கூர்வது போல், உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக! என்று எழுதியுள்ளது என்றார். இயேசு சரியாய்ச் சொன்னீர்; அப்படியே செய்யும்; அப்பொழுது மோட்சத்தில் வாழ்வீர், என்றார்.

- லூக்கா 10:25-37 மத்தேயு 22:34 40 மாற்கு 12:28-34

இயேசு ஆண்டவர் தொடர்ந்து நல்ல சமாரியர் உதவி செய்வதை குறிப்பிடுகிறார்; நாம் மோட்சம் செல்ல மற்றவர்களுக்கு உதவி செய்து வாழ வேண்டும் என்று ஆண்டவர் நமக்கு கற்பிக்கிறார், துன்புறுவோருக்கு உதவி செய்து வாழ்வதே நமது பரலோக வாழ்வாகும்.

**கடவுளன்பு பிறரன்பு**

கடவுள் முதலில் நம்மிடம் அன்பு செலுத்தியதால், நாமும் அவரிடம் அன்பு செலுத்துகிறோம். கடவுளிடம் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக் கொண்டு தம் சகோதர சகோதரிகளை வெறுப்போர் பொய்யர்; தம் கண் முன்னேயுள்ள சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்தாதோர், கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது. கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதர சகோதரிகளிடமும் அன்பு செலுத்த வேண்டும், இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை.

– 1 யோவான் 4:19:21.

இயேசு ஆண்டவரிடம் நிலை வாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள் நாம் கடவுளிடம் அன்பு கூற வேண்டும். நமக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூற வேண்டும். நம் வாழ்வில் அன்பு செழிக்குமானால் நாம் மோட்ச வாழ்வை உரிமையாக்கிக் கொள்வோம். கடவுள் மேல் அன்பு கூர்வது என்பது இயேசு ஆண்டவரை நமது இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் படி வாழ வேண்டும். ஆண்டவரின் வார்த்தையின் படி வாழ்ந்து மீட்பை நாம் முன் மாதிரிகையாக வாழ்ந்து காட்ட வேண்டும். புனிதர்கள் திருக்கூட்டத்தில் நாமும் இணைவோமாக! நாமும் புனிதர்களாக மாறுவோமாக! நமக்கு அடுத்திருப்பவர் மீது அன்பு கூர்வது என்பதும், மற்ற மனிதரையும் நம்மைப்போல் நினைந்து அன்பு செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு அன்பாகிய நன்மைகள் பல செய்ய வேண்டும். தீமை செய்யக் கூடாது நமக்கு விரோதமாகக் குற்றம் செய்பவர்களை நாம் மன்னிக்க வேண்டும் நாம் பிறரை மன்னிக்கும் போது கடவுள் நமது குற்றங்களை மன்னிக்கிறார் நமக்கு தீமை செய்பவர்களுக்கும் நாம் நன்மை செய்ய வேண்டும் ஆண்டவரிடம் மற்றவர்களுக்காக செபிக்க வேண்டும் எல்லோருக்கும் நற்செய்தியை அறிவிக்க வேண்டும் ஏழைகளுக்கும் துன்புறுவோருக்கும் தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும் கடவுளுக்கு உகந்த உயர்ந்த செயல்களாகும் நாம் பிறருக்கு செய்யும் உதவிகளுக்கு ஆண்டவர் நமக்கு ஒப்பற்ற பரிசாகிய பரலோக வாழ்வை வழங்குகிறார்; கடவுள் அன்பும் பிறர் அன்பும் அடிப்படையானது.

## இயேசுவே வழியும் உண்மையும் வாழ்வும்

கடவுளாகிய இயேசு ஆண்டவர் சொல்கிறார்; நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள்; என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்; என் தந்தை வாழும் இடத்தில் பரலோகத்தில் உறைவிடங்கள் பல உள்ளன; நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன்; அப்போது நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும் இருப்பீர்கள். நான் போகுமிடத்துக்கு வழி உங்களுக்கு தெரியும் என்றார். தோமா, ஆண்டவரே நீர் எங்கே போகிறீர் என்றே எங்களுக்கு தெரியாது. அப்படியிருக்க நீர் போகும் இடத்துக்கான வழியை நாங்கள் எப்படி தெரிந்து கொள்ள இயலும்? என்றார். இயேசு அவரிடம், **வழியும் உண்மையும் வாழ்வும் நானே! என் வழியாய் அன்றி எவரும் தந்தையிடம் வருவதில்லை .**

– யோவான் 14:1–6

தந்தையாகிய கடவுள் பரலோகத்தில் இருக்கிறார்; இயேசு ஆண்டவர் நாம் பரலோகத்திற்கு செல்லும் வழியாக இருக்கிறார்.



## இயேசுவை அறிவது தந்தையை அறிவதாகும்

இயேசு ஆண்டவர் பேசுகிறார் : நீங்கள் என்னை அறிந்திருந்தால் என் தந்தையையும் அறிந்திருப்பீர்கள் இது முதல் நீங்கள் தந்தையை அறிந்திருக்கிறீர்கள்; அவரைக் கண்டுமிருக்கிறீர்கள் என்றார். அப்போது பிலிப்பு அவரிடம்

ஆண்டவரே! தந்தையை எங்களுக்கு காட்டும் அதுவே போதும் என்றார். இயேசு அவரிடம் கூறியது, பிலிப்பே! இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும், நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பதாகும். அப்படியிருக்க, தந்தையை எங்களுக்கு காட்டும் என்று நீ எப்படி கேட்கலாம்? நான் தந்தையினுள்ளும் தந்தை என்னுள்ளும் இருப்பதை நீ நம்புவதில்லையா? நான் உங்களுக்கு கூறியவற்றை நானாகக் கூறவில்லை. என்னுள் இருந்து கொண்டு செயலாற்றுபவர் தந்தையே; நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள்; என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டாலும் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். நான் செய்யும் செயல்களை என்னிடம் நம்பிக்கை கொள்பவரும் செய்வார்; ஏனெனில் நான் தந்தையிடம் போகிறேன் என உங்களுக்குச் சொல்கிறேன்"

- யோவான் 14:7-12

### யோவான் கூறுகிறார் நிலை வாழ்வு பற்றி

வெளிப்படுத்தப்பட்ட அந்த பரலோக வாழ்வை நாங்கள் கண்டோம் அதற்குச் சான்று பகிர்கிறோம் தந்தையோடு இருந்ததும் எங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டதுமான அந்த நிலை வாழ்வு (மோட்ச வாழ்வு) பற்றி உங்களுக்கு அறிவிக்கிறோம்.

- யோவான் 1:2-4

### இயேசுவின் வார்த்தைகள்

விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும் ஆனால் என் வார்த்தைகள் ஒழியவே மாட்டா

- மத்தேயு 24:35;

விபசாரம் செய்யாதே எனக் கூறக்பட்டிருப்பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள், ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன்; ஒரு பெண்ணை இச்சையுடன் நோக்கும் எவரும் தம் உள்ளத்தால் ஏற்கெனவே அப்பெண்ணோடு விபச்சராம் செய்தாயிற்று.

- மத்தேயு 5:27-28

**பகைவரிடம் அன்பு காட்டுதல்**
**- தீமைக்கு பதில் நன்மை செய்தல்**

நான் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கும் உங்களுக்கு கூறுகிறேன், உங்கள் பகைவரிடம் அன்பு கூறுங்கள்; உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை சபிப்போருக்கு ஆசி கூறுங்கள்; உங்களை இகழ்ந்து பேசுவோருக்கு இறைவனிடம் வேண்டுங்கள். உங்களை ஒரு கன்னத்தில் அறைபவருக்கு, மறு கன்னத்தையும் திருப்பிக்காட்டுங்கள். உங்கள் மேலுடையை எடுத்துக் கொள்பவர், உங்கள் அங்கியையும் எடுத்துக் கொள்ளப்பார்த்தால் அவரைத் தடுக்காதீர்கள். உங்களிடம் கேட்கும் எவருக்கும் கொடுங்கள்; உங்களுடைய பொருட்களை எடுத்துக் கொள்வோரிட மிருந்து, அவற்றைத் திருப்பிக் கேட்காதீர்கள். பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். உங்களிடம் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்தினால் உங்களுக்கு வரும் நன்மை என்ன? பாவிகளும் தங்களிடம் அன்பு செலுத்துவோரிடம் அன்பு செலுத்துகிறார்களே! நீங்கள் உங்கள் பகைவரிடமும் அன்பு செலுத்துங்கள். அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; நீங்கள் உன்னத கடவுளின் மக்களாய் இருப்பீர்கள். ஏனெனில் அவர் நன்றி கெட்டோருக்கும், பொல்லாதாருக்கும், நன்மை செய்கிறார்; உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்.

லூக்கா 6:27-36

இயேசு ஆண்டவர் நமக்கு தீமை செய்பவர்களுக்கும், நன்மை செய்யக்கற்பிக்கிறார்; வசை மொழி கூறுபவர்களுக்கு ஆசிமொழி கூற ஆண்டவர் அழைக்கிறார் நம்மை வெறுப்போர் சபிப்போர் இகழ்ந்து பேசுபவர்களுக்கும் ஆசி வழங்க இயேசு நம்மை அழைக்கிறார் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் பகைவர்களுக்கும் அன்பு செய்வார்கள் நமது வானக தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பது போல் நாமும் இரக்கமுள்ளவராய் இருப்போம் மற்றவர்கள் நமக்கு நன்மைகள் செய்வதை எதிர்பார்க்கிறோம் அதே நன்மைகளை அனைவருக்கும் நாம் செய்ய வேண்டும் கடவுள் நம்மீது நன்மைகளைப் பொழிகிறார் ஆண்டவர் தீயோருக்கும் நன்மை செய்கிறார் மழையைப் பொழிகிறார் நாம் எவருக்கும் தீமைகள் செய்யவே கூடாது தீமைகள் சாத்தானுக்குரியது தீமைகள் எரிநரகமாகும்

### பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள்

பிறர் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள். அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள். மற்றவர்களைக் கண்டனம் செய்யாதீர்கள். அப்போது தான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள். மன்னியுங்கள் மன்னிப்புப் பெறுவீர்கள். கொடுங்கள் உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கி குலுக்கி சரிந்து விழும் படி நன்றாய் அளந்து உங்கள் மடியில் போடுவார்கள். நீங்கள் எந்த அளவையால் அளக்கிறீர்களோ அதே அளவையால் உங்களுக்கும் அளக்கப்படும். நீங்கள் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையைப் பார்க்காமல் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை கூர்ந்து கவனிப்பதேன்? உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை நீங்கள் பார்க்காமல் இருந்து கொண்டு உங்கள் சகோதரர் அல்லது சகோதரியிடம் உம் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்கட்டுமா என்று எப்படிக் கேட்க முடியும்? வெளி வேடக்காரரே முதலில் உங்கள் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுத்து எறியுங்கள். அதன் பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் மரக்கட்டையை எடுத்து எறியுங்கள் அதன் பின் உங்கள் சகோதரர் அல்லது சகோதரியின் கண்ணில் இருக்கும் துரும்பை எடுக்க உங்களுக்கு தெளிவாய்க் கண் தெரியும்.

லூக்கா 6:37 -38 41-42

கடவுள் திருமுன் நாம் எல்லோரும் பாவிகளாக குற்றவாளிகளாக இருக்கிறோம். நாம் குற்றவாளிகளாக இருப்பதால் மற்றவர்களை பாவிகள் குற்றவாளிகள் என்று தீர்ப்பிடவும் புறணி பேசவும் தகுதியற்றவர்களாக இருக்கிறோம். மறறவர்களைப் பற்றி இழிவாகப் பேசுவது பாவமாகும். மற்றவர்களை நாம் கண்டனம் செய்தால் நாமும் கண்டனத்துக்கு ஆளாவோம். நமக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை மன்னிக்க வேண்டும். நாம் மற்றவர்களை மன்னிக்கும் போதுதான் ஆண்டவர் நமது குற்றங்களை மன்னிக்கிறார். நம்மிடம் இருப்பதை மற்றவர்களுக்குக் கொடுப்பதால் குறைந்துபோகும் என்பது மனிதனின் எண்ணம். ஆனால் கொடுக்கிறவர்கள் மிகுதியாகப் பெற்றுக்கொள்வார்கள் என்பது கடவுளுடைய வாக்குறுதி. ஆகவே தேவையிலிருப்போருக்கு மகிழ்ச்சியுடன் கொடுப்போமாக. தாராளமாகக் கொடுப்பவர்கள் அதன் பலனை இயேசுவிடம் பெறுவார்கள் அன்னை தெரசா அவர்களை முன் மாதிரியாகக் கொண்டு வாழ்வோம். ஏழைகளை ஆதரித்து உதவி செய்து வாழ்வோமாக! உங்கள் கண்ணில் உத்திரம் போன்ற மரக்கட்டையாகிய சாவான பாவம் மூடிக்கொண்டிருக்கிறது. இதைக் கவனியாமல் மற்றவர்கள் கண்ணிலுள்ள துரும்பு போன்ற குற்றங்களை பெரிதுபடுத்துகிறோம். முதலில் நம் பாவங்களை விலக்கி வாழ்வோம். நாம் ஆண்டவர் வார்த்தையின் படி பரிசுத்தமாக வாழும் போது மற்றவர்களும் நம்மைப்பார்த்து பரிசுத்தமாக வாழ்வார்கள். பரலோக வாழ்வை நாம் உரிமையாக்கி கொள்வோமாக!

### உடலுக்கு விளக்கு கண்தான்

உங்கள் கண்தான் உடலுக்கு விளக்கு. உங்கள் கண் நலமாயிருந்தால் உங்கள் உடல் முழுவதும் ஒளி பெற்றிருக்கும். அது கெட்டுப்போனால் உங்கள் உடல் இருளாய் இருக்கும்.

லூக்கா 11:34 மத்தேயு 6:22 23

நாம் கண்களை பரிசுத்தமாக பாதுகாத்து உலகில் பாவமற்ற வாழ்வு வாழ வேண்டும்

### விபசாரத்தில் பிடிபட்ட பெண்

மறை நூல் அறிஞரும் பரிசேயரும் விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை கூட்டிக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தி, போதகரே இப்பெண் விபசாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிபட்டவள். இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது

மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்? என்று கேட்டனர். அவர்கள் அவரை விடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால் அவர் நிமிர்ந்து பார்த்து, **உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண் மேல் கல் எறியட்டும்** என்று அவர்களிடம் கூறினார். மீண்டும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார். அவர் சொன்னதைக் கேட்டதும் முதியோர் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக அவர்கள் யாவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். இயேசு நிமிர்ந்து பார்த்து, அம்மா அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா? என்று கேட்டார். அவர் இல்லை ஐயா என்றார். இயேசு அவரிடம், நானும் தீர்ப்பளிக்கவில்லை; நீர் போகலாம்; இனிப் பாவம் செய்யாதீர் என்றார்.

யோவான் 8:4-5 7-11

ஒருவரும் கல் எறியாத காரணத்தால், எல்லோரும் பாவிகள் என்பது உறுதியாகிறது. ஆகவே ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்துவது பாவமாகும். இயேசு ஆண்டவர் முன்பு, எல்லோரும் பாவிகளாக குற்றவாளிகளாக இருக்கிறோம்; மற்றவர்களை குற்றம் குறைகள் கூறுகிறோம். உங்களில் ஒரு தவறும், குற்றமும் இல்லாவிட்டால் மட்டுமே, மற்றவர்களைக் குற்றஞ்சாட்டலாம். மற்றவர்களை குற்றம் சுமத்துவதே பாவமாகும். நாம் குற்றவாளிகளாக இருந்து கொண்டு, மற்றவர்களை குற்றம் சாட்டுவது, புறணி பேசுவது "பாவம்" என்று ஆண்டவர் கூறுகிறார். பொதுவாக மனிதர்கள் அனைவரும், பாவிகளாகத் தான் இருக்கிறார்கள்; கடவுள் ஆசியால் புனிதர்களாக மாறுகிறார்கள்; ஆண்டவரின் தெய்வீக வார்த்தைகளை நாம் கடைப்பிடித்து வாழும்போது, கடவுளின் மக்களாக ஒளி வீசிப்பிரகாசிக்கிறோம்.

- லூக்கா 15:7

## தன்னலம் துறந்து வாழவேண்டும்

இயேசு ஆண்டவர், மக்களிடமும், சீடர்களிடமும், "என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தம் சிலுவையை தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்" என்றார்.

- மாற்கு 8:34.

## மனம் திரும்பினால் மட்டற்ற மகிழ்ச்சி

மனம் மாறத் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து, விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும் என நான் (இயேசு) உங்களுக்குச் சொல்கிறேன்.

## உலகத் துன்பங்கள், வியாதிகள், கவலைகளுக்கு அடிப்படைக் காரணம் நமது பாவங்களாகும்.

முப்பத்தெட்டு ஆண்டுகாளாக உடல் நலம் அற்றிருந்த ஒருவரை இயேசு குணப்படுத்தினார். திரும்ப நலமடைந்தவரை அவர் கோவிலில் கண்டு, "இதோ பாரும், நீர் நலமடைந்துள்ளீர். இதை விடக் கேடானது எதுவும் உமக்கு நிகழாதிருக்க, "இனிப்பாவம் செய்யாதீர்" என்றார். உலகில் மனிதர்களுக்கு வரக் கூடிய சகல வியாதிகளுக்கும், துன்ப துயரங்களுக்கும், கவலைகளுக்கும் அடிப்படை காரணம், நமது பாவங்களாகும். பாவங்கள் எரிநரகில் நம்மைப் புதைக்கும்; நாம் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக வாழ வேண்டும்.

– யோவான் நற்செய்தி 5:14

இயேசுவின் வார்த்தையைக் கடைபிடிப்போர் சாக மாட்டார்கள்; மோட்சத்தில் வாழ்வார்கள்.

என் வார்த்தையைக் கடைபிடிப்போர் என்றுமே சாக மாட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

– யோவான் 8:51

பாவிகளுக்குக் கடவுள் செவிசாய்ப்பதில்லை; இறைப் பற்றுடையவராய், கடவுளின் திருவுளப்படி நடப்பவருக்கே, அவர் செவி சாய்க்கிறார் என்பது நமக்குத் தெரியும் .

– யோவான் 9:31

### இயேசு போதகர், ஆண்டவர்

நீங்கள் என்னை போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள்; நீங்கள் அவ்வாறு கூப்பிடுவது முறையே; நான் போதகர் தான்; ஆண்டவர் தான்!

– யோவான் 13:13

நீங்கள் என்னுள்ளும், என் வார்த்தைகள் உங்களுள்ளும், நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்.

– யோவான் 15:7

## அன்புக் கட்டளை

"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல, நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும்" என்பதே என் கட்டளை.

- யோவான் 15:12

## உலகில் துன்பங்கள் உண்டு

உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு; எனினும் துணிவுடன் இருங்கள்; நான் உலகின் மீது வெற்றி கொண்டு விட்டேன் என்றார். இயேசு.

- யோவான் 16:33

## அன்பும் மன்னிப்பும்

நான் உங்களுக்குச் சொல்கிறேன்; உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்; இப்படிச் செய்வதால், நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள்; ஏனெனில், அவர் நல்லோர் மேலும், தீயோர் மேலும், தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார்; நேர்மையுள்ளோர் மேலும், நேர்மையற்றோர் மேலும் மழை பெய்யச் செய்கிறார்.

- மத்தேயு 5:44-45

## மனிதர்களை மன்னியுங்கள் கடவுள் மன்னிப்பார்

மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை, நீங்கள் மன்னிப்பீர்களானால், உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்; மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில், உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.

- மத்தேயு 6:14-15

## யாருக்கு அஞ்ச வேண்டும்?

ஆன்மாவைக் கொல்ல இயலாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம்; ஆன்மாவையும், உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கு அஞ்சுங்கள்.

- மத்தேயு 10:28

என் நண்பர்களாகிய உங்களுக்கு நான் சொல்கிறேன்; உடலைக் கொல்வதையன்றி, வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்ச வேண்டாம்; நீங்கள் யாருக்கு அஞ்ச வேண்டுமென, நான் உங்களுக்கு எடுத்துக் காட்டுகிறேன்; கொன்ற பின் நரகத்தில் தள்ள அதிகாரமுள்ளவருக்கே, அஞ்சுங்கள்; என நான் உங்களுக்குச் சொல்கிறேன்!

– லூக்கா 12:4-5

### மன்னியுங்கள் மன்னிக்கப்படுவீர்கள்

உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதர சகோதரிகளை மனமாற மன்னிக்காவிட்டால், விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்.

– மத்தேயு 18:35

நாம் குற்றவாளிகளாக இருந்து கொண்டு மற்றவர்களை குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கக் கூடாது

பிறரை குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்காதீர்கள்; அப்போது தான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாக மாட்டீர்கள்; மற்றவர்களை கண்டனம் செய்யாதீர்கள்; அப்போது தான் நீங்களும் கண்டனத்துக்கு ஆளாக மாட்டீர்கள்; மன்னியுங்கள்; மன்னிப்புப் பெறுவீர்கள்

– லூக்கா 6:37

### பாவசங்கீர்த்தனம் என்னும் அருள்சாதனம்

இயேசு ஆண்டவர், சீடர்கள் மேல் ஊதி, தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். எவருடைய பாவங்களை, நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும், எவருடைய பாவங்களை, மன்னியாதிருப்பீர்களோ அவை மன்னிக்கப்படா என்றார்.

– யோவான் 20:22-23

### அன்பும் ஒற்றுமையும்

இயேசு ஆண்டவர் சொல்கிறார்: எல்லோரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே! நீர் என்னுள்ளும், நான் உம்முள்ளும் இருப்பது போல் அவர்களும் நம்முள் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர்! என்று உலகம் நம்பும்.

– யோவான் 17:21

### நாம் கடவுளுக்கு உரியவர்கள்

வாழ்ந்தாலும், நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; இறந்தாலும், ஆண்டவருக்கென்றே இறக்கிறோம்; ஆகவே வாழ்ந்தாலும், இறந்தாலும், நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம்.

- உரோமையர் 14:8

### இயேசுவோடு இணைந்த நிலை வாழ்வு

நீங்கள் பாவத்தினின்று விடுதலை பெற்று, கடவுளுக்கு அடிமையாகிவிட்டீர்கள்; இதனால் நீங்கள் காணும் பயன், தூயவாழ்வு; இதன் முடிவு நிலை வாழ்வு (பரலோக வாழ்வு); பாவத்துக்குக் கிடைக்கும் கூலி (நரகம்); சாவு. மாறாகக் கடவுள் கொடுக்கும் அருள்கொடை, நம் ஆண்டவர் கிறிஸ்து இயேசுவோடு இணைந்து வாழும் நிலை வாழ்வு (மோட்ச வாழ்வு) .

- உரோமையர் 6:22, 23

### நமது துன்பங்கள் பரலோக மகிமை

இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள், எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படபோகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை என நான் எண்ணுகிறேன்; இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதை காண்பதற்காகப் படைப்பே பேராவலோடு காத்திருக்கிறது.

- உரோமையர் 8:18-19

### கிறிஸ்தவ வாழ்வு

உங்கள் அன்பு, கள்ளமற்றதாய் இருப்பதாக! தீமையை வெறுத்து, நன்மையை பற்றிக்கொள்ளுங்கள். உடன்பிறப்புகள் போன்று, ஒருவருக்கொருவர் உளங்கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களை விட, மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள். விடாமுயற்சியோடும், ஆர்வமிக்க உள்ளத்தோடும், ஆண்டவருக்குப் பணிபுரியுங்கள். எதிர்நோக்கி இருப்பதில், மகிழ்ச்சி கொள்ளுங்கள்; துன்பத்தில், தளரா மனத்துடன் இருங்கள்; இறை வேண்டலில் நிலைத்திருங்கள்.

# தீமைக்குத் தீமை செய்யாதீர்கள்; பழிவாங்காதீர்கள்

வறுமையுற்ற இறைமக்களோடு உங்களிடமுள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாய் இருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசிகூறுங்கள்; ஆம் ஆசி கூறுங்கள்; சபிக்க வேண்டாம்; மகிழ்வோரோடு மகிழுங்கள்; அழுவாரோடு அழுங்கள்;

நீங்கள் ஒரு மனத்தவராய் இருங்கள்; உயர்வு மனப்பான்மை கொள்ளாமல் தாழ்நிலையில் உள்ளவர்களோடு நன்கு பழகுங்கள்; நீங்கள் உங்களையே அறிவாளிகளெனக் கருதி பெருமிதம் கொள்ள வேண்டாம்; தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள்; எல்லா மனிதரும் நலமெனக் கருதுபவை பற்றியே எண்ணுங்கள். இயலுமானால், உங்களால் முடிந்தவரை எல்லோருடன் அமைதியுடன் வாழுங்கள்; அன்பார்ந்தவர்களே! பழிவாங்காதீர்கள். அதைக் கடவுளின் சினத்திற்கு விட்டுவிடுங்கள். ஏனெனில் மறைநூலில் எழுதியுள்ளவாறு; பழிவாங்குவதும், கைம்மாறு அளிப்பதும் எனக்கு உரியன என்கிறார் ஆண்டவர். நீயோ, உன் எதிரி பசியாய் இருந்தால் அவனுக்கு உணவு கொடு; அவன் தாகத்தோடு இருந்தால், அவன் குடிக்கக் கொடு. இவ்வாறு செய்வதால், அவன் தலைமேல் எரிதழைக் குவிப்பாய்! தீமை உங்களை வெல்லவிடாதீர்கள்; நன்மையால் தீமையை வெல்லுங்கள்!

- உரோமையர் 12:9-21

## நற்செய்தியை அறிவித்தல்

நான் (பவுல் அடியார்) நற்செய்தியை அறிவிக்கிறேன் என்றாலும், அதில் நான் பெருமைப்பட ஒன்றுமில்லை. இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்கு உள்ளது; நற்செய்தியை அறிவிக்காவிடில், ஐயோ எனக்குக் கேடு!.

- 1 கொரிந்தியர் 9:16


**அன்பின் தன்மை**

அன்பு பொறுமையுள்ளது; நன்மை செய்யும். பொறாமைப்படாது! தற்புகழ்ச்சி கொள்ளாது; இறுமாப்பு அடையாது! அன்பு இழிவானதைச் செய்யாது; தன்னலம் நாடாது; எரிச்சலுக்கு இடம் கொடாது; தீங்கு நினையாது!

- 1 கொரிந்தியர் 13:4-5

**உடல் உயிர்பெற்றெழுதல்**

இதோ ஒரு மறைபொருளை உங்களுக்குச் சொல்கிறேன். நாம் யாவரும் சாக மாட்டோம்; ஆனால், அனைவரும் மாற்றுரு பெறுவோம். ஒரு நொடிப் பொழுதில் கண் இமைக்கும் நேரத்தில் இறுதி எக்காளம் முழங்கும் போது, இது நிகழும். எக்காளம் முழங்கும் போது, இறந்தோர் அழிவற்றவர்களாய், உயிருடன் எழுப்பப்படுவர்; நாமும் மாற்றுரு பெறுவோம். ஏனெனில், அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையை அணிந்தாக வேண்டும்; சாவுக்குரிய இவ்வுடல், சாகாமையை அணிந்தாக வேண்டும்.



அழவுக்குரியது அழியாமையையும், சாவுக்குரியது சாகாமையையும், அணிந்து கொள்ளும் போது மறைநூலில் எழுதியுள்ள வாக்கு நிறைவேறும். **சாவு முற்றிலும் ஒழிந்தது; வெற்றி கிடைத்தது; சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?** பாவமே சாவின் கொடுக்கு! பாவத்துக்கு வலிமை தருவது திருச்சட்டமே. ஆகவே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வழியாக நமக்கு இந்த வெற்றியைக் கொடுக்கும்; கடவுளுக்கு நன்றி! எனவே என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே! உறுதியோடு இருங்கள்! நிலையாய் நில்லுங்கள்! ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது, வீண் போகாது என்பதை அறிந்து ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்.

- 1 கொரிந்தியர் 15:51 -58

பாவம் செய்யாமல் உலகில் நாம் பரிசுத்தமாக வாழ வேண்டும்; கடவுள் மீது நாம் அன்பு செலுத்த வேண்டும்; கடவுள் நம்மீது அன்பு செலுத்துகிறார். அன்பார்ந்த சகோதர சகோதரிகள் மீதும், நாம் அன்பு செலுத்த வேண்டும். ஆண்டவரின் தெய்வீக உயிருள்ள வார்த்தைகளை வாழ்வாக்கி வாழ்வோமாக!

## கடவுள் பரிசுத்த ஆவியால் மனித இதயத்தில் எழுதுகிறார்

எங்கள் பணியின் வாயிலாகக் கிறிஸ்து எழுதிய கடிதம் நீங்களே, என்பது வெளிப்படை அது மையினால் எழுதப்பட்டது அல்ல; மாறாக வாழும் கடவுளின் ஆவியால் எழுதப்பட்டது. கற்பலகையில் அல்ல; மாறாக மனித இதயமாகிய பலகையில் எழுதப்பட்டது.

- 2 கொரிந்தியர் 3:3

## மோட்சம் நிலைத்திருக்கும்

நாங்கள் காண்பவற்றை அல்ல; நாங்கள் காணாதவற்றை நோக்கியே வாழ்கிறோம். காண்பவை நிலையற்றவை; காணாதவை என்றென்றும்நிலைத்திருப்பவை.

- 2 கொரிந்தியர் 4:18

**நமக்கு கடவுளிடமிருந்து கிடைக்கும் பரலோக வீடு**

நாம் இவ்வுலகில் குடியிருக்கும் உடலாகிய கூடாரம் அழிந்து போனாலும், கடவுளிடமிருந்து கிடைக்கும் வீடு ஒன்று, விண்ணுலகில் நமக்கு உண்டு; அது மனிதக் கையால் கட்டப்படாதது; நிலையானது என்பது நமக்குத் தெரியும் அல்லவா!

இக்கூடாரத்தில் குடியிருக்கும் நாம் விண்ணுலகு சார்ந்த நம் வீட்டைப் பெற்றுக்கொள்ள ஏங்கிப் பெரு மூச்சுவிடுகிறோம். விண்ணக, (பரலோக) வீட்டைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே நம் விருப்பம். இவ்வுடலில் குடியிருக்கும் வரையில், நாம் ஆண்டவரிடமிருந்து அகன்று இருக்கிறோம் என்பது நமக்குத் தெரியும்.

- 2 கொரிந்தியர் 5:1-2-4-6

**நாம் கடவுளின் கோவில்**

வாழும் கடவுளின் கோவில் நாமே! அவர்கள் நடுவே நான் உலவுவேன்! நானே அவர்கள் கடவுள்! அவர்கள் என் மக்கள் என்று கடவுளே சொல்லியிருக்கின்றார்.

- 2 கொரிந்தியர் 6:16

**உடல் இச்சையின் செயல்கள் நரகில் புதைக்கும்**

ஊனியல்பின் (உடலின்) செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தமை (விபசாரம்), கெட்ட நடத்தை, காமவெறி சிலைவழிபாடு, பில்லி சூன்யம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும். இத்தகையவற்றில் ஈடுபடுவோர், இறையாட்சியை (பரலோக வாழ்வை) உரிமைப்பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன்

- கலாத்தியர்5: 19:21

# உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மை தேர்வு செய்தார்

நாம் தூயோராகவும், மாசற்றோராகவும், தம் திருமுன் விளங்கும்படி, உலகம் தோன்றுவதற்கு முன்பே, கடவுள் நம்மை கிறிஸ்து வழியாகத் தேர்ந்தெடுத்தார். அவர் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலம், தமக்குச் சொந்தமான பிள்ளைகளாக்கிக்கொள்ள, அன்பினால் முன் குறித்து வைத்தார். இதுவே அவரது விருப்பம், இதுவே அவரது திருவுளம். இவ்வாறு தம் அன்பார்ந்த மகன் வழியாக, நம்மீது ஒப்புயர்வற்ற அருளைப் பொழிந்தருளியதால் அவரது புகழைப் பாடுகிறோம்.

- எபேசியர் 1: 4-6

இயேசு கிறிஸ்துவோடு இணைந்த நிலையில், நாம் அவரோடு உயிர்த்தெழவும், விண்ணுலகில் அவரோடு அமரவும் செய்தார்.

- எபேசியர் 2:6

நமக்கு உலகில் வரக்கூடிய துன்ப துயரங்களை, இயேசு ஆண்டவருடைய சிலுவைத் திருப்பாடுகளுடன் இணைத்து திருப்பாடுகளில் பங்கு பெறுவோம். திருப்பாடுகளில் பங்கு பெறும் நாம், இயேசு ஆண்டவர் உயிர்ப்பிலும் பங்கு பெற்று, பரலோகத்தில் முடிவில்லா காலம் புனிதர்கள் திருக்கூட்டத்தில், தோழமை கொண்டு வாழ்வோமாக!

**இயேசுவே நமது ஒப்பற்ற செல்வம் - உலகப்பொருட்கள் குப்பைகள்**

உண்மையில் என்னைப் பொறுத்தமட்டில், என் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய அறிவே, நான் பெறும் ஒப்பற்ற செல்வம்; இதன் பொருட்டு மற்ற எல்லாவற்றையும் இழப்பாகக் கருதுகிறேன். அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்துவிட்டேன்; கிறிஸ்துவை ஆதாயமாக்கிக் கொள்ள எல்லாவற்றையும் குப்பையாகக் கருதுகிறேன்.

- பிலிப்பியர் 3 : 8

**பரலோக வாழ்வு பரிசு**

பரிசு பெற வேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகிறேன்; கிறிஸ்து இயேசுவின் மூலம், கடவுள் எனக்கு, மேலிருந்து (மோட்சத்திலிருந்து) விடுக்கும் அழைப்பே அப்பரிசாகும்.

- பிலிப்பியர் 3 : 14

**“பரலோகம் நமது தாய்நாடு! பரலோகமே நமது நிரந்தரக்குடியிருப்பு!**
**We are the citizens of Heaven".**

- பிலிப்பியர் 3 : 20

கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைவர்களாய் நடப்போர் பலர் உள்ளனர். அவர்களைப் பற்றி மீண்டும் மீண்டும் உங்களிடம் கூறியுள்ளேன். இப்போழுது கண்ணீரோடு சொல்கிறேன். அழிவே, அவர்கள் முடிவு; வயிறே அவர்கள் தெய்வம்; மானக்கேடே அவர்கள் பெருமை; அவர்கள் எண்ணுவதெல்லாம் மண்ணுலகைச் சார்ந்தவை பற்றியே; **நமக்கோ! விண்ணகமே (மோட்சமே) தாய்நாடு!** அங்கிருந்து தான்; மீட்பராம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து வருவாரெனக் காத்திருக்கிறோம்.

- பிலிப்பியர் 3:18-20

**நாம் நிலை வாழ்வு பெறுவதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறோம்**

பொருள் ஆசையே, எல்லா தீமைகளுக்கும் ஆணிவேர். அந்த ஆசையால் சிலர் விசுவாசத்தினின்று பிறழ்ந்து திரிந்து பல வேதனைகளைத் தாங்களாகவே தங்கள் மேல் வருபவித்துக் கொள்கிறார்கள். கடவுளின் மனிதனாகிய நீ, இவற்றிலிருந்து தப்பி ஓடு. நீதி, இறைப்பற்று, நம்பிக்கை, மனஉறுதி, பணிவு ஆகியவற்றை நாடித்தேடு; விசுவாச வாழ்வு என்னும் போராட்டத்தில் ஈடுபடு; நிலை வாழ்வைப் பற்றிக்கொள்; அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறாய். அதனை முன்னிட்டே பல சாட்சிகள் முன்னிலையில் விசுவாசத்தைச் சிறப்பாக அறிக்கையிட்டாய்!

- 1 திமோத்தேயு 6:10-12

**கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது**

கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது; ஆற்றல் வாய்ந்தது. இருபக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது; ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும், மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது.

- எபிரேயர் 4:12

### இறைமகனாகிய ஆண்டவர் நம்மை கண்டித்துத் திருத்துகிறார்

தம் பிள்ளைகளிடம் பேசுவது போல், இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை, நீங்கள் மறந்து விட்டீர்கள்; பிள்ளாய்! ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே! அவர் கண்டிக்கும் போது, தளர்ந்து போகாதே! தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார். ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிருக்கிறார். திருத்தப்படுவதற்காகத் துன்பங்களை தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார்; தந்தை தண்டித்து திருத்தாத பிள்ளை உண்டோ!

- எபிரேயர் 12:5-7

### ஆண்டவர் உலக துன்பங்கள் வழியாக, நம்மைக் கண்டித்து திருத்துகிறார்;

எல்லா பிள்ளைகளுக்கும் அளிக்கப்படும் தண்டனை உங்களுக்கு அளிக்கப்படாவிட்டால், நீங்கள் உண்மையான பிள்ளைகளாய் இருக்கமாட்டீர்கள். முறை தவறிப் பிறந்த பிள்ளைகளாகவே இருப்பீர்கள். இவ்வுலகத் தந்தையர் நம்மை தண்டித்துத் திருத்தினார்கள்! நாமும் அவர்களுக்கு மதிப்புக் கொடுத்து வந்தோம். அவ்வாறாயின் விண்ணகத்தந்தைக்கு நாம் எவ்வளவோ பணிந்து வாழ வேண்டும் அன்றோ! ஆனால் கடவுள் நமது நலனுக்காக, நாமும் அவருடைய தூய்மையில் பங்கு கொள்ள வேண்டுமென்பதற்காகவே, நம்மை தண்டித்துத் திருத்துகிறார்.

- எபிரேயர் 12:8-10

### ஆண்டவரே எனக்குத் துணையாளர்

பொருளாசையை விலக்கி வாழுங்கள். உள்ளதே போதும் என்றிருங்கள்; ஏனெனில், நான் ஒரு போதும் உன்னைக் கைவிட மாட்டேன். உன்னை விட்டு விலக மாட்டேன் என்று கடவுளே கூறியிருக்கிறார். இதனால் நாம் துணிவோடு, ஆண்டவரே! எனக்குத் துணை; நான் அஞ்ச மாட்டேன்; மனிதர் எனக்கு எதிராக என்ன செய்யமுடியும் என்று கூறலாம்.

- எபிரேயர் 13:5-6

### கடவுளுக்கு உகந்த பலிகள்

நன்மை செய்யவும், பகிர்ந்து வாழவும் மறவாதீர்கள்; இவ்வகைப் பலிகளே, கடவுளுக்கு உகந்தவை.

– எபிரேயர் 13:16

### கடவுள் நமக்கு ஞானத்தைக் கொடுப்பார்

உங்களிடையே குறைவான ஞானம் கொண்டிருப்போர், கடவுளிடத்தில் கேட்கட்டும்; அப்பொழுது, அவரும் ஞானத்தைக் கொடுப்பார். அவர் முகம் கோணாமல் தாராளமாய் எல்லோருக்கும் கொடுப்பவர். ஆனால் நம்பிக்கையோடு ஐயப்பாடின்றி கேட்க வேண்டும்.

– யாக்கோபு 1:5 – 6

### செல்வர்களுக்கு எச்சரிக்கை

செல்வர்களே! சற்றுக் கேளுங்கள். உங்களுக்கு வரப் போகும் இழிநிலையை நினைத்து அலறி அழுங்கள். உங்கள் செல்வம் மக்கிப்போயிற்று. உங்கள் ஆடைகள் பூச்சிகளினால் அரிக்கப்பட்டு விட்டன.

உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்து விட்டன. அந்தத் துருவே உங்களுக்கு எதிர்ச் சான்றாக இருக்கும். அது நெருப்புப் போல உங்கள் சதையை அழித்துவிடும். இந்த இறுதி நாள்களில் செல்வத்தைக் குவித்து வைத்திருக்கின்றீர்களே!

– யாக்கோபு 5:1-3

### செயலற்ற விசுவாசம்

உயிர் இல்லாத உடல் போல, செயல்களில்லாத நம்பிக்கையும் செத்ததே.

– யாக்கோபு 2:26

### தாழ்ச்சியுள்ளோர் உயர்த்தப்படுவர்

ஆண்டவர் முன் உங்களைத் தாழ்த்துங்கள்; அவர் உங்களை உயர்த்துவார். நாளைக்கு உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பது உங்களுக்கு தெரியாதே. நொடிப்பொழுதில் தோன்றி மறையும், புகை போன்றவர்கள் நீங்கள்; நன்மை செய்ய ஒருவருக்குத் தெரிந்திருந்தும், அவர் அதைச் செய்யாவிட்டால் அது பாவம்.

– யாக்கோபு 4:10, 14, 17

புகை போக்கி மூலம் புகை வெளியே போய் சற்று நேரத்தில் புகை மறைந்து விடுகிறது. இது போன்று நாமும் உலகில் வாழ்ந்து சிறிது காலத்தில் மறைந்து விடுகிறோம்.

## எரிப்பதற்கான நெருப்பை மனித நாவு நரக நெருப்பிலிருந்து பெறுகிறது

நாம் நாவடக்கமாக வாழ வேண்டும். மனித நாவும் அதைப்போல ஒரு சிறிய உறுப்பு தான். (பெரிய கப்பலை திருப்பும் சிறிய சுக்கான்). ஆனால் பெரிய காரியங்களைச் சாதிப்பதாக, அது பெருமையடிக்கிறது; பாருங்கள். சிறியதொரு தீப்பொறி எத்துணை பெரிய காட்டை கொழுத்திவிடுகிறது. நாவும் தீயைப் போன்றது தான்; நெறிகெட்ட உலகின் உருவே அது. நம்முடைய உறுப்புகளுள் ஒன்றாக அமைந்திருக்கும். இந்த நாக்கு நம் உடல் முழுவதையும் கறைப்படுத்துகிறது. அது நம் வாழ்க்கைச் சக்கரம் முழுவதையும் எரித்து விடுகிறது. எரிப்பதற்கான நெருப்பை நரகத்திலிருந்தே பெறுகிறது. ஆனால் நாவை அடக்க யாராலும் முடிவதில்லை; கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அது கொடியது; சாவை விளைவிக்கும் நஞ்சு நிறைந்தது. தந்தையாம் ஆண்டவரைப் போற்றுவதும் அந்நாவே. கடவுளின் சாயலாக உண்டாக்கப்பட்ட மனிதரைத் தூற்றுவதும் அந்நாவே.

– யாக்கோபு 3:5, 6, 8, 9

### துன்பத்தில் பொறுமை

ஒருவர் அநியாயமாகத் துயருறும் போது, கடவுளை மனதில் கொண்டு அதைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்வாரானால், அதுவே அவருக்கு (கடவுளுக்கு) உகந்தது.

–1 பேதுரு 2:19

### ஆண்டவர் உயிர் பெற்றெழுந்தார் - துன்பத்தின் நன்மை

தீமை செய்து துன்புறுவதை விட, கடவுளுக்குத் திருவுளமானால் நன்மை செய்து துன்புறுவதே மேல். கிறிஸ்துவும் உங்கள் பாவங்களின் பொருட்டு ஒரே முறையாக இறந்தார் (துன்புற்றார்). அவர் உங்களைக் கடவுளிடம் கொண்டு சேர்க்கவே இறந்தார்; நீதியுள்ளவராகிய அவர், நீதியற்றவர்களுக்காக இறந்தார். மனித இயல்போடிருந்த அவர், இறந்தாரெனினும் ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர் பெற்றெழுந்தார்.

–1 பேதுரு 3:17 18

**கிறிஸ்தவ வாழ்வில் துன்பங்கள்**

அன்புக்குரியவர்களே! துன்பத்தீயில் நீங்கள் சோதிக்கப்படும் போது, ஏதோ எதிர்பாராதது நேர்ந்துவிட்டதென வியக்காதீர்கள். மாறாக கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் எத்துணை பங்கு கொள்கிறீர்கள் என எண்ணி மகிழுங்கள். அப்பொழுது கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படும் வேளையில் இன்னும் மகிழ்ந்து பேருவகை கொள்வீர்கள். கிறிஸ்துவின் பொருட்டு பிறர் உங்கள் மீது வசை கூறும் போது நீங்கள் பேறு பெற்றவர்கள். ஏனெனில் கடவுளின் மாட்சிமிக்க தூய ஆவி உங்கள் மேல் தங்கும்

- 1 பேதுரு 4:12-14

**பழிச் சொல்லுக்குப் பதிலாக ஆசிமொழி**

தீமைக்குப் பதில் தீமை செய்யாதீர்கள்! பழிச்சொல்லுக்கு பழிச் சொல் கூறாதீர்கள். மாறாக ஆசிகூறுங்கள்; ஏனென்றால் கடவுள் வாக்களித்த ஆசியை உரிமையாக்கிக் கொள்வதற்கே அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

- 1 பேதுரு 3:9

**ஆண்டவர் வருகை - உலக அழிவு - நமது பரலோக வாழ்வு**

ஆண்டவருடைய நாள் திருடனைப்போல் வரும். வானங்கள் பெரும் முழக்கத்துடன் மறைந்தொழியும். பஞ்ச பூதங்கள் (நீர், நெருப்பு, பூமி, வானம், காற்று) வெந்துருகிப் போகும். மண்ணுலகும் அதன் செயல்களும் தீக்கிரையாகும். இவையாவும் அழிந்து போகுமாதலால், நீங்கள் தூய இறைப்பற்றுள்ள நடத்தையில் மிகவும் சிறந்து விளங்க வேண்டும். கடவுளின் நாளை எதிர்பார்த்து, அவர் வருகையை விரைவுபடுத்த வேண்டும். அந்நாளில் வானங்கள் எரிந்தழிந்து, பஞ்ச பூதங்கள் வெந்துருகிப் போகும். அவர் (கடவுள்) வாக்களித்தபடியே நீதி குடிகொண்டிருக்கும் புதிய விண்ணுலகும், புதிய மண்ணுலகும் வரும் என நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

- 2 பேதுரு 3:10-13

**ஆண்டவர் நிறை வாழ்வை மக்களுக்கு வாக்களிக்கிறார்**

ஆண்டவராம் இறைவன் உரைப்பதைக் கேட்பேன். தம் மக்களுக்கு, தம் பற்றுமிகு அடியார்க்கு நிறை வாழ்வை அவர் வாக்களிக்கின்றார். அவர்களோ மடமைக்கு திரும்பிச் செல்லலாகாது.

- திருப்பாடல் 85:8

**ஆண்டவர் கைகளில் நம்மை எழுதியுள்ளார்**

இதோ என் உள்ளங்கைகளில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்.

- எசாயா 49:16

நாம் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் என்று யோவான் முதல் கடிதத்தில் எட்டுமுறை எழுதுகிறார் .

**பாவத்தை விட்டுவிடுதல்**

பாவம் நம்மிடம் இல்லை என்போமென்றால், நம்மையே நாம் ஏமாற்றிக்கொள்வோம். உண்மையும் நம்மிடம் இராது, மாறாக நம் பாவங்களை நாம் ஒப்புக்கொள்வோமென்றால், கடவுள் நம் பாவங்களை மன்னித்து குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப்படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கைக்குரியவர்; நேர்மையுள்ளவர். நாம் பாவம் செய்யவில்லை என்போமென்றால், அவரை (கடவுளை) பொய்யராக்குவோம். அவருடைய வார்த்தை, நம்மிடம் இல்லை என்றாகும்.

- 1 யோவான் 1:8-10

**கடவுளிடமிருந்து பிறந்தவர்கள்**

கடவுள் நேர்மையாளரென நீங்கள் அறிந்து கொண்டால், நேர்மையாகச் செயல்படுவோர், அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

- 1 யோவான் 2:29

**கடவுளின் மக்கள்**

நம் தந்தை நம்மிடம் எத்துணை அன்பு கொண்டுள்ளார் என்று பாருங்கள். நாம் கடவுளின் மக்களென அழைக்கப்படுகிறோம், கடவுளின் மக்களாவே இருக்கிறோம்.

- 1 யோவான் 3:1

**கடவுளிடமிருந்து பிறந்தவர்கள் பாவம் செய்வதில்லை**

கடவுளிடமிருந்து பிறந்தவர் எவரும் பாவம் செய்வதில்லை; ஏனெனில், கடவுளின் இயல்பு அவரிடம் இருக்கிறது; கடவுளிடமிருந்து பிறந்தவராயிருப்பதால், அவரால் பாவம் செய்ய இயலாது.

யோவான் 3:9

# பரிசுத்த ஆவியானவரின் ஏழுவரங்கள்




"உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தூய ஆவியானவரைப் பழித்து
உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்பு பெறார்.
தீராத பாவத்திற்கு ஆளாவார்."  இயேசு

மாற்கு 3:28

# பரிசுத்த ஆவியானவர் அருட்கொடைகள்

மூவொரு கடவுள், தந்தை மகன் தூய ஆவியானவர் நம்மீது அருட்கொடைகளை பொழிகிறார்கள்! நாம் திருமுழுக்கு அருட்சாதனம் பெறும்போது, தந்தையாகிய கடவுள் தூயஆவியானவரை நமக்குத் துணையாளராக அனுப்புகிறார்; பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பாவம் செய்யாமல், பரலோக வாழ்வை நோக்கி வழிநடத்துகிறார். பரிசுத்த ஆவியானவருடன் இணைந்து, நாம் செபிக்க வேண்டும்.

**பரிசுத்த ஆவியானவர் நமது துணையாளர்**

உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை, உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன்; தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே, உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்! உலகம் அவரை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் அது அவரைக் காண்பதுமில்லை ; அறிவதுமில்லை. நீங்கள் அவரை அறிந்திருக்கிறீர்கள். ஏனெனில், அவர் உங்களோடு தங்கியிருக்கிறார்; உங்களுக்குள்ளும் இருக்கிறார் .

**பரிசுத்த ஆவியானவர் கடவுள் வார்த்தையை நமக்குக் கற்பிப்பார்**

நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன். உங்களிடம் திரும்பி வருவேன். என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார். நான் கூறிய அனைத்தையும் உங்களுக்கு நினைவூட்டுவார்.

- யோவான் 14:16 -18, 26

கடவுளிடமிருந்து கிடைக்கும் நிலையான வீடு விண்ணுலகில் நமக்கு உண்டு; மோட்ச வாழ்வை நாம் அடைவதற்காகவே கடவுள் நம்மைத் தயாரித்து, அவருடைய தூய ஆவியை நமக்கு வழங்கியுள்ளார். ஆவியானவரை இயேசு ஆண்டவர் நம்மீது பொழிகிறார். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக் கொண்ட நாம், பாவத்தை விலக்கி பரிசுத்த வாழ்வு வாழ வழிநடத்துகிறார், நம்மை எரிநரகிலிருந்து காப்பாற்றுகிறார் .

## தூய ஆவியின் ஞானக்கொடைகள்

விண்ணக நன்மை பயக்கும் ஞானக்கொடைகளாகிய ஞானம், புத்தி, விமரிசை, அறிவு, திடம், பக்தியும் தெய்வபயமான ஏழு வரங்களையும் தூய ஆவியானவர் நம்மீது பொழிகிறார். அலகையின் பிடியிலிருந்தும், பாவப்பிடியிலிருந்தும் நம்மை விடுவிக்கிறார்; நாம் அன்பு கொண்டு வாழவும் அயல்மொழிகளில் பேசவும் வரம் அருளுகிறார்; நாம் என்ன நிலையில் இருந்தாலும் எந்தப் பாவத்தில் இருந்தாலும் இயேசு ஆண்டவரிடம் மனம் திரும்பி வந்தால் ஆண்டவர் நம்மை நிச்சயம் ஏற்றுக்கொள்வார். நமது பாவங்களை மன்னிக்கிறார்; உண்மையை வெளிப்படுத்தும் பரிசுத்த ஆவியானவரை நம்மிடம் அனுப்புகிறார். தூய ஆவியானவர் இயேசு ஆண்டவருடைய உயிருள்ள வார்த்தையை நமக்குக் கற்று தந்து, நினைவூட்டி உலகில் அன்புடன் வாழ வழிகாட்டுகிறார். நாம் மோட்சத்தில் முடிவில்லா காலம் வாழ, ஆவியானவர் வழிநடத்துகிறார். நமது மரண நாளில், நமது ஆன்மா பரலோகத்தில் பிறந்து வாழும் வரத்தை பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழங்குகிறார்

## தூய ஆவியின் கனிகள்

தூய ஆவியின் கனியோ அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் என்பவை ஆகும்.

கலாத்தியர் 5:22, 23

பரிசுத்த ஆவியானவர் நமக்கு வழங்கும் கனிகள் வழியாக மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கிறார். விண்ணக வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்வார்; நாம் பரலோகத்தில் முடிவில்லா காலம் வாழ்வோம்; புனிதர்கள் திருக்கூட்டத்தில் தோழமை கொண்டு வாழ்வோம்.

வேளாங்கண்ணி மாதா



**தமிழகத்திலுள்ள வேளாங்கண்ணியில் குழந்தை இயேசுவுடன் மாதாவின் திருக்காட்சி.**

ஆரோக்கிய மாதாவே! எமக்கு நல்ல சுகம் தந்தருள மன்றாடுகிறோம். உமது திருமகனிடம் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்.

# கடவுளின் தாய் கன்னி மரியாள் நமக்கும் தாய்

கடவுளின் நற்செய்தியை, உலக மக்களுக்கு மாதா கொண்டு வந்தார்கள். நம்மை பரலோக வாழ்வுக்கு அழைத்துச் செல்ல, இயேசு ஆண்டவரை உலகிற்கு மனிதனாக பரம தந்தை அனுப்பினார். இயேசு ஆண்டவரை உலகிற்கு அளித்த பெருமை அன்னை கன்னிமரியாளைச் சேரும். இயேசு கன்னி மரியாளிடமிருந்து பிறந்தார். தேவ அன்னை, முதல் தேவ நற்கருணைப் பேழையாகக் காட்சி அளிக்கிறார்கள். முதல் தேவாலயமாக, முதல் பரலோகமாகக் காட்சியளிக்கிறார்கள். பரலோகத்தின் வாசலே! விடியற்கால நட்சத்திரமே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

### தேவமாதாவின் பரலோகச் செய்தி
### செபம் - தபம்

உலகம் தோன்றுவதற்கு முன்பே, தேவமாதா கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர். மரியன்னை, உலகில் பல இடங்களில் காட்சி தந்திருக்கிறார்கள். மாதா காட்சி கொடுத்த இடங்களில், செபம் செய்யுங்கள்; தபம் செய்யுங்கள் என்ற கடவுளுடைய பரலோகச் செய்தியை நமக்கு வழங்குகிறார்கள். செபமாலை நாம் செபிக்கும் போது, மோட்சம் நோக்கி நாம் திருப்பயணம் செல்கிறோம். அருள் நிறைந்த மரியே வாழ்க! கர்த்தர் உம்முடனே! என்னும் செபத்தை நாம் செபிக்கும்போது, இப்பொழுதும், எப்பொழுதும், எங்கள் மரணநேரத்திலும் வேண்டிக்கொள்ளும், என்றும் மாதாவை நோக்கிச் செபிக்கிறோம். நமது மரண நேரம் மிகவும் முக்கியமான நேரமாகும். ஏனெனில் நமது மரணத்தின்போது, நாம் மோட்சத்தில் பிறக்கிறோம். நமது ஆன்மா மோட்சம் செல்கிறது. உலக வாழ்வில் மாதா நமக்குக் கூறிய செபம், தபம், ஒறுத்தல் முயற்சிகள் செய்து நாம் பரலோக வாழ்வை உரிமையாக்கிக் கொள்வோமாக! நாம் பரலோக வாழ்வடைய நமக்காக இப்பொழுதும் நம் மரண வேளையிலும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுபவர், அன்னை மரியாள். பன்னிரு விண்மீனை அணிந்து, நிலவின் மேல் நின்று உமது கருணைக் கண்களை எம்மீது நோக்கியருளும் தாயே! கண்ணீரில் வாடும் உமது மைந்தர்களாகிய எம்மைத் துயர் நீக்கி மீட்டருளும். உம்மை வாயார வாழ்த்தி செபிக்கிறோம்; உமது திருமகன், மொழிந்த உயிருள்ள தெய்வீக வார்த்தையின்படி, நாங்கள் வாழச் செய்தருளும்.

## அன்னை மரியாளிடம் ஜெபம்

தேவமகனைத் தாங்கி சுமந்த தாயே! எம்மைக் காப்பாற்றும். இயேசு ஆண்டவருடைய சிலுவைத் திருப்பாடுகளில், இறுதிவரை பங்கேற்ற தாயே! நாங்களும் உலகத் துன்பங்களை ஆண்டவருடைய திருப்பாடுகளுடன் இணைத்து வாழ, அருள் பொழியும். இயேசு ஆண்டவருடைய திருப்பாடுகளில், நாங்கள் உலகத் துன்பங்கள் வழியாக பங்குபெறும் போது, ஆண்டவருடைய உயிர்ப்பிலும் பங்குபெற்று விண்ணகம் செல்வோம்.உலகில் எங்களுக்கு வரக்கூடிய, வியாதிகள், துன்பங்கள், துயரங்கள், கவலைகள், சகல தீவினைகள் கண்ணீரையும் போக்கியருள உம்மை நோக்கி மன்றாடுகிறோம். நாங்கள் செய்த பாவங்களே, சகல உலக துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணமாகும். நாங்கள் பாவமற்ற பரிசுத்த வாழ்வு வாழ அருள்புரியும். துன்பங்கள் எம்மை விட்டு ஓடிவிடும். உமது தெய்வீக திருமகன் இயேசு ஆண்டவர், மனிதர்களுடைய பாவங்களுக்காக, சிலுவைச் சாவை ஏற்றுக்கொண்டார். ஆண்டவருடைய திருப்பாடுகள் சிலுவைச் சாவு வரை நீர், ஆண்டவரை பின்பற்றி சென்றீர். மனுக்குலம் மோட்சத்தில் வாழ்ந்திட, உமது ஒரே மகனை எமக்காகக் கையளித்தீர்; அலகையின் தலை மிதித்த தாயே! சாத்தானிடமிருந்து எம்மைக் காப்பாற்றுங்கள். சாத்தான் எரிநரகில், மக்களை புதைக்கத் திட்டமிடுகிறான். ஆனால் உமது வல்லமையால், சாத்தான் தோல்வியடைந்து ஓடிவிடுவான். அன்புத் தாயே! எம்மை சாத்தானிடமிருந்து காப்பாற்றுங்கள்!

## கடவுளின் தாயார் மோட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்

மரியாள் உடலோடும், ஆன்மாவோடும், விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். இது மரியன்னைக்குக் கடவுள் அளித்த தனிச்சிறப்பாகும். கடவுளின் தாயாகி ஆண்டவரின் திட்டத்தை, இறுதிவரை கருத்தூன்றிச் செய்து வந்த வாழ்வுக்கு கடவுள் தந்த பரிசாகும். மரியாள் மீட்புத் திட்டத்தில் முழுமையாகப் பங்கெடுத்து வாழ்ந்தார். கடவுளுக்கு அடிமையாக தம்மை ஒப்புக் கொடுத்தார். உலக வாழ்வில் பாவத்திற்கு அடிமைப்படாது, பரிசுத்தமாக வாழ்ந்தவர் அன்னைமரியாள். நாமும் பரலோக வாழ்வில் நுழைய, ஓர் முன் உதாரணமாக அன்னை மரியாள் திகழ்கிறார். கருவிலிருந்து கல்லறை வரை இயேசுவுக்குத் துணை நின்றவர் தேவமாதா. எனவேதான் அன்னை கன்னி மரியாளை அகில உலகின் அரசி

எனவும், முதற்கனி எனவும் திருச்சபை நமக்கு உணர்த்துகிறது.

நமது வாழ்வு பையூர், பொய்யூர், மெய்யூரில் அடங்கும். கடவுள் சித்தத்தால், தாயின் கருப்பையில் நாம் உருவாகிறோம். உலகம் ஓர் பொய்யூர். பொய்யான உலகம். பரலோகமே மெய்யூர்; உண்மையான ஊராகும்! தேவமாதாவைப் போன்று, நாமும் கடவுளுக்கு அடிமையாக நம்மை ஒப்புக்கொடுத்தால் கடவுள் நம்மைப் பரலோக வாழ்விற்கு அழைத்துச் செல்வார்.

### தமிழகத்திலுள்ள வேளாங்கண்ணியில் மாதா காட்சி

அன்னை மரியாள் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு, வேளாங்கண்ணியில் காட்சி கொடுத்தார்கள். சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் காட்சி கொடுத்து, பல நன்மைகள் வழங்கினார்கள். பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. வேளாங்கண்ணி ஆலயம் செல்பவர்கள், மாதா வழியாக பரலோக நலன்களும், உலக நலன்களும் பெற்று பெருமகிழ்ச்சி அடைகிறார்கள். ஆலயம் அருகிலுள்ள பொருட்காட்சி இதற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது. மக்களது துன்பங்களைப் போக்கி பல புதுமைகளை மாதா செய்திருக்கிறார்கள். கடலில் தத்தளித்தவர்களை மாதா அற்புதமாகக் காப்பாற்றினார்கள்.

### தேவ அன்னை உலகில் பல இடங்களில் திருக்காட்சி

மரியன்னை உலகின் பல நாடுகளில், 150 இடங்களுக்கு மேலாக உலக மக்களுக்குக் காட்சி கொடுத்திருக்கிறார்கள். அந்தத் திருக்காட்சிகளின் போது உலக மக்களை பரலோக நலன்களாலும், உலக நலன்களாலும் மாதா நிரப்பி இருக்கிறார்கள். மாதாவின் திருக்காட்சிகள் வழியாக, எல்லாம் வல்ல இறைவன், பரலோகச் செய்திகளை உலக மக்களுக்குத் தெரிவித்தார். உலகில் பல்வேறு நாடுகளில் தேவமாதா காட்சி கொடுத்தபோது அவர் தோன்றிய தோற்றங்களில், மாதாவின் சுரூபங்களை இஸ்ரயேல் நாட்டிலுள்ள ஜெருசலமில் அமைத்திருக்கிறார்கள். குழந்தை இயேசுவுடன் காட்சி கொடுத்த மாதா சுரூபங்களும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் வேளை நகரில் காட்சி அளித்த அன்னை வேளாங்கண்ணி திருக்காட்சி சுரூபமும் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை முன்னாள் பேராயர் மேதகு சின்னப்பா ஆண்டகை அவர்கள் எருசலேமில் திருப்பலி பூசை நிறைவேற்றி வேளாங்கண்ணி மாதா சுரூபத்தை ஸ்தாபித்து

அர்சித்தார். அந்த மேலான பரிசுத்தத் திருநிகழ்வில் கலந்து கொள்ள மேதகு சின்னப்பா ஆண்டகை அவர்களுடன் செல்லும் மேலான பாக்கியத்தை நான் பெற்றேன். ஜெருசலேமில் அன்னை வேளாங்கண்ணி மாதா சுரூபம் அமைக்கும் விழாவில் கலந்து கொள்ளும் பாக்கியத்தை மாதா எனக்குக் கொடுத்தார்கள். இயேசு ஆண்டவர், மாதா, சூசையப்பர் வாழ்ந்த, புண்ணிய பூமியில் நடைபெற்ற ஆயர் திருப்பலி பூசையில் நானும் கலந்து கொள்ளும் வாய்ப்பு, வேளாங்கண்ணி மாதா எனக்குக் கொடுத்தார்கள். திருப்பலி பூசையில் நாங்கள் அனைவரும், பரலோகத்தில், புனிதர்கள் திருக்கூட்டத்தில், தோழமை கொண்டு முடிவில்லா காலம் வாழும் மேலான பாக்கியத்தை, எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று ஆண்டவரே உம்மை நோக்கி மன்றாடுகிறோம் என்று ஆண்டவரை நோக்கி உருக்கமாக மன்றாடினோம். பரலோக வாழ்வில் இணைந்து புனித அந்தோணியார், புனித சவேரியாரை, பரலோகத்தில் பார்க்கவும் பேசவும் கூடிய மேலான பாக்கியத்தை அருள வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடினோம்.

## புனித அந்தோணியார்



கடவுளாகிய இயேசு ஆண்டவர் குழந்தை இயேசுவாக அந்தோணியார் திருக்கரங்களில் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தார்.

## புனித தோமையார் தேசிய திருத்தலப் பேராலயம்



சென்னை மெரினா பீச்சிலுள்ள தோமையார் கல்லறைக் கோவில்.
இவர் இயேசு ஆண்டவருடைய பன்னிரு சீடர்களில் ஒருவர்.
ஆலய பொருட்காட்சியில் இவரது இரத்தம் தோய்ந்த ஈட்டி, மண் உள்ளது.
தோமையார் சைதாப்பேட்டை மலைக்குகையில் வாழ்ந்தார். கி.பி. 51ல்
சென்னைக்கு வருகை தந்தார். சென்னை பரங்கி மலையில் ஈட்டியால்
கிபி. 71ல் குத்திக் கொல்லப்பட்டார்.

## ஆண்டவருடைய பன்னிரு சீடர்களில் ஒருவரான புனித தோமையார் தமிழகம் வருகை

நமது தமிழகத்தை இயேசு ஆண்டவரும் தேவ தாயும் மிகுந்த அன்பு செய்கிறார்கள். தமிழகத்திற்கு புனிதர்களை ஆண்டவர் அனுப்பினார். நமது தேவ அன்னை, வேளாங்கண்ணியில் குழந்தை இயேசுவோடு, திருக்காட்சி கொடுத்தார்கள். இயேசு ஆண்டவருடைய பன்னிரெண்டு சீடர்களில் ஒருவரான புனித தோமையாரை, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆண்டவர் தமிழ்நாட்டிற்கு அனுப்பினார். தமிழகத் தலைநகர் சென்னையில் சைதாப்பேட்டை மலைக்குகையில், கி.பி 52 முதல் தோமையார் வாழ்ந்தார். மலைக்குகையுடன் இணைந்த நிலையில் வட்டவடிவில் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. மலையில் குடிதண்ணீர் ஊற்று ஒன்று அற்புதமாக உள்ளது. புனித தோமையார், கி.பி 72 ல் சென்னை தாமஸ் மவுண்டில் (பரங்கி மலையில்), ஆண்டவரை நோக்கி செபித்துக் கொண்டிருந்தார். சாத்தான் குணம் படைத்த ஒருவன், ஈட்டியால் தோமாவை குத்திக்கொன்றான். அந்த இடத்தில் மலைமேல் தோமையார் ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இயேசு ஆண்டவருடைய பன்னிரெண்டு சீடர்களும் கொலை செய்யப்பட்டு இறந்தார்கள். சீடர்கள் எவ்விதம் இறந்தார்கள் என்பதை படமாக தோமையார் ஆலயத்தில் வைத்திருக்கிறார்கள்.

தோமையாரை மைலாப்பூரில் மெரினா கடற்கரைச்சாலையில், கல்லறையில் அடக்கம் செய்தார்கள். அங்கே பெரிய ஆலயமும் கட்டியிருக்கிறார்கள். ஆலயத்திலுள்ள அருங்காட்சியகத்தில், தோமையாரை குத்திய இரத்தம் தோய்ந்த ஈட்டிமுனையும், அவர் இரத்தம் தோய்ந்த மண்ணும் கதிர்பாத்திரத்தில் வைத்துள்ளார்கள். இவை தோமையார் கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டவை; நான் நேரில் எல்லாவற்றையும் பார்த்திருக்கிறேன்.

### நகரிபலிது மொழியில் கல்வெட்டு தமிழ்மொழிபெயர்ப்பு

நகரிபலிது என்ற பழமையான மொழியில் ஒரு கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டு புனித தோமையார் குத்திக் கொலை செய்யப்பட்ட இடத்தில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அதில் உள்ள வாசகத்தின் தமிழாக்கம்: **கன்னிமகன் கிறிஸ்து ஒருவரே,**

**பாவப்பலியானார். இதை நமது நாட்டு வேதங்களே கூறுகின்றன. இதை உணர்ந்து கிறிஸ்துவை வழிபட பிரார்த்திக்கிறேன் தோமா.**

**தோமையாரும், திருவள்ளுவரும் சென்னை மைலாப்பூரில், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தார்கள் என்று கூறுகின்றார்கள். நற்செய்திநூலில் உள்ள போதனைகளைத்தான் திருக்குறளும் பிரதிபலிக்கிறது. தோமையாரும், வள்ளுவரும் ஒருவர் தான் என்ற கருத்தும் நிலவுகிறது.**

**திருக்குறள்**

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

பொருள் :

உலகில் நாம் மனிதராகப் பிறந்ததின் நோக்கம், கடவுள் பொற்பாதத்தில் சேர வேண்டும் என்பதாகும் .

**இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண**
**நன்னயம் செய்து விடல்.**

பொருள் :

தனக்குத் தீங்கு செய்தவரை தண்டிக்கும் முறை, அவர் வெட்கப்படும் படியாக ஏராளமான நன்மைகளைச் செய்வதாகும். தீமை செய்தவர்களை மன்னித்து ஏற்றுக் கொள்வதாகும். நமக்கு விரோதமாகக் குற்றம் செய்தர்களை நாம் மன்னிக்கும் போது, கடவுள் நமது பவங்களை மன்னிக்கிறார்.

**புனித பிரான்சிஸ் சவேரியார் - 1542**

புனித சவேரியார், நமது தமிழகத்திற்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பு வருகை தந்தார். புனித சவேரியார் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். கடவுள் வார்த்தையால், மனம் திரும்பி குருவானார். இந்தியாவில் மக்களுக்கு ஞான உபதேசம் கற்பித்து, திருமுழுக்கு கொடுத்து மனம் திருப்பினார் . தமிழகத்தின் தெருக்களில் கை மணியடித்து மக்களை திரட்டினார்,

புனித சவேரியார் தனது 46 வயதில் காலமானார். இவரது திருஉடல் அழியாமல், 500 ஆண்டுகளாக கோவாவில் இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு ஒரு முறை, சவேரியாரின் அழியா உடலை பீடத்தின் மேலிருந்து கீழே இறக்குவார்கள். பல இடங்களிலிருந்தும் மக்கள் புனித சவேரியாரை தரிசிக்க வருகிறார்கள்.

நாங்கள் குடும்பத்துடன் 1964, 1994, 2014 ஆண்டுகளில் சவேரியாரை சந்தித்து ஆசி பெற்றிருக்கிறோம். புனித பாப்பரசர், சவேரியாருக்கு புனிதர் பட்டம் வழங்க, அவரது வலது கையை அனுப்பும்படி கேட்டார். புனித சவேரியாருடைய வலது கை, உரோமையில் திருத்தந்தை மாளிகையின் பொருட்காட்சியில் உள்ளது. நாங்கள் குடும்பத்துடன் கோவா சென்று, சவேரியாரை சந்தித்து ஆசி பெற்றிருக்கிறோம். சவேரியார் நம்மை சகல நலன்களால் நிறைவு செய்கிறார். நாம் அவரை நோக்கி செபித்து, பரலோகத்தில் அவரைப்பார்த்து பேசுவோமாக!

இந்தியாவில் பம்பாய் அருகிலுள்ள கோவாவில் 2024 ல் புனித சவேரியாரின் அழியா உடலை, நாம் தரிசிக்க வரம் கேட்டு மன்றாடுவோம். புனித சவேரியார் மோட்சத்தில் இருந்து, சகல நலன்களும் நம்மீது பொழிந்து கொண்டிருக்கிறார். மோட்சத்தில் இயேசு ஆண்டவரிடமும், தேவமாதாவிடமும் நமக்காக புனித சவேரியார் செபித்துக் கொண்டிருக்கிறார் .

### கொன்ஸ்டான்டைன் பெஸ்கி 1606 - வீரமாமுனிவர்

நமது தமிழகத்திற்கு குருவாகிய வீரமாமுனிவர் வருகை தந்தார்; தமிழக மக்கள் மீது கொண்ட அளவற்ற அன்பினால், ஆண்டவர் வீரமாமுனிவரை தமிழகத்திற்கு அனுப்பினார்; வீரமாமுனிவர், தஞ்சாவூர் அருகிலுள்ள ஏலாக்குரிச்சி என்ற ஊரில் மக்களுக்கு ஆண்டவருடைய செய்தியை போதித்து வந்தார். மன்னருக்கு வந்த பெரிய வியாதியை, ஆண்டவர் கிருபையால் முனிவர் சுகப்படுத்தினார். மன்னர் ஆலயம் கட்ட கண்ணுக்கெட்டிய தூரம்வரை இலவசமாக நிலம் கொடுத்தார். அதில் ஆலயம் ஒன்று கட்டியுள்ளார்கள். மீதி நிலத்தை ஏழைகளுக்கு கொடுத்துள்ளார்கள்; வீரமாமுனிவர் நமக்காக பரலோகத்தில் ஆண்டவரையும், மாதாவையும் நோக்கி செபித்துக் கொண்டிருக்கிறார்.

## புனித ஜான் டி.பிரிட்டோ (அருளானந்தர்) - 1675

நமது தமிழகத்திற்கு ஆண்டவர் கிருபையால், குருவாகிய அருளானந்தர் வருகை தந்தார். ஆண்டவருடைய தெய்வீக உயிருள்ள வார்த்தைகளை அருளானந்தர் மக்களுக்கு போதித்தார். ஆண்டவர் வார்த்தையின் படி, மக்கள் வாழவும் கற்பித்தார். ஆண்டவர் வார்த்தையின் படி வாழும்போது, சில வாழ்க்கை நடைமுறைச் சிக்கல்கள் எழுந்தன. அருளானந்தருக்கு மன்னன் மரண தண்டனை விதித்தான். ஓரியூரில் அருளானந்தர் தலை துண்டிக்கப்பட்டு, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அருளானந்தர் திருஇரத்தம் சிந்திய இடத்தில் மண் சிவந்த நிறத்தில் இன்று வரை காட்சியளிக்கிறது. புனித அருளானந்தருக்கு இராமநாதபுரம் மாவட்டம், ஓரியூரில், சுரூபத்துடன் பெரிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. புனித அருளானந்தரை நாம் மோட்சத்தில் சந்திக்கப்போகிறோம், பேசப்போகிறோம். மோட்ச மகிமை மாட்சிமை விவரிக்க முடியாத மகிழ்ச்சி நம்மிடம் தங்கப்போகிறது.

### புனித அருளானந்தர், ஓரியூர்.



சிவந்த மண்ணின் சொந்தக்காரர்

# இயற்கையும் மனித மரணமும் கடவுள் கையில் உள்ளன

உலகில் மனிதர்கள் எல்லாவற்றையும் அடக்கி ஆள வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் இயற்கையையும் மனித மரணத்தையும் மனிதன் அடக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியவில்லை. செல்வந்தர்கள் சாகாமலிருக்க, கணக்கற்ற பணம் செலவு செய்கிறார்கள். உயர்ந்த மருத்துவர்களைக் கொண்டு, சாகாமலிருக்க, மருத்துவம் செய்தும் பலனின்றி இறந்து விடுகிறார்கள். உயர்ந்த மருத்துவர்களும் இறந்து விடுகிறார்கள். மனிதர்கள் மரணமும் இயற்கையின் செயல்பாடுகளும் கடவுள் சித்தப்படி நடக்கும்.

மனிதர்கள் மரணமும் இயற்கையும் கடவுள் ஆளுகையில் உள்ளது. உலகம் தோன்றியது முதல், கடவுள் சித்தப்படி நடைபெறுகிறது. கடவுள் சித்தத்திற்கு நம்மையே ஒப்புக்கொடுப்போம். மழை, புயல், காற்று, சூரியஒளி, பூமி அதிர்வு போன்ற இயற்கை நிகழ்வுகள் ஆண்டவர் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. மனித மரணமும் ஆண்டவர் ஆளுகையில் உள்ளது. இயற்கையையும் மனித மரணத்தையும் எந்த மனிதனாலும் அடக்கி நிறுத்த முடியாது.

### கடவுள் அன்பும், மனித அன்பும்

ஜப்பான் நாட்டில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு, வயதான முதியவர்களை காட்டிற்குள் கொண்டு விட்டுவிடுவார்கள். காட்டில் உணவின்றி காற்று மழையால் இறந்து விடுவார்கள். ஒருவர் தனது வயதான தாயை, காட்டில் விட்டுவிட அழைத்துச் சென்றார். வயதான தாயானவர் போகும் வழியில், இலை தழைகளை போட்டுக் கொண்டு வந்தார். மகன் தாயிடம், வரும் வழியில் இலை தழைகளை ஏன் போட்டு வந்தீர்கள்? என்று கேட்டார். தாய் மகனிடம், நீ தனியாக வீட்டிற்கு திரும்பிப் போக வழி தெரிய வேண்டும் என்பதற்காகவே காட்டு இலைகளைப் போட்டு, உனக்கு வழிகாட்டினேன் என்றார். தாயின் மேலான அன்பு மகனுடைய உள்ளத்தைத் தொட்டது. தான் செய்வது கடவுளுக்கு எதிரான செயல் என்பதை உணர்ந்தார். தனது தாயை காட்டில் விடாமல் திரும்ப வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தாயன்பை உணர்ந்தார். முதியோர்களை காட்டில் அனாதையாக விடக்கூடாது என்பதை சகலருக்கும் அறிவித்தார். அது கடவுளுக்கு எதிரான குற்றம் என்றும் கூறினார்; கடவுள் அன்பையும், அருளையும், ஆசியையும் நாம் நிரம்பப் பெற்று மகிழ்வோமாக! எல்லோருக்கும் நன்மை செய்து வாழ்வோமாக!

## மனிதனின் பாவச் செயலிலிருந்து மனம் திரும்ப வேண்டும்

இந்தியத் திருநாட்டில், 1828 ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங் பிரபு ஆட்சி செய்தார். இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலம்! உடன் கட்டை ஏறுதல், பெண்குழந்தைகளை கொல்லுதல், நரபலி கொடுப்பது போன்ற கடவுளுக்கு விரோதமான செயல்கள் நடந்தன. இந்தக் கொடிய பாவ பழக்கங்களை ஒழிக்க, பெண்டிங் பிரபு, இராஜராம் மோகன்ராய் துணையுடன் சட்டம் இயற்றினார். இதற்கு எதிர்ப்பு ஏற்பட்ட போதிலும் சட்டமாக்கினார்கள். நாம் பரலோக வாழ்விற்கு செல்ல, பாவத்தை விலக்கி, பரிசுத்தமாக வாழ வேண்டும். பிறரும் பரிசுத்தமாக வாழ்வதற்கும் பாவ பழக்கங்களை விட்டு விழகுவதற்கும் நம்மால் இயன்ற முயற்சிகள் செய்ய வேண்டும். உலகில் பாவ வாழ்வை வாழ்பவர்கள், சாத்தான் வழியில் வாழ்கிறார்கள், சாத்தான், எரிநரகில் புதைக்க சதித்திட்டமிடுகிறான். நாம் ஆண்டவரை நோக்கியும், மோட்சத்தை நோக்கியும் மனம் திரும்பி வாழ்வோமாக! ஒரு சிறிய விதை, பெரிய மரத்தை உருவாக்குவது போன்று நமது வாழ்வும் அமைய வேண்டும். உலக கவலை, கண்ணீர் மறைந்து போகும்! மோட்ச வாழ்வுக்கு ஆண்டவர் நம்மை அழைக்கிறார். அன்பின் புது வாழ்வை, இயேசுவிடம் பெற்று மகிழ்வோமாக! தந்தை மகன் தூய ஆவியானவர், மாதா, சூசையப்பர், இராயப்பர், சின்னப்பர், அந்தோணியார், சவேரியார், சகல புனிதர்களும் நம்மை விண்ணக வாழ்வில் வாழ்விக்க மன்றாடுவோமாக!

## அக்னிக் கடலாகிய எரிநரகம்

எரிநரகம் என்பது, கடவுளை ஒருபோதும் காணாமல் அணையாத நெருப்பில் சாத்தான்களுடன், நித்திய காலம் வேகிற, வேதனை நிறைந்த இடம். சாவான பாவத்துடன் இறப்பவர்கள், எரிநரகிற்கு செல்வார்கள். நரக வேதனை நித்திய காலம் நீடித்திருக்கும். சபிக்கப்பட்டவர்களுக்குரிய தண்டனை மிகவும் பயங்கரமாயிருக்கும். நாம் உலகில் வாழும் காலத்தில், நரக வேதனையை சிந்தித்து, சாவான பாவத்தை விட்டுவிலகி பரிசுத்த வழியில் நடக்க வேண்டும். எரிநரக தீமைகளை உணர்ந்தால்

பாவம் செய்ய மாட்டோம். பாவம் செய்வதை விட சாவது மேல் என்ற புனித டொமினிக் சாவியோவின் கொள்கையை கடைபிடித்து வாழ வேண்டும். சாவான பாவத்துடன், மரித்தால் நித்திய அக்னியில் பிசாசுகளுடன் வேக வேண்டும். மனம் திரும்பாமல், பாவ வழியில் வாழக்கூடாது. கடவுளையும், மோட்ச வாழ்வையும் நோக்கி, நாம் மனம்

திரும்ப வேண்டும். மனிதர்கள் நரகத்தில் விழுவதற்கு முக்கிய காரணமாயிருப்பது தலையான ஏழு பாவங்களாகும்.

அகங்காரம், கோபம், விபச்சாரம், ஈயாமை, உணவுப்பிரியம், பொறாமை, சோம்பல். நரகத்திலோ, அவர்களைத் தின்னும் புழு சாகாது நெருப்பும் அவியாது!...... - மாற்கு 9:48

## இயேசு ஆண்டவர் தரும் இளைப்பாறுதல்

பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் கனிவும், மனத்தாழ்மையும் உடையவர். ஆகவே, என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் உள்ளத்திற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம் என் நுகம் அழுத்தாது; என் சுமை எளிதாயுள்ளது என்று இயேசு கூறினார்.

மத்தேயு 11:28-30

நாம் உலகில் வாழும் காலத்தில் துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், நெருக்கடிகள், வியாதிகள், அவமானங்கள், கண்ணீர், கவலைகள் நம்மை வாட்டி வதைக்கின்றன.இதற்கு அடிப்படைக் காரணம் நமது பாவங்களாகும், நம்மை பெருஞ்சுமையாக பாவங்கள் அழுத்துகின்றன. எரிநரகம் நோக்கி வழி நடத்துகின்றன.

இயேசு ஆண்டவர் நமது சுமையாகிய பாவங்களை மன்னித்து, பரலோக வாழ்வுக்கு நம்மை அழைத்துச்செல்கிறார். ஆண்டவர் நமது பாவங்களை மன்னிக்கும் போது, நம்மிடமுள்ள எல்லா சுமைகளும் அகன்று விடுகின்றன. உலகிலேயே பரலோக வாழ்வு மகிழ்ச்சியுடன் வாழ்கிறோம்.

நாம் ஆண்டவர் மேல் நம்பிக்கை கொண்டு வாழ வேண்டும். இயேசு ஆண்டவர் மனிதர் அனைவரையும் அன்புடன் பரலோகத்திற்கு அழைக்கிறார். நம்மையும் நம் பாவச் சுமைகளையும் ஆண்டவர் சிலுவையில் சுமந்து கொண்டார் என்பதை உணர முடிகிறது.

இயேசு ஆண்டவர் வாழ்வை நாம் தியானித்து ஆண்டவர் சுமையை ஏற்றுக்கொண்டு, நாம் வாழ கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆண்டவர் சுமை நமக்கு எளிதானது. ஆண்டவர் சுமை நமக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும். நமக்குப் பரலோக வாழ்வைக் கொடுக்கும்.

இயேசு ஆண்டவர் நமக்குத் துணையாளராக தமது பரிசுத்த ஆவியை அனுப்புகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மை மோட்சம் நோக்கி வழிநடத்துகிறார். நாம் அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். நம்மையும் நம் சுமைகளையும் இயேசு ஆண்டவர் சுமந்து கொள்கிறார் என்பது நமக்குக் கிடைத்த மேலான பாக்கியமாகும்.

இயேசுவின் சுமை நமக்கு அன்பு, சமாதானம், மகிழ்ச்சியைக் கொடுக்கும். நமக்குப் பரலோக வாழ்வையும் ஆண்டவர் வழங்குகிறார். பரலோகம் நமது தாய் வீடு.

## **புனித சவேரியார்,** கோவா



இறந்து 500 ஆண்டுகளுக்குப் பிறகும்
உடல் அழியாமல் கோவாவில் இருக்கிறார்.

## இயேசு ஆண்டவருக்கு ஏற்புடைய செயல்கள்

கடவுள் இயல்பை நாம் அணிந்து கொள்ள வேண்டும்.

உங்களுக்குத் தீமை செய்வோர்க்கும் நன்மை செய்யுங்கள்.

வசை மொழி கூறுவோருக்கும் ஆசிமொழி கூறுங்கள்.

பிறருக்கு அன்பு செய்யுங்கள். நன்மை செய்யுங்கள்.

எவருக்கும் தீமை செய்யவே கூடாது.

நம் வாழ்வில் உண்மை, நேர்மையை கடைபிடித்து வாழ வேண்டும்.

குழந்தைப் பருவத்தில் பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

பெற்றோரின் முதுமையில் அன்புடன் அவர்களைப் பராமரிக்க வேண்டும்.

ஞாயிறு திருப்பலிக்கு தவறாமல் செல்லவும்.

நாள்தோறும் செபமாலை செய்யவும்.

இயேசு ஆண்டவர் வார்த்தைப்படி வாழ வேண்டும்.

நமது ஆன்மா வலுவடையும்.

பரலோக வாழ்வு பெற ஏழைகளுக்கு உணவு, உடை கொடுக்கவும். பிறருக்கு உதவிகளும் செய்ய வேண்டும்.

மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள். மாற்கு 1:15

தூய ஆவியில் நிறைவு பெறுங்கள். எபேசியர் 5:18

உலகெங்கும் நற்செய்தியைப் பறை சாற்றுங்கள். மாற்கு 16 : 15

எல்லா மனிதரையும் சீடராக்குங்கள். அவர்கள் என் கட்டளையை கடைப்பிடிக்கச் செய்யுங்கள். மத்தேயு 28: 19 – 20

இறை வார்த்தையின் படி வாழ வேண்டும்.

இறை வேண்டல் செய்யவும். மனிதரின் புகழ்ச்சியை விரும்பக் கூடாது.

பிறர் குற்றவாளிகள் என்று தீர்ப்பிடக் கூடாது.

விண்ணுலகில் செல்வம் சேர்த்து வையுங்கள். மண்ணுலகில் செல்வம் சேர்த்து வைக்க வேண்டாம்.

பகைவரையும் அன்பு செய்யுங்கள்; நன்மை செய்யுங்கள்.

அகங்காரம் கொள்ளக் கூடாது. பழிவாங்கக் கூடாது. சினம் கொள்ளாதீர்கள். ஆணையிட வேண்டாம்.

இச்சையுடன் நோக்காதீர்கள்.

கத்தோலிக்கத் திருச்சபையை இயேசு ஆண்டவர் உண்டாக்கினார்.

முதல் பாப்பரசராக தலைமைச் சீடர் இராயப்பராகிய பேதுருவை இயேசு ஆண்டவர் நியமித்தார். மத்தேயு 16:18-19

முதல் திருத்தந்தை பேதுருவை தலைகீழாகச் சிலுவையில் அடித்துக் கொன்றார்கள்.

நமக்கு எதிராகக் குற்றம் செய்தவர்களை நாம் மன்னிக்கும் போது கடவுள் நமது குற்றங்களை மன்னிக்கிறார்.

சாவான பாவம் நம்மை கடவுளிடமிருந்து பிரிக்கிறது. சாவான பாவம் செய்தால் மரணம் ஏற்படுகிறது. ஆன்மா எரிநரகில் புதைகிறது. நமது மரணத்திற்கு முதன்மைக் காரணம் சாவான பாவமாகும்.

இயேசு ஆண்டவர் இயல்பை அணிந்து உலகில் வாழ்ந்தால் நாம் மோட்சம் செல்வோம்.

மோட்சத்தில் நாம் புனித அந்தோணியார், சவேரியாரை பார்க்கப் போகிறோம். பேசப் போகிறோம்.

தேவ நற்கருணை உட்கொள்ளும் நாம் கடவுளைச் சுமக்கும் பாக்கியம் பெறுகிறோம். கடவுளை நமது வீட்டிற்குச் சுமந்து செல்கிறோம். இயேசு ஆண்டவர் நம் அனைவரையும் தமது தெய்வீகத் திருக்கரங்களால் பரலோக நலன்களாலும் சகல நலன்களாலும் ஆசிர்வதிக்கிறார். நாம் பரலோகத்தில் வாழ இயேசு ஆண்டவர் அழைத்துச் செல்கிறார்.

# நமது தமிழகத்தை கடவுள் மிகுந்த அன்பு செய்கிறார்

தஞ்சாவூர் அருகிலுள்ள வேளாங்கண்ணியில் நமது தேவஅன்னை குழந்தை இயேசுவுடன் பலமுறை பலருக்கும் திருக்காட்சி கொடுத்துள்ளார்கள். மக்களிடம் பேசினார்கள். பல புதுமைகள் செய்தார்கள்.

இயேசு ஆண்டவர் தமது பன்னிரண்டு சீடர்களில் ஒருவரான புனித தோமையாரை சென்னைக்கு கி.பி. 51-ல் அனுப்பினார். சென்னையிலுள்ள மெரினா கடற்கரையில் புனித தோமையார் கல்லறைக் கோவில் உள்ளது. இயேசு ஆண்டவர் நம்மை மோட்சத்திற்கு அழைக்கிறார்.

புனித சவேரியார் 500 ஆண்டுகளுக்கு முன்பு 1542ல் தமிழகத்திற்கு வருகை தந்தார். தமிழக மக்களுக்கு நற்செய்தியை அறிவித்தார். தமிழக மக்களுக்கு திருமுழுக்குக் கொடுத்தார். புனித சவேரியார் இறந்த பிறகும், 500 ஆண்டுகளாக திருஉடல் அழியாமல் இருக்கிறார். மும்பை அருகிலுள்ள கோவா ஆலயத்தில் உடல் அழியாமல் இருப்பதை நாங்கள் நேரில் கண்டு தரிசித்தோம்.

தஞ்சாவூர் அருகிலுள்ள ஏலாக்குரிச்சியில் பெஸ்கி என்ற வீரமாமுனிவர் என்ற குருவானவர் பல புதுமைகள் செய்து தமிழ் மக்களை கடவுள் வழியில் வழி நடத்தினார்.

தேவகோட்டை அருகிலுள்ள ஓரியூரில் அருளானந்தர் என்னும் குருவானவர் இயேசு ஆண்டவர் போதனைகளை போதித்து வந்தார். ஆண்டவர் போதனையை போதித்ததற்காக அவரை வெட்டிக் கொன்றார்கள். இவரது இரத்தம் சிந்திய மண் இன்றும் சிவந்த மண்ணாக காட்சியளிக்கிறது.

## பீற்றர் பரதேசியார்

பரதேசி பீற்றர் M.A., L.T. அவர்கள் பாளையங்கோட்டை, புனித சவேரியார் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தார். இயேசு ஆண்டவருடைய போதனைகளைக் கண்டு, உலகை வெறுத்தார். பட்டம் பதவிகளைத் துறந்தார். இவர் சென்ற இடங்களில் தெருத்தெருவாகப் பிச்சை எடுத்து, உணவு உண்டார். வட இந்தியாவிலும் போய் வந்திருக்கிறார்.

நான் இவரை பலமுறை சந்தித்து பேசியிருக்கிறேன். இவர் மரணம் வரை பிச்சை எடுத்துத் தான் சாப்பிட்டு வந்தார்.

இவருக்கு புனிதர் பட்டம் கொடுக்க நமது திருத்தந்தையவர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

பரதேசி பீற்றர் கடவுளுடன் இணைந்து வாழ்ந்தார். சென்ற இடங்களில் எல்லாம் நற்செய்தியைப் போதித்து வந்தார். சகல புனிதர்களுடன் பரலோகத்தில் வாழ்கிறார்.

1958ஆம் ஆண்டு மரணம் அடைந்தார். பாளைங்கோட்டையில் இவரது கல்லறை உள்ளது.

**பரலோகமே நமது தாய்நாடு!**
**பரலோகமே நமது நிரந்தரக்குடியிருப்பு!**

**We are the Citizens of Heaven**

பிலிப்பியர் 3:20

# மூவொரு இறைவன்

